# உதயன்

34 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 072 வள்ளுவர் ஆண்டு 2044 தை 24 புதன்கிழமை (06/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily





ராஜஸ்தான் அணிக்கு அபராதம் 19





திருப்பதியில் மஹிந்த; பாதுகாப்பு பலம்! 08





தீ விபத்து; 500 பேர் வீடின்றி தவிப்பு 09





9 நாடுகளே இலங்கைக்கு ஆதரவு 11


# இன்றைய அவசர தேவை அரசியல் தீர்வே

## வலியுறுத்துகிறார் பிரிட்டன் அமைச்சர்

**''நல்லாட்சி, சட்டம், ஒழுங்கு, மனித உரிமைகள் என்ற பொதுநலவாய அமைப்பின் விதந்துரைகள் குறித்து இலங்கை கூடுதல் கவனஞ்செலுத்தவேண்டும்.''**

லண்டன், பெப்.6

வீதி அபிவிருத்திப் பணிகள், முகாம்களிலிருந்து மக்கள் வீடுகளுக்குத் திரும்புதல் போன்ற செயற்பாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அவை பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வுகள் அல்ல. அவற்றைவிட அரசியல் தீர்வைக் காண்பது தான் அடிப்படைத் தேவை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரிட்டனின் வெளியுறவு மற்றும் பொது நலவாய அமைப்புக்கான அமைச்சர் எலியார்ட் பர்ட்.

இணையத்தளத்தில் தனது ட்விட்டர் பக்கத்தில் நேற்று கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், சித்திரவதைகள் உட்பட மனித உரிமை மீறல்களை பிரிட்டன் கண்காணிப்


பார்க்க பக்கம் 04


# தமிழரின் சுயாட்சியை நிராகரித்தார் மஹிந்த

## சுதந்திர தின உரை குறித்து 'நியூயோர்க் ரைம்ஸ்'

நியூயோர்க்,பெப்ரவரி 6

இலங்கைத் தமிழர்களின் சுயாட்சி உரிமையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்றாக நிராகரித்திருக்கிறார். தமிழருக்கு சுயாட்சி கிடைப்பதை அவர் அடியோடு விரும்பவில்லை. நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற இலங்கையின் 65ஆவது சுதந்திர தின நிகழ்வில் அவர் ஆற்றிய உரை இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது அமெரிக்காவின் பிரபல ஆங்கில நாளிதழான 'நியூயோர்க் ரைம்ஸ்'. ஜனாதிபதி மஹிந்தவின் சுதந்திர தின உரையை கடுமையாக விமர்சித்துள்ள அந்த நாளேடு அவரது உரையின் முக்கிய பகுதிகள் குறித்து விளக்கத்தையும் அளித்துள்ளது.

இலங்கையில்வாழும் அனைத்து மக்களுக்கும் சமமான உரிமை உள்ளது எனவும், இன மற்றும் மொழி ரீதியான எந்தப் பிரிவினைகளுக்கும் இந்த நாட்டில் இடமில்லை என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது சுதந்திர தின உரையில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், இறைமையுள்ள நாடொன்றின் உள்நாட்டு விவகாரங்க


பார்க்க பக்கம் 04





**''இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சமமான உரிமை உள்ளது எனவும், இன மற்றும் மொழிரீதியான எந்தப் பிரிவினைகளுக்கும் இந்த நாட்டில் இடமில்லை என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.''**

## உலகின் மிகப் பெரிய கப்பல் இலங்கைக்கு



கொழும்பு, பெப் 6

உலகில் மிகப் பெரிய பயணிகள் கப்பல்களில் ஒன்றான 'குயின்ஸ் மேரி' கப்பல் கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

இலங்கைக்கு மிகப் பெரிய பயணிகள் கப்பலொன்று வருவது -இதுவே முதற் தடவையாகும். இதன் நீளம் 500 மீற்றர்களென துறை முகங்கள் நெடுஞ்சாலை அமைச்சு தெரிவித்தது. இந்தக் கப் பலில் 3500 பயணிகளும் 3000 கப்பல் சிப்பந்திகளும் வந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இத்தாலியில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த குயின்ஸ் மேரி கப்பல் இந்தியாவின் கொச்சின் துறை முகத்தில் இருந்து இலங்கை வந்துள்ளது.

சமாதானச் சூழல் நாட்டில் ஏற்பட்டுள்ளதையடுத்து பெரிய பயணிகள் கப்பல்கள் இலங்கைக்கு வர ஆரம்பித்துள்ளதாகவும், எதிர்காலத்தில் மேலும் கப்பல்கள் இங்கு வரும் எனவும் துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் திட்ட அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தன தெரிவித்தார். 'குயின்ஸ் மேரி' இலங்கையில் இருந்து சிங்கப்பூருக்கு பயணிக்க உள்ளது. (த)

# மன்மோகன் - பீரிஸ் பேசியது என்ன? நாடாளுமன்றில் பகிரங்கப்படுத்துக

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, பெப் 6

இந்திய விஜயம் மேற்கொண்ட வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அந்நாட்டுப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குடன் என்ன பேச்சு நடத்தினார், என்னென்ன இணக்கப்பாடுகளைச் செய்துகொண்டார் என்பதை அரசு நாடாளு மன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியது.

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரச கூட்டுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டுடன் கூடிய சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவந்து, அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வெளியுறவுத்


பார்க்க பக்கம் 04


## ஆணின் சடலம் வவுனியாவில் நேற்று மீட்பு

வவுனியா, பெப் 6

ஆணொருவரின் சடலத்தை வவுனியா பொலிஸார் நேற்று செவ்வாய்க் கிழமை காலை மீட்டுள்ளனர்.

வவுனியா, செல்வாநகர் செக்கடிப்புலவு பகுதியைச் சேர்ந்த வடிவேல் செல்வகுமார் (வயது 51) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியாவிலுள்ள சாளம்பைக்குளம் வயல் வெளியிலிருந்தே இந்தச் சடலத்தை மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த)

# இலங்கைத் தமிழர் குறித்து இந்தியா கவனம் செலுத்தும்

## கருணாநிதிக்கு சோனியா கடிதம்

புதுடில்லி,பெப் 6

இலங்கை தமிழ் மக்களின் நிலை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித்தின் கவனத்துக்கு கொண்டு செல்வேன் எனக் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்கள் மீதான கொடுமைகளைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு தலையிட வேண்டும் எனக் கோரி தி.மு.க. வின் தலைவர் கருணாநிதி கடந்த மாதம் 19ஆம் திகதி சோனியா காந்திக்கு கடிதம்


பார்க்க பக்கம் 04


## மு.காவை விட்டு வெளியேறவே மாட்டேன் –பசீர்

கொழும்பு,பெப் 6

எத்தருணத்திலும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறவோ, வேறு கட்சிகளில் இணையவோ மாட்டேன். நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டால் அரசியலைத் துறந்து வீட்டுக்குத் தான் போவேன்.

உற்பத்தி வள ஊக்குவிப்பு


பார்க்க பக்கம் 04


# அமெரிக்காவின் அழைப்பை நிராகரித்ததா இலங்கை?

## ஆப்கன் அமைதிப் படை விவகாரத்தில் முரண்பாடான தகவல்கள்

கொழும்பு,பெப் 6

இலங்கைப் படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைக்குமாறு அமெரிக்கா விடுத்துள்ளதாகக் கூறப்படும் கோரிக்கை தொடர்பில் அரச தகவல் திணைக்களமும், ஜனாதிபதியின் பேச்சாளரும் எதிரும் புதிருமாகத் தகவல்களை வெளியிட்டதால் இவ்விவகாரம் குறித்து பெரும் சர்ச்சை மூண்டுள்ளது.

இலங்கைப் படைகளை


பார்க்க பக்கம் 04

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பது அவசியம்

## வலியுறுத்துகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், பெப்.6

பருவகால மழையை அடுத்து யாழ். குடாநாடு உட்பட நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது. இதனால் டெங்கு பரவலைத் தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வரை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தவறாமல் இதனை அனைவரும் முன்னெடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதேச செயலாளர் பிரதேசமட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிரதேசத்திலுள்ள நிறுவனங்களையும், கிராமமட்ட அமைப்புகளையும் இணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் உரிய நடவடிக்கைகளைத் திட்டமிடவேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி இதற்கு ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட வேண்டும்.

கிராமமட்ட டெங்குத் தடுப்பு செயலணிக் குழுக் கூட்டத்தை கிராம அலுவலர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராமமட்ட அமைப்புக்களை நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்த வேண்டும். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இதற்கு ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படும்.

குறித்த நாளில் குறித்த வலயத்துக்குட்பட்ட சகல நிறுவனங்கள் வைத்தியசாலைகள், பொது இடங்கள், வணிக ஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், பராமரிப்பற்ற காணிகள் அனைத்தும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளில் தற்போது இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்று வருவதனால் இந்த வாரத்தில் வசதியான ஒரு நாளைத் தெரிவு செய்து மாணவர்களின் உதவியுடன் காலை வேளை இரண்டு மணி நேரம் சிரமதானம் மூலமாக வளாகம் துப்புரவு செய்தல் வேண்டும்.

இவற்றை மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்குவதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்ட தாரிப் பயிலுநர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமூக அமைப்புகளின் தொண்டர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபட வேண்டும்.

ஒவ்வொரு நாளும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள், அதன்பங்கு பற்றிய உத்தியோகத்தரின் விவரம் அனைத்தையும் சுகாதார வைத்திய அதிகாரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அரச அதிபர், மாகாண, மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் - என்று கூறியுள்ளார்.

(த-4)

# படையினரின் பஸ் மோதி பயணிகள் பஸ் சேதம்

## யாழ்.கஸ்தூரியார் வீதியில்



யாழ்ப்பாணம்,பெப்.06

யாழ்.நகரில் படையினரின் பஸ், தனியார் பஸ்ஸை மோதுண்டதால் தனியார் பஸ்ஸின் பின் கண்ணாடி நொறுங்கியது.

விபத்து இடம் பெற்று சுமார் 25 நிமிடங்கள் வரை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவில்லை. இதனால் விபத்து இடம் பெற்ற கஸ்தூரியார் வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டமையால் பயணிகள் பெரும் இடையூறுகளை எதிர் கொண்டனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சேரத் தாமதமாகியதால் இராணுவச்சிப்பாய் ஒருவர் அந்த வழியே வந்த வாகனங்களை மாற்று வழியூடாக அனுப்பிக் கொண்டிருந்தார். பின்னர் பொலிஸார் வந்து விபத்துக்குள்ளான வாகனத்தை அகற்றுமாறு கூறினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிச் சென்ற தனியார் பஸ் கஸ்தூரியார் வீதியூடாக புறப்பட்டுச் சென்றது. அந்த வீதியால் பயணித்த படையினரின் பஸ், முன்னால் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸை முந்திச்செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டது. இதனால் தனியார் பஸ்ஸின் பின் கண்ணாடி நொறுங்கியது.

இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (த-4)

# டெங்கு ஒழிப்பை புறக்கணிப்பர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.06

நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ள நிலையில் அதற்கு பிரதான பங்கு வகிக்க வேண்டிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அதில் பங்கெடுக்கப் போவதில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

சில கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி கடந்த முதலாம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்த நிலையில் இன்று தொடக்கம் ஒரு வார காலத்துக்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்களை முன்னெடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டபோது, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஒன்றியத்தினருக்கும் சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்குமிடையே பேச்சு நடைபெறுகிறது. அதன் பின்னரே முடிவு தெரியவரும் என்றார்.

(த-4)

# ரூ. 12 மில்லியன் வெளிநாட்டு பணத்துடன் வர்த்தகர் கைது

கொழும்பு,பெப் 6

சுமார் 12 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் சிங்கப்பூர் செல்வதற்கு தயாராக இருந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் பயணப் பையில் இருந்து அமெரிக்க டொலர், குவைத் டினார், சவுதி றியால் உள்ளிட்ட வெளிநாட்டு நாணயங்கள் மீட்கப்பட்டதாகக் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பல தடவைகள் சிங்கப்பூருக்கு சென்று வந்துள்ளதாகவும் சிங்கபூருக்கு நேற்று முன்தினம் இரவு செல்வதற்கு முயற்சித்த வேளையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(த)

# மாகாணசபை முறை குறித்த அரசின் நிலைப்பாடு என்ன?

## வெளிப்படுத்தக் கோருகிறார் ஐ.தே.க. ராம்

கொழும்பு, பெப். 6

சிறுபான்மை மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அத்திபாரமாக அமையும் மாகாணசபை முறைமையை அரசு பலப்படுத்தப்போகிறதா? இல்லாதொழிக்கப் போகிறதா? இதுதொடர்பில் தனது எதிர்கால நடவடிக்கை என்னவென்பதை அரசு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மூன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், சிறுபான்மை மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அரசு பெற்றுக் கொடுக்கவில்லை. எனவே, அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்ற அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஐ.தே.கவின் மேல் மாகாணசபை உறுப்பினர் சி.வை.பி.ராம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், அந்த மாகாணசபை முறைமையை அரசு எதிர்க்கிறது.

நாட்டில் அபிவிருத்திகளை முன்னெடுத்து இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்திவரும் மாகாணசபைகளின் அதிகாரங்களையும் அதன் உரிமைகளையும் அரசு பறித்துள்ளது. மாகாணசபைகளைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு கூறுமாயின், ஏன் அதன் அதிகாரங்களைப் பறிக்கிறது? அது மட்டுமன்றி, மாகாணசபைகளினூடாக ஒன்றும் செய்யமுடியாத அளவுக்கு அதை அரசு மாற்றியுள்ளது. - என்றார் சி.வை.பி.ராம். (த)

# சிக்கியது கசிப்புக் குகை

## ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம்

பளை, பெப்.6

இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்புக் குகை பளைப் பொலிஸாரால் சுற்றி வளைத்துப் பிடிக்கப்பட்டது. கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களும் உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவு கசிப்பும் பிடிக்கப்பட்டதுடன் உற்பத்தியில் ஈடுபட்டவரும் கைது செய்யப்பட்டார்.

பொது மக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டி.ஏ. ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் உதவி பொலிஸ் பரிசோதகர் ரணசிங்க தலைமையில் சென்று பொலிஸ் படையினர் கசிப்பு உற்பத்தி செய்யும் காட்டுப் பகுதியைச் சுற்றி வளைத்து பிடித்தனர்.

கசிப்பு உற்பத்தியாளரையும் உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (த-9)

# பிரதேச சபைகளின் 'நெல்சிப்' உள்ளூராட்சி திணைக்களத்திடம்

## ஆளுநரின் பணிப்பை அடுத்து

யாழ்ப்பாணம்,பெப்,06

மக்கள் பங்களிப்புடன் பிரதேச சபைகளினால் முன்னெடுக்க வேண்டிய 'நெல்சிப்' வேலைத்திட்டங்கள், வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நேரடியாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ்.மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 14 சபைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்டவையாக இருக்கின்றன. இந்தப் பிரதேச சபைகளில், மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தி வேலைகள் இனங்காணப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.

மக்களால் இனங்காணப்படும் வேலைத்திட்டங்கள் பிரதேச சபைகளின் கூட்டத் தொடரில் அனுமதி பெறப்பட்டுப் பின்னர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெறப்படுகிறது. அதன் பின்னரே அது நடைமுறைப்படுத்தப்படும்.

கடந்த ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளில், மக்கள் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் பல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவரினால் அங்கீகரிக்கப்படவில்லை.

அந்த நிலையில் 2013 ஆம் ஆண்டுக்குரிய 'நெல்சிப்' வேலைத்திட்டங்களைப் பிரதேச சபைகள் முன்னெடுக்காதவாறு, வடமாகாண ஆளுநரின் பணிப்பிற்கமைய சுற்றிக்கை ஒன்று அனுப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரால், மக்கள் பங்களிப்பின்றி வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதில்லை என்று ஆளும் கட்சி அரசியல்வாதிகள் கூறி வருகின்றனர். ஆனால் இப்போது நாங்கள் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை அவர்கள் குழப்பியடிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர். (த-5)

# திடீர் மழையினால் வன்னியில் விவசாயத்துக்கு பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, பெப்.6

வன்னியில் நேற்றுமுன்தினம் திடீரென ஆரம்பித்த கடும் மழையினால் அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி முற்றாக அழியும் அபாய நிலை ஏற்பட்டடுள்ளது.

வன்னியின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.30 மணி முதல் நேற்று அதிகாலை வரை பெய்த மழையினால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நெல், நிலக்கடலை, உழுந்து என்பன தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் நிலையில் கடும் மழை காரணமாக அதிகளவான நெல்வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் சேதமடைந்துமுள்ளன.

இதனைவிட அறுவடை செய்த நெல்லைப் பதப்படுத்த முடியாமலும் அதனைச் சந்தைப்படுத்த முடியாமலும் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, பன்னங்கண்டி, வட்டக்கச்சி போன்ற இடங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல் வீடுகளுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் மழையில் நனைந்து சேதமடைந்துள்ளது.

இதேபோன்று விசுவமடு, தேராவில், புதுக்குடியிருப்பு, கொக்கிளாய் ஆகிய இடங்களில் அறுவடைக்குத் தயாரான நிலக்கடலை, உழுந்து என்பனவும் தற்போது பெய்த மழையினால் அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வரும் காலபோக நெற்செய்கையின் போது 68 ஆயிரம் ஏக்கர் வரையில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே கடந்த மாதம் பெய்த மழையினால் 11 ஆயிரத்து 600 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன. தற்போது பத்து வீதமான விவசாயிகள் நெல்லை அறுவடை செய்துள்ள போதிலும் ஏனைய விவசாயிகள் நெல்லை அறுவடை செய்ய முடியாது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட நிலையில் திடீரெனப் பெய்த மழையினால் அவர்களின் நிலை மிகவும் மோசமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-கு-6)

# வடமராட்சி கிழக்கு மீனவர்களின் படகுகளை கையளிக்க ஏற்பாடு

வடமராட்சி,பெப்.6

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீனவர்களால் கைவிடப்பட்டு படையினரின் பாதுகாப்பில் உள்ள மீன்பிடிப்படகுகளை மீனவர்களிடம் ஒப்படைக்க படைத்தரப்பினரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ நடவடிக்கை காரணமாக 1996 ஆம் ஆண்டில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த நாகர்கோவில் தொடக்கம் சுண்டிக்குளம் பகுதி வரையான மீனவர்கள் மீன்பிடிப்படகுகளை கரையோரங்களில் கைவிட்டுவிட்டு வன்னிக்கு இடம்பெயர்ந்தார்கள்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வன்னியிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வந்த அவர்கள் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த பின்னர் 2011 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்தனர்.

இடம்பெயர்ந்த போது விட்டுச்சென்ற படகுகள் படையினரின் பாதுகாப்பில் இருப்பதால் அவற்றைத் தந்துதவுமாறு இந்தப் பிரதேச மீனவர்கள் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கம் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து படகுகளை அடையாளம் காண்பதற்கான ஏற்பாடுகளைப் படையினர் தற்போது செய்துள்ளனர். பூனைத்தொடுவாய், சுண்டிக்குளம் பகுதிகளில் படையினரின் கட்டுப்பாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகுகளை அடையாளம் காண கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மீனவர்களை அழைத்து படகுகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. சில தினங்களுக்கு முன்னர் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு படையினர் பொலிஸார் சகிதம் கிராமசேவையாளர்களுடன் அழைத்துச் செல்லப்பட்டு கட்டைக்காடுப் பகுதி மீனவர்களின் 14 படகுகளும் வெற்றிலைக்கேணிப் பகுதி மீனவர்களின் 6 படகுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே போல் ஏனைய மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களும் தமக்குச் சொந்தமான படகுகளை அடையாளம் காட்டிய பின்னர் மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளை படையினர் கையளிப்பார்கள் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை வடமராட்சி வடக்கு மீனவர்களால் கைவிடப்பட்ட படகுகளை பருத்தித்துறை கடற்படையினர் சில வருடங்களுக்கு முன்னர் வழங்கியிருந்தனர். (த-8)

# வெட்டி வைத்த நெல்லை அள்ளிச் சென்ற வெள்ளம்

## வெங்காயச் செய்கையும் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

*யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு முதல் கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பெரும்போக நெற்செய்கை, வெங்காயச் செய்கை என்பன பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த நெற்கதிர்கள், அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்கள் என்பன இந்த மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.*

அத்துடன் சில இடங்களில் வெங்காயச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணிமுதல் நேற்றுக் காலை வரை குடாநாட்டில் கடும் மழை பெய்தது.

வயல்களில் ஏற்கனவே அறுவடை செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்கள் இந்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன் அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த நெற்கதிர்கள் மழையில் நனைந்து சாய்ந்து போயுள்ளன.

இதனால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

குடாநாட்டில் இதுவரை 30 வீதமான நெல் அறுவடைப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன. பல விவசாயிகள் தமது வயல்களில் அறுவடை செய்த நெல்லை உலரவிட்டிருந்தனர். நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக அவை நனைந்து நாசமாகியுள்ளன.

அத்துடன் வெங்காயச் செய்கையும் சிறிதளவில் பாதிக்கப்பட்டுள்ளது- என்றார்.

ஏற்கனவே நெல் விதைப்பை மேற்கொண்ட வேளையிலும் கொட்டித் தீர்த்த மழை காரணமாகப் பெரும் பயிர் அழிவு ஏற்பட்டது.

இப்போது அறுவடை நேரத்திலும் மழை கொட்டியதால் தாம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-17)

# சாவகச்சேரி இந்துவின் நிறுவுநர் தின நிகழ்வு



தென்மராட்சி,பெப்.6

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளையின் நினைவுதின நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் சர்வதேச இணைப்பாளர் ச.சத்தியமூர்த்தி,வரணி ம.வி. பழைய மாணவர் சங்க கனடாக் கிளை தலைவர் க.சந்திரசேகரமுதலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கல்லூரி வளாகத்தில் ஆசிரியர் செ.செல்வரமணனால் உருவாக்கப்பட்ட ஆறு அடி உயர நிறுவுநர் உருவச்சிலையை முதன்மை விருந்தினர் திரை நீக்கம் செய்து உருவச்சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் உருவச்சிலையை உருவாக்கிய ஆசிரியர் செ. செல்வரமணனுக்கு முதன்மை விருந்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நிறுவுநர் தின உரையை யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் எஸ்.எஸ். உதயகுமார் நிகழ்த்தினார்.

கல்லூரியின் 'தாமோதரன்' நூலினை முதன்மை விருந்தினர் வெளியிட கல்லூரி பழைய மாணவன் ச. சிவலிங்கம் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். நூலின் வெளியீட்டுரையை யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் க.தர்மராசா நிகழ்த்தினார். (த-9)

# ஜெய்பூர் நிறுவனத்துக்கு உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.06

'மோட்டி வேஷன்' நிறுவனத்தால் யாழ்.ஜெயப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாற்று வலுவுடையோருக்கு நடமாடும் உபகரணங்கள் தயாரிக்கக் கூடியதாக சிலிண்டர் மற்றும் வெள்ளிரும்பு ஒட்டும் இயந்திரம் ஆகிய உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

'மோட்டி வேஷன்' நிறுவனதின் முகாமையாளர் எல்.எஸ்.துஷ்யந்தன் யாழ்.ஜெய்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி எஸ்.கனேசமூர்த்தியிடம் இந்த உபகரணங்களை கையளித்துள்ளார்.

இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி இலகுவாக நடமாடும் உபகரணங்களைத் தயாரிக்க முடியும் என நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (த-14)



*காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் போரினால் கால் இழந்த ஒருவருக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் உதவு தொகை வழங்கப்பட்டது. ஆலய அறங்காவலர் மகாராணி க.சோமசேகரம் உதவு தொகையை வழங்குகிறார். (த-250)*

# மாமுனைக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம்,பெப்.6

வடமராட்சி கிழக்கு மாமுனை பிரதேசத்துக்கு நீண்ட காலத்தின் பின்னர் மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த மின்விநியோகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த முதற்கட்ட விநியோகத்தின் போது 60 குடும்பங்களுக்கு மின்சாரம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டதாக மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

# மூவருக்கு டெங்கு

நேற்று செவ்வாய்க்கிழமை டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மூன்று பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் ஐந்து பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் இந்த வருடம் இதுவரை 69 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். (த-ரி)

# சுகாதாரத் தொழிலாளர் நியமனம்; எதிரணி உறுப்பினர்கள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்.மாநகர சபை மேலும் 50 சுகாதாரத் தொழிலாளர்களைப் புதிதாகச் சேர்த்துள்ளது. இதற்கு மாநகர சபை எதிரணி உறுப்பினர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

புதிதாக 50 சுகாதாரத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டமை தொடர்பான அறிவித்தலை மாநகர சபை ஆணையாளர் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

கடந்த 31 ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் 50 சுகாதாரத் தொழிலாளர்கள் நியமனத்துக்கான சபையின் அங்கீகாரத்தை ஆணையாளர் கோரினார்.

எனினும் இந்த நியமனத்துக்கு சபையின் எதிரணி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

மாநகர சபையினால் ஏற்கனவே நியமிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளர்களை விட மேலும் 50 பேர் நியமிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என அவர்கள் சபையில் தெரிவித்தனர்.

இதனை அடுத்து தொழிலாளர்கள் நியமனம் தொடர்பான தீர்மானம் சபையின் அங்கீகாரத்துக்காக வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் சபையின் எதிரணி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். எதிரணி உறுப்பினரான மு.றெமிடியஸ் ஆளுந்தரப்புடன் சேர்ந்து தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். (த-7-17)

# பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை நிலையம் கச்சதீவில்

## அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு

யாழ்ப்பாணம்,பெப்.6

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவையொட்டி பனை அபிவிருத்திச் சபை பனம் உற்பத்தி பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான நிலையம் ஒன்றை அங்கு அமைக்கவுள்ளது.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு வரும் இலங்கை, இந்தியப் பக்தர்களின் நன்மை கருதி இந்த விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

சபையின் உற்பத்தி செய்யப்படும் பனம் சார் உற்பத்திப் பொருள்கள் இங்கு சந்தைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளதாகவும் அதன் தலைவர் மேலும் கூறினார். (த-17)

# மாத்தளை எலும்புக் கூடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் -ஜே.வி.பி.

கொழும்பு, பெப்.6

படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் எலும்புக்கூடுகளே மாத்தளை மர்ம புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன என்பது பூர்வாங்க விசாரணைகளின் மூலம் உறுதியாகியுள்ளதால் ஒவ்வொரு எலும்புக் கூடுகள் தொடர்பிலும் தனித்தனியாக விசாரணை நடத்தி குற்றவாளிகளை கைதுசெய்யவேண்டும் என்று ஜே.வி.பி. நேற்று அரசை வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடும் போதே ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1988 - 89 ஆகிய காலப்பகுதிகளில் ஐ.தே.கவின் ஆட்சியின்போது ஐ.தே.கவின் மரணப்பொறிக்குள் 60 ஆயிரம் இளைஞர்கள் சிக்கிப் படுகொலை செய்யப்பட்டனர். அந்தக் காலப்பகுதியில் உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகபூர்வமற்ற ரீதியிலும் படுகொலை செய்யும் குழுக்கள் இருந்தன.

அமைச்சர்களின் வீடுகள் வதை முகாம்களாக விளங்கின. அங்கு வைத்து இளைஞர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலைசெய்யப்படுவர். அநுராதபுரம், காலி, புத்தளம், கம்பஹா, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். கொலைக் கலாசாரமே அன்று நிலவியது.

இவ்வாறான குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்கள் இன்றும் அமைச்சர்களாக உள்ளனர். மாத்தளை புதைக்குழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளும் 1988 - 89ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், படுகொலை செய்யப்பட்ட பின்னர் புதைக்கப்பட்ட சடலங்களின் எலும்புக்கூடுகளே மாத்தளையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளாகும் என பூர்வாங்க விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. வெட்டப்பட்டு படுகொலைசெய்யப்பட்டதற்கான தடயங்களும் உள்ளன.

எனவே அரசு, மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளைத் தனித்தனியாக ஆராய்ந்து உள்ளமையைக் கண்டறியவேண்டும். மாறாக அதை மூடி மறைக்க முயற்சிக்கக்கூடாது.

விசாரணை என்ற முதற்கட்டத்தில் இருந்தவாறு காலம் கடத்தாது குறித்த பிரதேசத்தில் அந்தக் காலப் பகுதியில் பணிபுரிந்த பொலிஸ், இராணுவ அதிகாரிகள் உட்பட காணாமல் போனவர்களின் உறவினர்களிடமும் வாக்கு மூலம் பெற்று குற்றவாளிகளை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## மு.காவை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளருமான பசீர் சேகுதாவூத் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அரசோ அல்லது வெளிநாட்டு சக்திகளோ, உள்நாட்டில் இருக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரான அமைப்புக்களோ, கட்சிகளோ எனது கட்சிக்கு எதிராகவும் தலைமைத்துவத்துக்கு எதிராகவும் என்னைப் பயன்படுத்த முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட மத்திய குழுக்கூட்டம் ஏறாவூரிலுள்ள தாறுஸ்ஸலாமில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸில் பிரிவினை ஏதுமில்லாமல் கட்சிக்கு இன்னுமொரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப்பதவி கிடைத்துவிட்டது என்று கவலைப்படுகின்ற, இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கட்சியை பலவீனப்படுத்த விளைகிற சில வெளிச்சக்திகளின் உபாயரீதியான பிரசாரமே என்னைப்பற்றிய அண்மைய கட்டுக்கதைகளுக்கு காரணமாகும்-என்றும் அவர் கூறினார்.

2000ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸின் நிறுவுநர் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப்பின் மறைவுக்குப் பின்பு கட்சிக்குள் இரட்டை தலைமைத்துவப் பிரச்சினை தொடக்கம் இன்று வரையான 13 வருட காலத்துக்குள் ஏற்பட்ட பல பிரச்சினைகளை முகம் கொடுத்து வெற்றி காண்பதில் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் இணைந்து முதன்மைப்பாத்திரம் ஏற்று செயற்பட்டவன் நான் என்பதை அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அதியுயர் பீடக் கூட்டத்தில் கூறினேன்- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## இலங்கைத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எழுதியிருந்தார்.

இந்நிலையில், அவரின் இந்தக் கடிதத்துக்கு கடந்த 30ஆம் திகதி சோனியா காந்தி அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் இலங்கை தமிழ் மக்கள் தொடர்பிலான தங்கள் கவலைகளில் தானும் பங்கேற்பதாகவும்,

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். (த)

## இன்றைய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பதாகவும், இலங்கையில் மனித உரிமைகளை நிலைநாட்ட பிரிட்டிஷ் அரசு மனித உரிமைகள் அமைப்புகளுடன் இணைந்து செயற்படுமென்றும் குறிப்பிட்டார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டைக் கொழும்பில் நடத்துவதா இல்லையா என்பது தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் பர்ட், பொதுநலவாய அமைப்பின் விழுமியங்களுக்கேற்ப அதனைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொதுநலவாய அமைப்பின் அமைச்சர் மட்டக் குழுவிடமே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

நல்லாட்சி, சட்டம், ஒழுங்கு, மனித உரிமைகள் என்ற பொதுநலவாய அமைப்பின் விதந்துரைகள் குறித்து இலங்கை கூடுதல் கவனம் செலுத்தவேண்டுமென்றும் மேற்படி இணையத்தள பதில்களில் வலியுறுத்திய அவர், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அமுலாக்கம் அத்தியாவசியமெனவும் வலியுறுத்தியுள்ளார். (சி-த)

## அமெரிக்காவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பிவைக்குமாறு அமெரிக்கா விடுத்துள்ள கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துவிட்டார் அரச தகவல் திணைக்களம் நேற்றுக்காலையில் செய்தி வெளியிட்டிருந்தது.

அரச திணைக்களம் வெளியிட்ட அந்தச் செய்தி மறுகணமே அனைத்து இணையத்தளங்களிலும் வெளியாகியது. இவ்விவகாரம் குறித்தான மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்கவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வினவின.

அதன்போது இலங்கைப் படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பிவைக்குமாறு அமெரிக்கா கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை என்று அவர் பதிலளித்தார். ஆனால் அரச தகவல் திணைக்களமே கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என செய்தி வெளியிட்டிருந்தது.

அமெரிக்கா கோரிக்கை விடுக்கவில்லையென்றால் - அரசு குறித்தான முக்கிய செய்திகளை வெளியிடும் அரச தகவல் திணைக்களம், அமெரிக்காவின் கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துவிட்டார் என ஏன் செய்தி வெளியிட்டது என்பதுதான் நேற்று அரசியல் களத்தை ஆக்கிரமித்துக்கொண்ட பென்னம்பெரிய வினாவாகிறது.

அரச தகவல் திணைக்களம் வெளியிட்ட செய்தியையடுத்து எழுந்த அழுத்தங்களைச் சமாளிப்பதற்கா ஜனாதிபதியின் பேச்சாளர் அதற்கு மாறான வகையில் கருத்து வெளியிட்டாரா என்பது மற்றுமொரு கேள்வியாகும்.

2012ஆம் ஆண்டிலிருந்து 50 நாடுகளைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் படையினர் ஆப்கானிஸ்தானில் கடமையில் இருக்கின்றனர் என்று சர்வதேச பாதுகாப்பு மற்றும் உதவிப்படை அறிவித்துள்ளது.

பல வெளிநாட்டுப் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து 2004 ஆம் ஆண்டு இறுதியில் வெளியேறுவதற்குத் தீர்மானித்திருந்தன. ஆப்கானிஸ்தானில் இருக்கின்ற படையில் 68 ஆயிரம் பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்று பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது. (முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்) (த)

## தமிழரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளில் தலையிடுவதற்கு இன்னொரு நாட்டுக்கு உரிமையில்லை என்றும் தனதுரையில் குறிப்பிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இதனூடாக வெளிநாட்டுத் தலையீடுகளையும் கண்டித்துள்ளார்.

ஆனால் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வு காணப்படும் எனச் சர்வதேச நாடுகளுக்கும், உள்நாட்டு அரசியல் கட்சிகளுக்கும் அளித்த வாக்குறுதிகளுக்கு முரணாக ஜனாதிபதியின் இந்த உரை அமைந்துள்ளதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முனைப்புக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்றாக நிராகரித்துள்ளதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு தயாரில்லை என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த உரை வெளிப்படுத்தியிருப்பதாக சர்வதேச நெருக்கடிகளுக்கான குழுவைச் சேர்ந்த அலன் கீனன் தெரிவித்துள்ளார் என்றும் 'நியூயோர்க் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

இதேபோன்று ஏபி, ஏ.வ்.பி. போன்ற சர்வதேச ஊடகங்கள் மற்றும் இந்திய ஆங்கில ஊடகங்களும் இதுதொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

### முக்கிய உறுதிமொழிகள் அனைத்தும் மீறப்பட்டன

2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த பின்னர் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுடனும் விரிவான பேச்சுக்கள் நடத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கைக்கு பயணம் செய்திருந்த போது ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

அந்தப் பேச்சின்போது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன் என இலங்கை ஜனாதிபதி தனக்கு வாக்குறுதி அளித்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தனது இலங்கைக்கான பயணத்தின் முடிவில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் சுதந்திர தின உரை, மேற்குறிப்பிட்ட அனைத்து உறுதிமொழிகளையும் அப்பட்டமாக மீறுவதாக அமைந்திருப்பதாக அனைத்துலக ஊடகங்கள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன. (த)

## மன்மோகன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துறை அமைச்சர் இந்தியப் பிரதமரிடம் கால அவகாசம் கோரியுள்ளார். இது ஜெனிவாக் கூட்டத் தொடரில் தமக்கு எதிராக எழும் சர்வதேச அழுத்தங்களை முறியடிக்கும் அரசின் காய் நகர்த்தல். ஐ.தே.க. பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 2011 ஆம் ஆண்டு இருநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்களும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது பேச்சு நடத்தப்பட்டிருந்தால் அதை ஏன் அரசு மூடி மறைக்கிறது? அதுமட்டுமன்றி, இருநாட்டு இணக்கப்பாடுகளையும் அரசு புறம்தள்ளியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அந்நாட்டுப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போது எந்தக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்தப்பட்டது என்ற உண்மையை அரசு இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

ஆனால், 13 ஆவது திருத்தச்சட்டம், இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார அபிவிருத்தி ஆகியவை குறித்தே இந்தியப் பிரதமருடன் தாம் பேச்சு நடத்தியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் கூறினார். இருப்பினும், இந்தச் சந்திப்பின் உண்மைத் தன்மையை அரசு தெளிவாக அறிவிக்கவில்லை.

இதற்கு முன்னரும் இந்தியப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர், வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து அரசின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

### மூடி மறைப்பது ஏன்?

கடந்த 2011 ஆம் ஆண்டு இலங்கைக்கு பயணம் செய்திருந்த இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவும், இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் மே மாதம் 17 ஆம் திகதி கூட்டறிக்கையொன்றை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில் தமிழர்களின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வு, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளின் நடைமுறை, தேசிய சமாதானத்தைப் பாதுகாத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்தல், வடக்கு அபிவிருத்தி மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தல் ஆகியன தொடர்பில் இலங்கை அரசால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமன்றி, இருநாடுகளுக்குமிடையே இணக்கப்பாடுகளும் செய்துகொள்ளப்பட்டன.

இது தொடர்பில் இந்தியப் பிரதமருடன் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பேச்சு நடத்தியிருந்தாரெனில் அதை அரசு ஏன் மூடிமறைக்கின்றது? நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக வெளிப்படுத்தலாமே.

நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலும், இந்தியா - இலங்கைக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும் இரு நாடுகளும் செய்துகொண்ட இணக்கப்பாடுகளை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும். ஆனால் அரசோ அவற்றைப் புறந்தள்ளியுள்ளது.

### மேலும் கால அவகாசம் கோரியுள்ளது

இனப் பிரச்சினைத்தீர்வுக்கு அத்திபாரமாக அமையும் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரச கூட்டுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டுடன் கூடிய சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவர, அதை முழுமையாக நடைமுறைப்படுத்த மேலும் கால அவகாசம் தேவையென இந்திய பயணத்தின் போது வெளியுறவுத்துறை அமைச்சர் பீரிஸ் அந்நாட்டுப் பிரதமரிடம் காலஅவகாசம் கோரியுள்ளார்.

இது இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் மீண்டும காலத்தைக் கடத்தும் அரசின் செயலாகும். இது இருநாட்டு உடன்படிக்கைகளை மீறும் செயலாகும்.

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எழும் நெருக்கடிகளையும், சவால்களையும் முறியடிக்கவே 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியாவிடம் இலங்கை அரசு கால அவகாசம் கோரியுள்ளது.

ஒரு கோப்பை தேநீர் அருந்துவதற்காக நாட்டு மக்களின் பணத்தை வீண் விரயம் செய்து அமைச்சர் பீரிஸ் இந்தியாவுக்கு பயணம் செய்யத் தேவையில்லை.

இந்தியப் பிரதமருடன் அமைச்சர் பீரிஸ் என்ன பேசினார், என்னென்ன இணக்கப்பாடுகளைச் செய்துகொண்டார் என்பதை நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்கும் பொறுப்பு அவருக்குள்ளது. எனவே, நாடாளுமன்றத்தில் அதனைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் - என்றார். (சி-த)

# கடல் உணவு வளங்களை அதிக விலை கொடுத்து வாங்கும் கடற்றொழிலாளர்

### கொக்கிளாயில் இந்த நிலைமை

முல்லைத்தீவு, பெப்.6
கடலுக்கு அருகில் வசிக்கின்ற போதிலும் கடலுணவுகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் தாம் உள்ளதாக கொக்கிளாய் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம், கொக்கிளாய் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னமரவாடி ஆகிய கிராமங்களில் மீள் குடியமர்ந்த மக்களில் எண்பது வீதமானவர்கள் கடற்றொழிலையே தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆனால் தற்போது இவர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் அத்துமீறல்கள் மற்றும் சட்ட விரோத தொழில் நடவடிக்கைகளால் இவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இது குறித்து இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கும் போது தாம் மீள் குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ளதாகவும் கடன்களைப் பெற்று கடற்றொழில் உபகரணங்களைத் தாம் பெற்றுள்ள போதிலும் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

தாம் கடலுக்கு அருகில் வசிக்கின்ற போதிலும் கடலுணவுகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவலநிலையில் உள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். (க-6)

# நிரந்தர ஆசிரியர்கள் இல்லாத நிலையில் கற்சிலைமடு ம.வி.

முல்லைத்தீவு, பெப்.6
கற்சிலைமடு மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு நிரந்தர ஆசிரியர் இல்லையென பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வரலாறு பாடத்தை ஆசிரியர் இல்லாமலேயே மாணவர்கள் தாமாகக் கற்கவேண்டிய அவல நிலையில் உள்ளனர் என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சில மாணவர்கள் வேறு பாடசாலைகளை நாடவேண்டியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் விவசாயப் பாடம் இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கப்படாமையால் இதனைக் கற்க விரும்பும் மாணவர்கள் வேறு பாடசாலைகளை நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

### கிளிநொச்சி குளத்தின் வான் பகுதியில்

# மண் அணை அகற்றப்படாததால் வான்வெள்ளம் பாய்வதில் இடர்கள்

அக்கராயன்,பெப்.6
கிளிநொச்சிக் குளத்தின் வான் பகுதியில் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணை அகற்றப்படாததால் குளத்தின் வெள்ளம் வான் பாய்வதில் இடர்கள் தோன்றியுள்ளன.

மேலும் வான்வெள்ளம் வயல் வெளிகளின் ஊடாகப் பாய்வதனால் நெற்பயிர்கள் அழிவுகளை எதிர்கொண்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இடையில் உள்ள மண் அணைகள் அகற்றப்படுமாயின் வான் வெள்ளம் இலகுவாக வெளியேறக் கூடிய நிலை உருவாகும் எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரில் இருந்து ஆனையிறவு வரையான பகுதிகளில் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள் அகற்றப்படாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சிக் குளத்தின் அணைக்கட்டின் கீழ்ப்பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதன் காரணமாக துர்நாற்றம் வீசுவதால் இங்குள்ள வீதியில் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குளத்தின் வான்பகுதியில் கழிவுகள் கொட்டப்படுகின்றமை குறைவடைந்த நிலையில் தற்போது குளத்தின் அணைக்கட்டின் கீழ்ப் பகுதியில் இந்தக் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு வருகின்றன.

> கிளிநொச்சி நகரின் கழிவுகளைக் கொட்டுவதற்கு உமையாள்புரம் பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி அணைக்கட்டின் கீழ் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் சூழல் பெருமளவில் மாசடைந்து வருவதைக் காண முடிகிறது.

கிளிநொச்சி நகரின் கழிவுகளைக் கொட்டுவதற்கு உமையாள்புரம் பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி அணைக்கட்டின் கீழ் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் சூழல் பெருமளவில் மாசடைந்து வருகிறது.

இதேவேளை கிளிநொச்சி நகரில் உள்ள இராணுவ முகாம்களின் கழிவுநீர் மருத்துவமனை உட்பட முக்கியமான நிறுவனங்களின் கழிவு நீர் மற்றும் வழிந்தோடுவதற்கும் கால்வாய் வசதிகள் இல்லாததால் நீர்தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### கண்ணிவெடியகற்றும் பணிகள் முடிவுறுத்தப்படுவதால்

# வன்னேரிக்குளத்தையும் தேவன்கட்டையும் இணைத்து நீர்த்தேக்கம் உருவாவதில் பாதிப்பு ஏற்படுமென அச்சம்

*அக்கராயன், பெப்.6*
***டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தமது பணியை முடிவுறுத்துவதாகத் தெரிவித்துள்ளமை வன்னேரிக்குளத்தையும், தேவன் கட்டையும் இணைக்கும் நடவடிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் என இங்குள்ள மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.***

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்கந்தபுரம் பாடசாலையில் இடம்பெற்ற கூட்டத்தில் வன்னேரிக் குளத்தையும் தேவன்கட்டையும் இணைத்து பெரியதொரு நீர்த்தேக்கத்தை உருவாக்குமாறு வன்னேரிக்குளம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர். அதன்போது இந்தப் பகுதியில் காணப்படும் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் இந்த நீர்த்தேக்கத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் டெனிஷ் கண்ணிவெடியகற்றும் பிரிவினால் மிதிவெடியகற்றப்பட்ட தேவன் கட்டுக்குளத்தின் அணைக்கட்டுப் பகுதி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. இக்குளத்தின் கீழான 526 ஏக்கர் வயல் நிலப்பகுதியில் மிதிவெடி அபாயம் உள்ளதெனவும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஜெயபுரம் டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் பணிமனையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அதன் செயற்பாட்டு முகாமையாளர் மாட்டிநிக்கிலா, இந்த ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி வரையே தமது பணிகளை மேற்கொள்வதற்கான நிதியுள்ளதெனவும் மேலதிக நிதி கிடைத்தால் மட்டுமே தமது பணிகள் தொடரும் என்றும் தெரிவித்திருந்தார்.

தற்போதும் ஜெயபுரம், வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளில் மிதிவெடி அபாயம் உள்ளது. இந்த மிதிவெடிகள் அகற்றப்படும் வரை வன்னேரிக்குளம் தேவன்கட்டு இணைப்பு சாத்தியமாகாது என்பது தெளிவாக உள்ளதாகவும் இங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நீர்த் தேக்கம் உருவானால் ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும் என்பதுடன் ஜெயபுரம் கிராம மக்களுக்கும் வயல் நிலம் கிடைக்கும் சாத்தியமுள்ளதாகவும் கருதப்படுகிறது.

மேலும் வன்னேரிக்குளத்தின் உவர் பாதிப்புகளும் தடுக்கப்பட்டுவிடும். அத்துடன் பூநகரிக்கு நன்னீர் கொண்டு செல்லக்கூடிய சூழலும் உருவாகும்.

மேலும் வன்னேரிக்குளம் நீர்த்தேக்கம் மூலமாக யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகமும் சாத்தியமாகும் எனவும் அபிவிருத்தி சார் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர். (க-18)



*தைப்பூசத்தை முன்னிட்டு 'சோஆ' நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் வயலில் நெற்புதிர் எடுத்து புது அரிசியில் பொங்கலிடும் நிகழ்வு இடம்பெற்றது. (க-14)*

# தண்ணீருக்காக அலையும் ஜெயபுரம் கிராம மக்கள்

அக்கராயன், பெப்.6
கிளிநொச்சி மாவட்டம் ஜெயபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தண்ணீரைத் தேடி அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இங்குள்ள பல வீடுகளில் கிணறுகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் தண்ணீரைத் தேடி இவுர்கள் நீண்ட தூரம் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஜெயபுரம் தெற்குப் பகுதியில் உள்ள 70 வரையான குடும்பங்கள் தமது காணியில் கிணறுகள் இல்லாது நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமம் 1984 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் அடிப்படை வசதிகள் எவையும் இல்லை. மருத்துவமனை, போக்குவரத்து வசதிகள் கூட இல்லாத நிலையே காணப்படுகின்றது.

மேலும் தமக்கு வயல் நிலம் வேண்டும் என்ற இந்தக் கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையும் நிறைவேறாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ்

# ஆரம்பிக்கப்பட்ட வீதிவேலைகள் இழுத்தடிக்கப்பட்ட நிலையில்

கிளிநொச்சி,பெப்.6
கிளிநொச்சியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்புப் பணிகளுக்கென தெரிவுசெய்யப்பட்ட பல வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள வீதிகள் பல கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரான காலத்திலும் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு பெயர்ப் பலகைகளும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன. ஆனால் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சுமார் 52 வரையான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இதுவரை நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

> சுமார் 52 வரையான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இது வரை நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் பயணிகள் பல்வேறு சிரமங்ளை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

# ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பாடசாலைகளில் மாணவர் வரவு ஒழுங்கற்ற நிலையில்

### ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி கூறுகிறார்

முல்லைத்தீவு, பெப்.6
மாணவர்களின் ஒழுங்கற்ற வரவு ஒட்டுசுட்டான் மற்றும் கற்சிலைமடுப் பாடசாலைகளில் அதிகளவில் காணப்படுவதாக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

கற்சிலைமடு வித்தியாலயத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போது ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி ந.பங்கயச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் பாடசாலைகளிலும், வீடுகளிலும் தரிசிப்புக்களை மேற்கொண்ட போது, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் கற்சிலைமடு மகாவித்தியாலயத்திலும் மாணவர்களின் ஒழுங்கற்ற வரவு அதிகளவில் காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டானில் கல்வி கற்கும் 478 மாணவர்களில் 108 பேரும், கற்சிலைமடுவில் கல்வி கற்கும் 561 மாணவர்களில் 171 மாணவர்களும் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமுகமளிப்பதில்லை. இத்தகைய நிலைக்கு பெற்றோர்கள் தான் பதில் கூற வேண்டும். ஒரு மாணவன் ஒரு மாதத்தில் 5 நாள்கள் பாடசாலைக்கு வரவில்லை என்றால்அவர் ஒழுங்கற்ற வரவு உடையவர் எனக் கணிப்பிடப்படுகின்றது.

கற்சிலைமடுவில் மாணவர் ஒழுங்கற்ற வரவுள்ளவர்களாக உள்ளமை தொடர்பாகக் கேட்டபோது பஸ் சேவைகள் ஒழுங்காக இடம்பெறாமையால் மாணவர்கள் வீடுகளில் தங்கி விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும், பாடசாலை மாணவர்களைத் பஸ்களில் தவறாது ஏற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனைக் கடைப்பிடிக்காத பஸ்களை இனம்கண்டு பொலிஸாருக்குத் தெரியப்படுத்துமாறும் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்தார். (க-500)

**கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்**

எமது திணைக்கள உத்தியோகத்தர்
சாமுவேல் லதிஸ்லாஸ் அவர்களது அன்புத் தந்தை

**மத்தீஸ் சாமுவேல்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம். நீர்ப்பாசனப் பொறியியலாளரும், உத்தியோகத்தர்களும்.


## கூரையிலிருந்து விழுந்த முதியவர் சாவு

அக்கரைப்பற்று,பெப்.6

வீட்டுக் கூரையிலிருந்து கீழே தவறி விழுந்த நிலை யில் சிகிச்சை பெற்றுவந்த வயோதிபர் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

அக்கரைப்பற்று 6, அலியார்மரைக்கார் வீதி யைச் சேர்ந்த அப்துல் காசிம் அப்துல் அஸீஸ் (வயது 60) என்பவரே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

அவர் மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நி லை யி லே யே நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரி ழந்துள்ளார். (ச)


**மணமகள் தேவை**

லண்டனில் PR உள்ள பரணி நட்சத்திரம் 41 கிரகபாவம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
(வெளிநாட்டில் உள்ளவர்களை எதிர்பார்க்கின்றனர்)

தொடர்பு:0779687653 (29183)(8.16.6)



**2013 A/L**

**BIOLOGY**

Mr. R. ஈசன் B.Sc. (Biology)

Revison, Paper
Exam preparation

2012 A/L பரீட்சையில் தோற்றியவர்களும் 2013 A/L பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்களுக்கான இலவச வகுப்புக்கள், ஏனைய பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ளமுடியும்.

இடம் :
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
ஆரம்பம்: 07.02.2013 வியாழன், பி.ப. 3.00 மணி

அனுசரணை : OSA - Canada
விவரங்கள் : 0212240230



**BARATHY**
**சித்தன்கேணி**

* கலைத்துறையில் 3A எடுத்த மாணவர்கள்
* வர்த்தகத்துறையில் 3A எடுத்த மாணவர்கள்
* ஏனைய உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி இப் பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் அதிகூடிய மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குச் செல்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**A/LDayClass**

யாழ். பிரபல ஆசிரியர்களினால்

| | |
|---|---|
| பொருளியல் | மகேந்திரன் |
| கணக்கீடு | திருக்குமரன் |
| வணிகக்கல்வி | பசில் |
| தமிழ் | பாலா |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | N.T.தரன் |
| அளவையியல் | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் |
| வரலாறு | சுதன் |
| நாடகமும் அரங்கியலும் | கணேஷ் |
| கிறிஸ்தவ நாகரிகம், கிறிஸ்தவம் | வசந்தன் |
| ஊடகவியல் | ஆனந்தன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் |
| விவசாயம் | விஷ்ணுதேவன் |
| I.C.T | அம்ரி |

நீங்களும் உயர் பெறுபேறுகளைப் பெற்றிட உங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் (c/6245)(5.6.15)


## மரண அறிவித்தல்



**பொலிஸ் கணேசபிள்ளை அன்னமுத்து**

*(பலகாடு - காரைநகர்)*

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிட மாகவும் வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட கணேசபிள்ளை அன்ன முத்து (4.2.2013) திங்கட்கிழமை காலமானார்.


அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியை களுக்காக 7 ஆம் திகதி வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக் கப்பட்டு மு.ப 10.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18/2, Fernanda Road, Wellawatte.

தகவல்: மக்கள், மருமக்கள் T.P - 0114327524 (C/5898)(6.7.11)

# மரண அறிவித்தல்கள்



## ஆறுமுகம் சுப்பிரமணியம்

*(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் -Dozer Operator)*

யாழ்ப்பாணம் மாட்டீன் றோட்டைப் பிறப்பிட மாகவும், இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் தற்போது இல.83/1, றக்காவீதி யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான ஆறுமுகம் சுப்பிரமணியம் நேற்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், வசந்தகுமார் (கனடா), சந்திரகுமார் (G.S.கண்ணாட்டி கணேசபுரம்), சிவாஜினி (இராமநாதபுரம்), இராசகுமார் (வன்னேரி), விஜயகுமார் (A.I.சாவகச்சேரி/அம்பன்), ரவீந்திரகுமார் (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் உதயகுமார் (கனடா), கலாறஞ்சினி (கனகபுரம்), சீத்தாலோஜினி (பிரான்ஸ்), சுகந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனலட்சுமி (கனடா), சகுந்தலாதேவி (ஆசிரியை, வவுனியா சைவப்பிரகாசா வித்தியாலயம்), வன்னியசிங்கம் (இராமநாதபுரம்), பரமேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர்- வன்னேரி), ஸ்ரெலர்கிறேஸ் (ஐடா- மிருசுவில்), சித்திரா (Canada), லீலாவதி (வவுனியா), பாலதர்சினி (கனடா), நவலோகநாதன் (கனகபுரம்), செல்வகுமார் (பிரான்ஸ்), ராம்மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இல.83/1 றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் இன்று (06.02.2013) புதன்கிழமை பி.ப 2மணி வரை வைக்கப்பட்டு பின் வவுனியா கோயில் புதுக்குளம் 5ஆம் ஒழுங்கை திரு. திருமதி சந்திரகுமார் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.83/1, றக்காவீதி, யாழ்ப்பாணம். 0776512373, 0776617949, 0770287272.

தகவல்: குடும்பத்தினர். சு.விஜயகுமார் (விவசாய போதனாசிரியர்- சாவகச்சேரி, அம்பன்), சு.சுந்தரகுமார் (கிராம அலுவலர் -கண்ணாட்டி கணேசபுரம், வவுனியா)

## பொன்னையா சண்முகபாரதி

(ஓய்வுபெற்ற லிகிதர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்- யாழ்ப்பாணம்)



நவாலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெகிவளை வைத்தியா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சண்முகபாரதி கடந்த (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை (தம்பித்துரை & sons) - சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மருமகனும், உருத்திரமணியின் பாசமிகு கணவரும், ஆனந்தி (கொழும்பு), நந்தகுமார் (U.K.), மேகலா (கொழும்பு), சிவகுமார் (SWISS), மஞ்சுளா (U.S.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகன் (A.C.I.LTD.RATMALANA), சுகந்தி(U.K.), ரட்ணராஜா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சுந்தரம்பிள்ளை மற்றும் புனிதவதி, மகேஸ்வரி, வனிதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைராஜா (AUSTRALIA), கமலம், பூமலர், யோகம், தேவி, ராணி, இந்திரா, சிவராஜா (U.K.) ஆகியோரின் மைத்துனரும், இராசையா, காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், பரமகுரு, சிவனேசன், ரகுநீதன், ஸ்ரீரங்கன் ஆகியோரின் சகலனும், ஷிரோமிக்கா (INDIA), ஹசானிக்கா, வியங்கா, சங்கவி (U.K.), றனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (07.02.2013) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று பி.ப. 4.00மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன் (T.மோகன்)
இல. 40, வைத்தியா வீதி,
தெஹிவளை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
TEL:- 567 1320, 077 3638511


**மாபெரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புச்சந்தை - 2013**

**FOREIGN JOB FAIR - 2013**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மாவட்ட திட்டப்பணிமனையின்
அனுசரணையுடன்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வடக்கு கிழக்குப் பிராந்திய முன்னோடி முகவர் நிலையமான
**N Excellent Management Service**
நிறுவனத்தினரால் நடத்தப்படும்
டோகா, கட்டார், குவைத், சவுதி அரேபியா
ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு

காலம் : 07.02.2013 காலை 09 மணிமுதல் பிற்பகல் 02 மணிவரை
இடம் : தேவி ஹொட்டல் & றெஸ்ட்ரோறன்ட் கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்
(YMCA க்கு பதிலாக இடம் மாற்றப்பட்டுள்ளது)
(கச்சேரிக்கு அருகில்)

மேலதிக விவரங்களுக்கு

0726092892
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
மாவட்ட திட்டப் பணிமனை,
மீள் எழுச்சித்திட்டம், யாழ்ப்பாணம்

நிஸாம் - 077 3049848
அலுவலகம் - 067 2278138
- 067 3692599

**N EXCELLENT MANAGEMENT SERVICE (NEMS)**
**(SLBFE Approved License No: 2499)**
**SPS Complex, 1st Floor Main Street, Akkaraipattu**
**Tel: 067 3693599 Fax: 067 2278138**
**E-mail: nemsint@gmail.com**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சமாதான சகவாழ்வுக்கு வழி செய்யாத போக்கே நீண்டு செல்கிறது...

இனரீதியாகவும் மத ரீதியாகவும் செயற்பட்டு பிரச்சினைகளை உருவாக்க சில தீய சக்திகள் முயற்சி செய்கின்றன. இவ்வாறு செயற்படுவதால் நாட்டில் பிரிவினைவாதமே உருவாகும். அந்த நிலைமைக்கு நான் ஒரு போதும் இடமளிக்கமாட்டேன்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் மிகத் தெளிவாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். இந்த உறுதிமொழி, இலங்கை வாழ் சிறுபான்மை இன மத மற்றும் மொழிவாரி சமூகங்கள் சமீப காலமாக எதிர்நோக்கி வரும் நெருக்குதல்களில் இருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற வகையில் ஓர் ஆறுதலைத்தரும் வார்த்தைகளாகத் தொனிக்கின்றன எனக் கருதலாம்.

அதேவேளை சிறுபான்மை மக்கள் மீது தமது அரசு எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளது என்பதையும் சகல இனத்தவர்கள் மத்தியிலும் நல்லிணக்கத்தைத் தோற்றுவிப்பதில் தாம் கொண்டுள்ள கரிசனையையும் வெளிநாடுகளுக்கு குறிப்பாக இந்தியா, அமெரிக்கா மற்றும் விரைவில் ஜெனிவாவில் கூடவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கும் வெளிப்படுத்தும் நோக்கம் கொண்டது என்பதில் சந்தேகமில்லை.

கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்கமும் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகளை அரசு நிறைவேற்றி வருகிறது என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை நம்பவைக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கும் அவரின் அரசுக்கும் இப்போது அவசரமாகத் தேவைப்படுகின்றது. குறிப்பிட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பான செயற்றிட்டமொன்று அமெரிக்காவிடமும் மனித உரிமைகள் பேரவையிடமும் இலங்கை அரசால் கையளிக்கப்பட்டமை பலரும் அறிந்த விடயம். ஆனால் அவை எந்த அளவுக்கு செயற்படுத்தப்பட்டுள்ளன, எந்த அளவுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் பயனடைந்துள்ளார்கள் என்பவை ஒன்றும் வெளிப்படையாகவில்லை. அவைகள் பற்றி உண்மையான நிலைமைகளைக் கண்டறிய வேண்டுமானால் சம்பந்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்தே பிரதிபலிப்புகளைப் பெறவேண்டும்.

சகல இன மக்களும் ஒற்றுமையாகவும் சௌஜன்யமாகவும் வாழ்ந்து வருகிறார்கள் என்று பொதுப்படையாக ஜனாதிபதி கூறிவிடுவதால் மட்டும் உண்மை நிலைமையைக் கண்டறிய இயலாது.

பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களுடன் இணக்கப்பாடான ஓர் உண்மையான நிலைப்பாட்டுக்கு அரசாங்கம் வர வேண்டும் என்பதையே நல்லிணக்க ஆணைக்குழுவும் தனது பரிந்துரையில் தெரிவித்திருக்கிறது.

''....அதிகாரப் பகிர்வு மீது ஒரு கருத்தொற்றுமையை உருவாக்குவதற்கான நம்பிக்கையை ஆரம்பிப்பதற்கு தற்போதைய சந்தர்ப்பங்களை பயன்படுத்த வேண்டும். மேற்படி பெறுபேறுகளை அடைவதற்கு நேர்மையான பேச்சுவார்த்தைக்கு அரசு முன்னெடுப்புகளை செய்யவேண்டும். எதிர்பார்க்கும் பேச்சு வார்த்தைக்கும் உள்ளடக்கத்துக்கும் அரசாங்கத்தின் கருத்துக்கள் அடிப்படையாக அமைய வேண்டும். சிறுபான்மைக் கட்சிகள் உட்பட சகல அரசியல் கட்சிகளுடனும் உயர் மட்டத்தில் பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டும்...''- இவ்வாறாகப் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான முயற்சி அடிமட்டத்திலேயே முட்டுக்கட்டையில் முடிந்தமை கசப்பான உண்மை.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சேர்ந்துகொள்ள மறுப்பதை சாக்குப்போக்காக அரசு காட்டி வருவது, ஏற்கனவே ஆரம்பித்த இருதரப்பு பேச்சுக்களை அரசு தொடராமல் இருப்பது என்று இரண்டுமே பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் கபடம் நிறைந்த உத்தியாகும். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முயற்சி எடுக்க வேண்டியது முழுக்க முழுக்க இந்த நாட்டு அரசின் தட்டிக்கழிக்க முடியாத பொறுப்பு. அதைத்தானே ஆணைக்குழுவும் பரிந்துரைத்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் அரச தரப்பினர் மட்டுமல்ல அரசு சார்ந்தவர்களே பெரும்பான்மையாக இருப்பர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களில் எல்லோருமே அதிகாரப்பகிர்வில் அக்கறையுள்ளவர்களாக இருப்பர் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள ஒரு கருத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். நல்லிணக்கத்துக்கு விரோதமான இனவாதிகளை வைத்துக்கொண்டு இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை எப்படி ஏற்படுத்த முடியும் என்று அவர் கேட்டுள்ளார். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் முதலில் இருதரப்பு பேச்சுக்கள் நடைபெற்று ஓர் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதும் அதனையே.

இனப்பிரச்சினை இந்த நாட்டின் உள்விவகாரம் . அதில் வெளிநாட்டவர் தலையிடமுடியாது என்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வாய் வலிக்கக் கூறிக்கொண்டிருக்கும் அரச தலைவர்கள், உள்நாட்டு விவகாரத்தை தீர்த்துக் கொள்வதில் உண்மையான அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை எதை வைத்து அறிந்து கொள்வது, அல்லது மதிப்பிடுவது? அரசு அதனை வெளிப்படையாகத் தெரிவிக்குமானால் மற்றவர்களின் தலையீடும் இருக்காது. ஜெனிவா மாநாடு குறித்தும் அது கவலைப்படும் தேவையுமிருக்காது.

தென்னிலங்கை மக்கள் இரண்டாவது தடவையாகவும் தம்மை ஆட்சிக்கட்டிலில் ஏற்றிவிட்டார்கள் என்பதனால் நியாயத்தையும் நீதியையும் தர்மத்தையும் அதிகார மமதையுடன் ஊறுபடுத்தலாம் என்ற புதிய சித்தாந்தத்தை கருக்கொள்ள வைக்கும் உத்தி, சமாதான சக வாழ்வுக்கு வழி செய்யாது என்பதனை உணர வேண்டிய வேளை இது...

# முன்னறிவித்தல் இல்லாமல் வீதிகளின் திருத்தப் பணி

### போக்குவரத்தில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,பெப்.6

குடாநாட்டில் பரவலாக இடம் பெற்றுவரும் வீதித் திருத்தப் பணிகள் முன்னறிவித்தல் இன்றி இடம்பெறுவதால் வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்படுவதுடன் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குடாநாட்டில் வீதித் திருத்தப் பணிகளில் வீதி அகலிப்பு மற்றும் காப்பெற் போடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் வீதித் திருத்தப் பணிகள் இடம்பெறுவது தொடர்பில் எந்தவித சமிக்ஞைக் குறியீடுகளும் பொருத்தப்படவில்லை. அத்துடன் முன்னறிவித்தல் எதுவும் வழங்கப்படுவதும் இல்லை.

இது தொடர்பாக வாகன சாரதிகள் அறிந்திராத காரணத்தால் குறித்த வீதிகள் ஊடாக வாகனங்களைக் கொண்டு சென்று அதன் பின்னர் வீதித் திருத்தப் பணிகள் இடம்பெறுவதை அவதானித்து மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

கைதடி-மானிப்பாய் வீதியில் கோப்பாய் சந்திக்கு அண்மித்ததாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாறே முன்னறிவித்தல் இன்றி வீதிக்கு காப்பெற் போடும் பணிகள் இடம்பெற்றன. ஆயினும் கைதடிச் சந்தியில் வீதித் திருத்தப் பணிகள் இடம்பெறுவது தொடர்பான அறிவித்தல் எதுவும் காட்சிக்கு வைக்கப்படவில்லை. இதனால் கோப்பாய் சந்திக்கு செல்ல வேண்டியவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் மாற்றுப் பாதைகள் ஊடாகப் பயணித்தனர்.

இதன் காரணமாக பயண நேரம் வீணடிக்கப்படுவதுடன் எரிபொருள் செலவினமும் அதிகரிப்பதாக வாகனச் சாரதிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே வீதித் திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் போது அடையாளக் குறியீடுகளைப் பொருத்துமாறு வாகனச் சாரதிகள் பலரும் கேட்டுள்ளனர். (த-14)

## கிராமங்களின் எல்லை தொடர்பில் தீர்வு காணும் கூட்டம் 17 ஆம் திகதி

வடமராட்சி,பெப்.6

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கிடையில் நீண்ட காலமாக இருந்து வரும் சமரபாகு பொலிகண்டி தெற்கு கிராமங்களின் எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

சமரபாகு கிராமம் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவிலும், பொலிகண்டி தெற்குப் பிரிவு பருத்தித்துறை செயலகப் பிரிவின் கீழும் இருந்து வருகின்றன. இரு தசாப்தங்களுக்கு முன்னர் சமரபாகு கிராமத்தின் ஒரு பகுதி பொலிகண்டி தெற்குடன் இணைக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவின் நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளது.

பொலிகண்டி தெற்குடன் இணைக்கப்பட்டுள்ள சமரபாகு கிராமத்தின் ஒரு பகுதியை மீண்டும் சமரபாகு கிராமத்துடன் இணைக்குமாறு சமரபாகு பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு கோரிக்கை விடுத்திருந்ததுடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது குறித்து ஆராயப்பட்டது. எனினும் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு எதிர்காலத்தில் வட்டார முறை நடைமுறைப்படுத்தப் படவுள்ள நிலையில் தமது கிராமத்தை துண்டாடாமல் ஒன்று சேர்த்து வைக்குமாறும் அதேநேரம் இரு பிரதேச எல்லைகளையும் ஒரு வீதி நிர்ணயிக்கக் கூடியதாக அமையும் என அந்தப் பகுதி மக்கள் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மாகாண, மாவட்ட, நகர, மாநகர, பிரதேச எல்லைகள் குறித்துப் புதிதாக நிர்ணயம் செய்யவெனத் தேசிய எல்லை நிர்ணயக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச எல்லை நிர்ணயத்தில் இருந்து வரும் சமரபாகு பொலிகண்டி தெற்கு கிராம எல்லைகளை நிர்ணயிப்பதற்கு இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இரு பிரதேசங்களினது பிரதேச செயலர்கள், குறித்த கிராமங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தெரிவிக்கும் கருத்துக்களை முன்வைத்து பிரதேச எல்லை நிர்ணயம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

## 9 பயனாளிகளுக்கு வணிகர் கழகம் உதவி

யாழ்ப்பாணம், பெப்.6

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகதெரிவுசெய்யப்பட்ட9பயனாளிகளுக்கு யாழ். வணிகர் கழகம் இரண்டாம் கட்டமாகக் கடன் உதவிகளைகடந்த2ஆம்திகதிவழங்கியுள்ளது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடன் அடிப்படையில் உதவி வழங்கும் திட்டத்தை யாழ். வணிகர் கழகம் ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக 210 குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட பயனாளிகள் 9 பேருக்கு இந்த வாழ்வாதாரக் கடன் உதவிகள் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டுள்ளன. கடன் உதவிகளைப் பெற்றவர்கள் தாமாக சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-14)

## மொழிகள் அபிவிருத்தி கற்கைநெறி

கொழும்பு,பெப்.6

தேசிய கல்வி நிறுவகத்தின் செயற்பாட்டில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் மேலதிக மொழிகள் அபிவிருத்திக் கற்கைநெறிக்கான புதிய வகுப்புகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன.

இந்தக் கற்கைநெறிகளில் இணைந்துகொள்ளும் பொருட்டு விண்ணப்பித்த ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அலுவலர்கள் குறிப்பிட்ட தினங்களில் தாம் விண்ணப்பித்த மேற்படி நிலையங்களில் குறித்த திகதிகளில் சமுகமளித்து தமது பதிவுகளை உறுதிப்படுத்துமாறும் புதிதாக இந்தக் கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் அன்றையதினமே விண்ணப்பங்களை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் மேற்படி இணைப்பு நிலையங்களுக்கான இணைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (த)

## தமிழகத்துக்கு ஜயலத்

கொழும்பு,பெப்.6

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று தமிழ்நாட்டுக்கு பயணமானார்.

தமது ஒருவார கால பயணத்தின் போது, தமிழ் நாட்டில் இன்றும் அகதிகளாக பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளைச் சந்தித்து, அவர்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராயவுள்ளார்.

அத்துடன் தமிழ் நாட்டிலுள்ள பொதுமக்கள் பிரதிநிதிகளைத் தனிப்பட்ட முறையில் சந்திக்கவுள்ளார். அதேவேளை, சென்னையிலுள்ள ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக்கழகத்தின் வேந்தர் உள்ளிட்ட மருத்துவப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். (த)

## வீதி விளக்குகள் ஒளிரவில்லை

வடமராட்சி,பெப்.6

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மருதங்கேணி, தாளையடிப் பகுதிகளில் வீதி மின்விளக்குகள் ஒளிரவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறைப் பிரதேச சபையினால் இந்தப் பகுதிகளில் 30 வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்த விளக்குகள் இரவு நேரத்தில் ஒளிர இணைக்கப்பட்ட சோலர்கள் யாவும் பழுதடைந்து விட்டதனால் மின் விளக்குகள் ஒளிரவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தரமான சோலர்களை இணைத்து இந்தப் பகுதிகளில் உள்ள வீதி மின்விளக்குகளை ஒளிரவிடுமாறு மேற்குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கேட்டுள்ளனர். (த-8)

## ஆசிரியர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, பெப்.6

கம்பஹா மல்வான அல்-முபாரக் மத்திய கல்லூரியில் கடமையாற்றி தற்போது யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியினால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தற்போது யாழ். மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் கம்பஹா மல்வான அல்-முபாரக் மத்திய கல்லூரி ஆசிரியர்களை தொடர்பு கொள்ளுமாறு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் வே.விநாயகமூர்த்தி அறிவித்துள்ளார். (த-9)

## சிறுதானிய, உப உணவுப் பயிர்கள் வெள்ளம் காரணமாக அழிவு

### மாந்தை கிழக்கு விவசாயிகள் பாதிப்பு

முல்லைத்தீவு,பெப்.6

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த சிறுதானிய மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கைகள் கடந்த மழை வெள்ளம் காரணமாக அழிவடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிலுள்ள பாண்டியன் குளம், நட்டாங்கண்டல், சிராட்டிகுளம், பாலைப்பாணி, கொம்புவைத்தகுளம், பொன்னகர் ஆகிய இடங்களில் கடந்த காலங்களை விட இம்முறை அதிகளவான உழுந்து, பயறு, கடலை, சோளம் போன்ற சிறுதானியங்கள் மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**சுமார் 80 வீதமான பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளன.**

கடந்த மாதம் பெய்த கடும் மழை காரணமாக இந்தப் பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளன. சுமார் 80 வீதமான பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் விவசாயிகள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-6)

## வவுனியாவின் பின்தங்கிய கிராமங்கள் வீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை

நெளுக்குளம்,பெப்.6

வவுனியாவிலுள்ள மிகவும் பின்தங்கிய சில கிராமங்களுக்கு வீட்டுத்திட்டம் எதுவும் வழங்கப்படவில்லையெனத் தெரிய வருகின்றது.

போரினால் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியிலும் பின்தங்கியுள்ள மணிபுரம், சுந்தரபுரம், தரணிக்குளம், பாவற்குளம், ஈஸ்வரிபுரம் மக்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் எதுவும் கிடைக்காமையால் அவர்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**போரினால் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியிலும் பின்தங்கியுள்ள மணிபுரம், சுந்தரபுரம், தரணிக்குளம், பாவற்குளம், ஈஸ்வரிபுரம் மக்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் எதுவும் கிடைக்காமையால் அவர்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.**

தற்காலிக வீடுகளில் வசித்துவரும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மழைகாலங்களிலும் அதிக காற்று வீசும் காலப்பகுதிகளிலும் அவலங்களை எதிர்கொண்டு வருவதாக அறியக் கூடியதாக உள்ளது.

தேர்தல் காலத்தில் எம்மிடம் வந்து வாக்குக் கேட்ட அரசியல்வாதிகள் எவரும் இதுவரை எமது வீட்டுத் திட்டத்திற்கான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. அண்மையில் பெய்ந்த மழையினால் வீட்டு உபகரணங்கள் உட்பட பலபெறுமதியான பொருள்களை நாம் இழந்துள்ளோம்.

மேலும் பாடசாலை செல்லும் மாணவர்கள் மழை காலத்திலும் பனி காலத்திலும், குளிரினால் பாதிப்படைந்து கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமங்ளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்திய வீட்டுத்திட்டம் கிடைக்கும் என்று நாம் காத்திருந்தோம். ஆனால் இதுவரை அது கூடக் கிடைக்காமையினால் ஏமாற்றத்துடன் உள்ளோம் என்று இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (க-402)

## பால் விற்பனையில் இடர்களை எதிர்கொள்ளும் கிராம மக்கள்

அக்கராயன்,பெப்.6

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயபுரம், முழங்காவில் பகுதிகளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் தினமும் சேகரிக்கப்படும் பாலை சந்தைப்படுத்துவதில் இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிகின்றது.

இங்கு மக்கள் மீள்குடியமர்ந்த ஆரம்பத்தில் நிறுவனங்கள் சில இந்தக் கிராமங்களுக்குச் சென்று பாலை நேரடியாகக் கொள்வனவு செய்து வந்தன.

ஆனால் தற்போது போக்குவரத்து நெருக்கடியைக் காரணம் காட்டி வந்த அந்த நிறுவனங்கள் பால் கொள்வனவை இடைநிறுத்தி விட்டன. இதன் காரணமாக கிளிநொச்சிக்குப் பாலை எடுத்துச் சென்று விற்பனை செய்ய வேண்டிய நிலை இந்தக் கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் கொள்கலன் ஒன்றுக்கு 100 ரூபாவுக்கும் மேலாக பஸ் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

மேலும் அதிக நேரம் விரயமாவதால் தமது ஏனைய தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)



ஒட்டுசுட்டான், கற்சிலைமடு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற தொழில்சார் பயிற்சி நெறிகளின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (க-500)

## கிளிநொச்சியில் நெல் அறுவடை செய்ய சிரமங்களை எதிர்கொள்ளும் விவசாயிகள்

### தொழிலாளர் இல்லாததும் ஒரு காரணம்

தற்போது அறுவடைக்குத் தயாராக உள்ள காலபோக நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர் என்று தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கைக்கான அறுவடை மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. ஆனால் போதிய இயந்திர வசதி மற்றும் தொழிலாளர்கள் இல்லாததால் நெல்லை அறுவடை செய்வதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் அதிகமான இடங்களில் அறுவடைகள் இடம்பெற்றுள்ளதால் கால்நடைகளின் கட்டுப்பாடுகளும் அற்றுப் போயுள்ளன. இதனால் கால்நடைகளால் பயிரழிவுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதேவேளை திடீரெனப் பெய்யும் மழையினாலும் நெல்லை அறுவடை செய்வதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. அறுவடை விரைவில் மேற்கொள்ளாவிட்டால் மழையில் நனைந்த கதிர்கள் உதிர்ந்துவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-6)

## வீதிப் புனரமைப்பில் அகற்றப்படும் மண்ணும் விலைபோகும் அவலம்

யாழ்ப்பாணம்,பெப். 6

வீதிப் புனரமைப்பின்போது அகற்றப்படும் மண் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்புப் பகுதிக்குச் செல்லும் இரணைப்பாலை, முல்லைத்தீவு, பரந்தன் ஆகிய இடங்களிலுள்ள வீதிகளின் புனரமைப்புப் பணிகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பணிகளின்போது அகற்றப்படும் மண்ணே சுமையொன்று 300 ரூபா தொடக்கம் 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

**வீதிப் புனரமைப்பு பணிகளின்போது அகற்றப்படும் மண்ணே சுமையொன்று 300 ரூபா தொடக்கம் 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.**

இவ்வாறு அகற்றப்படும் மண் ஒப்பந்தகாரர்களின் வாகனங்கள் மூலமாக குடிமனைகள் அற்ற பகுதிகளில் கொட்டிக்குவிக்கப்படுகின்றது. இதனை இரணைப்பாலை, ஆனந்தபுரம் பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் தமது பள்ளமான காணிகளை நிரப்புவதற்கென தமது சொந்த வாகனம் அல்லது வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்கள் மூலம் ஏற்றிச் செல்கின்றனர்.

அவ்வாறு மண் பெறுபவர்களிடமிருந்தே பணம் அறவிடப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வீதிப் புனரமைப்புப் பணிகளை மேற்பார்வை செய்யும் பொறியியலாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடம் முறைப்பாடு செய்தபோதும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

குறிப்பாக வீதி திருத்தப் பணியில் ஈடுபடும் வாகன சாரதிகளே (பக்கோ) இவ்வாறு மண்ணை விற்றுப் பணம் அறவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சாரதிகள் அனைவரும் தென் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-400)

## கிளிநொச்சி மாவட்டக் குளங்களில் இம்முறை மேலதிக நீர் தேக்கி வைப்பு

### பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி மாவட்டக் குளங்களில் பரீட்சார்த்தமாக மேலதிக நீர் சேமிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான முதலாவது விவசாயக் குழுக் கூட்டம் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மழை காரணமாக இரணைமடுக்குளம் மற்றும் ஏனைய குளங்களின் நீர்மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது. இதன் மூலமாக சிறப்பான போகச் செய்கையைச் செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. சில குளங்களில் பரீட்சார்த்தமாக மேலதிக நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

**இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் கடந்த காலங்களில் 28 அடிக்கும் குறைவாகவே பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் தற்போது 30 அடி 9 அங்குலமாக உள்ளது. கனகாம்பிகைக்குளம் 10 அடி 6 அங்குலமும், அக்கராயன்குளம் 23 அடி 10 அங்குலமும் நீரைக் கொண்டுள்ளன.**

இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் கடந்த காலங்களில் 28 அடிக்கும் குறைவாகவே பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் தற்போது 30 அடி 9 அங்குலமாக உள்ளது. கனகாம்பிகைக்குளம் 10 அடி 6 அங்குலமும், அக்கராயன்குளம் 23 அடி 10 அங்குலமும் நீரைக் கொண்டுள்ளன. இதனால் அக்கராயன் குளத்தின் கீழ் முழுமையான சிறுபோகத்தை மேற்கொள்ள முடியும்.

மேலும் நீர்மட்டத்தைப் பொறுத்த வரை கல்மடுக்குளம் 24 அடி 2 அங்குலமாகவும், கரியாலை நாகபடுவான்குளம் 10 அடி 5 அங்குலமாகவும், பிரமந்தனாறு குளம் 12 அடியாகவும், புதுமுறிப்புக்குளம் 16 அடியாகவும், வன்னேரிக்குளம் 9 அடி 2 அங்குலமாகவும், குடமுருட்டிக்குளம் 8 அடி 3 அங்குலமாகவும் நீரைக் கொண்டுள்ளன. இவ்வாறு குளங்களில் கடந்த காலங்களை விட பரீட்சார்த்தமாக மேலதிக நீர் சேமிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒரு நிறைவான சிறுபோக செய்கையை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

## செயற்றிறன் இல்லாத சங்கத்தினால் கிராம அபிவிருத்திப் பணிகள் பாதிப்பு

### கேப்பாபிலவு மக்கள் கடும் விசனம்

புதுக்குடியிருப்பு,பெப்.5

செயற்றிறன் இல்லாது காணப்படும் கேப்பாபிலவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் தமது கிராமத்தின் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படுவதாக அங்கு வசிக்கும் மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 1992 ஆம் ஆண்டு இந்தக் கிராமத்தில் கிராம அபிவிருத்தி சங்கம் அமைக்கப்பட்ட போதிலும் இன்று வரை அது புனரமைப்புச் செய்யப்படாத நிலையிலேயே உள்ளது.

அதனால் இந்தப் பகுதிக்கான வீதிப் புனரமைப்புப் பணிகள் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லையெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சூரியபுரம் பகுதியில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளமைக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலுள்ள ஒரு சிலரின் நடவடிக்கைகளே காரணம் எனவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி கேப்பாப்பிலவு கிராம அபிவிருத்தி சங்கத்தை உடனடியாகப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)

# 24 மெகாவாற்ஸ் மின்சாரத்தை ஆரம்பித்து வைப்பார் ஜனாதிபதி

## 12 ஆம் திகதி நிகழ்வு சுன்னாகத்தில்

**இந்த விநியோகம் ஆரம்பமானதும் யாழ். குடாநாட்டுக்கு மின்வெட்டு இல்லாமல் சீரான மின் விநியோகம் வழங்கப்படும்**

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ். குடாநாட்டில் 24 மெகாவாற்ஸ் மின்சாரம் விநியோகம் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சுன்னாகத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த விநியோகம் ஆரம்பமானதும் யாழ். குடாநாட்டுக்கு மின்வெட்டு இல்லாமல் சீரான மின் விநியோகம் வழங்கப்படும் எனவும் மின்சாரசபை அதிகாரி மேலும் கூறினார்.

தற்போது பிரதான வீதிகளின் அகலிப்புப் பணிகள் இடம்பெறுவதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு மின் கம்பங்கள் பின்நகர்த்தப்பட்டு வருகின்றன.

இதனைவிட ஏற்கனவே இருந்த மின்கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம்பங்களும் நடப்பட்டு மின் விநியோகப் பணிகள் சீராக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இந்த 24 மெகாவாற்ஸ் மின்சாரம் குடாநாட்டுக்கு வழங்கப்பட்டாலும் லக்ஸபான மின்சாரத்தைக் கொண்டு வரும் பணிகளும் முன்னெடுக்கப்படும் எனவும் அதிகாரி மேலும் கூறினார். (த-17)

# வலி. கிழக்குப் பகுதியில் குரங்குகள் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,பெப்.6

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் தற்போது குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப்பிரதேசங்களில் பகல், இரவு வேளைகளில் நடமாடித்திரியும் குரங்குகள் மக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்து அட்டகாசம் செய்வதுடன் விவசாய நிலங்களில் உள்ள பயிர்களையும் நாசமாக்கி சேதம் விளைவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரவு வேளைகளில் வீட்டுக் கூரைகள் மீது குதித்து அவை ஓடுவதால் மக்கள் தூக்கம் இன்றி அவதிப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் குரங்குகள் தென்மராட்சிப் பகுதியில் இருந்து கூட்டம் கூட்டமாக இந்தப் பகுதிக்கு வந்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர். (த-17)

# புறாப்பொறுக்கிப் பகுதியில் மதுபானச்சாலை வேண்டாம்

## பிரதேச செயலருக்கு மக்கள் மனு

வடமராட்சி,பெப்.6

கரணவாய் புறாப்பொறுக்கிப் பகுதியில் மதுபானச்சாலை அமைப்பதற்கான அனுமதியை இரத்து செய்யுமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் கரவெட்டி பிரதேச செயலருக்கு மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட புறாப்பொறுக்கிப் பகுதியில் மதுபானச்சாலை விற்பனை நிலையத்துக்கான அனுமதி வழங்கப்பட்டதையடுத்தே அந்த அனுமதியை இரத்து செய்வதற்கான கோரிக்கையைச் சமூக மட்ட அமைப்புக்கள் பிரதேச செயலருக்கு கையளித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மதுபானச்சாலை விற்பனை நிலையத்துக்கு அனுமதி வழங்கப்பட்ட இந்தப் பகுதியில் குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்துள்ளதுடன் மிகக் கிட்டிய தூரத்தில் இமையாணன் அ.த.க. பாடசாலை மற்றும் விளையாட்டுக்கழகம், எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ளதாகவும், மதுபானச் சாலை விற்பனை நிலையம் அமையும் பட்சத்தில் எதிர்காலத்தில் பல்வேறு பட்ட கலாசார மற்றும் சமூக சீரழிவுகளுக்கும் உட்படுவதுடன் மாணவர்களின் கல்வி நலனும் பாதிக்கப்படும் நிலை உருவாகலாம்.

எனவே மக்களின் நலன் கருதி இந்தப் பகுதியில் மதுபானச்சாலை அமைப்பதற்கான அனுமதியை இரத்து செய்யவும் என்று பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8-400)

### கூட்டங்களின் அறிக்கைகளை அனுப்ப கோரிக்கை

வடமராட்சி,பெப்.6

பிரதேச, நகரசபைகளின் கூட்ட அறிக்கைகளை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என பிரதேச நகர சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச, நகர சபைகளில் அவற்றின் தவிசாளரால் நடத்தப்படும் கூட்டங்களின் அறிக்கையும், அடுத்தடுத்த கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படும் முதல் கூட்ட அறிக்கைகளில் ஏதாவது திருத்தம் செய்யப்பட்டால் திருத்தத்துடன் கூடிய அறிக்கைகளையும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என பிரதேச, நகர சபைகளின் செயலாளர்களை யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் கோரியுள்ளது. (த-8)



நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு பெய்த மழையினால் யாழ். கரையோரத்தை அண்டிய தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. பொம்மைவெளி, சூரியவெளி, நாவாந்துறை, காக்கைதீவு, கொழும்புத்துறை, எழிலூர், மகேந்திரபுரம் போன்ற பகுதிகளில் மக்களின் குடியிருப்புக்களை வெள்ளநீர் சூழ்ந்து கொண்டது. (த-17)

### சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மருத்துவர் நியமனம்

தென்மராட்சி,பெப்.6

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியைப் பூர்த்தி செய்த வைத்திய அதிகாரி ஒருவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த வைத்திய அதிகாரியின் வருகையையடுத்து வைத்தியசாலையில் மேலும் பல சேவைகளை நோயாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப வைத்திய அதிகாரிகள் போதாமையால் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

புதிய வைத்திய அதிகாரியின் வருகையையடுத்து நோயாளர்கள் அவசரப்படாமல் குறைந்தது பத்து நிமிடங்களாவது வைத்தியர்களுடன் தமது நோய்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கும் வாய்ப்பு ஏற்படலாமெனவும் நோயாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். (த-9)

# திருட்டு, கொள்ளை தொடர்பான விசாரணைக்கு ஒத்துழையுங்கள்

## பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.6

திருட்டு, கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்றால் அது தொடர்பில் அந்த இடத்துக்கு உரியவர்கள் மட்டுமன்றி அயலவர்களும் விசாரணைகளின் போது முன்வந்து தகவல்கள் வழங்க வேண்டும்.

உங்களுக்கு இவை போன்ற சம்பவங்கள் ஏதாவது ஏற்பட்டால் அயலவர்கள் வந்து தகவல் தரும் வகையில் நீங்கள் முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

இவ்வாறு யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீடு உடைத்து, கடை உடைத்து திருடுவது கொள்ளையடிப்பது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுக்கும் வகையில் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அனைத்துக்கும் மேலாக இவற்றைத் தடுப்பதற்குப் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஓர் இடத்தில் திருட்டு, கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்றால் அந்த இடத்துக்கு உரியவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்கின்றனர்.

இவை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளும் பொழுது அந்த இடத்துக்கு உரியவர்கள் மட்டுமன்றி அயலில் வசிப்பவர்களும் முன் வந்து தகவல்களை வழங்க வேண்டும். உங்களுக்கும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றால் அயலிலுள்ளவர்கள் முன்வந்து தகவல்களை வழங்க வேண்டும். அதற்கு முன்மாதிரியாக நீங்கள் திகழ வேண்டும்.

அவ்வாறு செயற்படின் திருட்டு, கொள்ளைகள் இயன்ற வரை குறைக்க முடியும். இது தவிர இவ்வாறு செயற்படுபவர்கள் விரைவில் கைது செய்யவும் முடியும்-என்றார். (த-4)

# மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் பயிற்சிகள்

மாற்றுத்திறானாளிகளின் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் அதற்கான பயிற்சிகளை வழங்க வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் முன்வந்துள்ளது.

போர் மற்றும் விபத்துக்களால் அங்கங்களை இழந்து மாற்றுத் திறனுடையவர்களாக உள்ள அவர்கள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் தமது அன்றாட தேவைகளுக்கான வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

ஒரு சிலர் வருமானத்தைப் பெறுவதற்காக அங்கவீனத்தைக் காரணம் காட்டி இன்னொருவரிடம் தங்கி வாழும் நிலையில் உள்ளனர். இதனால் உளப் பாதிப்புகள் ஏற்படுவதுடன் அவர்கள் மேலும் நோயாளிகளாக மாறிவிடுகின்றனர்.

மாற்றுத் திறனாளிகள் ஏதோ ஒரு துறையில் ஆர்வம் உடையவர்களாக உள்ளபோதும் அதில் ஈடுபாடு காட்டுவதற்குரிய சில வழிகாட்டல்கள் இல்லாமையால் வீடுகளில் முடங்கியிருக்கின்றனர்.

இத்தகையவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நடவடிக்கைக்காக அவர்களுக்குத் துறைசார் பயிற்சிகளை வழங்க வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் முன் வந்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் தமது ஆற்றலுக்கு ஏற்ப பயிற்சிகளைப் பெற்றுத் தமாகவே சுய தொழில்களை மேற்கொள்ள முடியும். தையல், கைத்தொழில்கள், கணினி உட்பட தொழில் வாய்ப்புகளைப் பெறக்கூடிய வகையில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இன்னொருவருடன் தங்கி வாழும் நிலையை மாற்றுத் திறனாளிகள் சந்திக்க நேரிடாத வகையில் இந்தச் சுயதொழில் பயிற்சிகள் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆர்வமுடைய மாற்றுத் திறனாளிகள் ஆடியபாதம் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர் வாழ்வு நிறுவனத்துடன் இணைந்து தமது ஆற்றல்களை மேம்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# வரணியில் நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின

வரணி,பெப்.6

கடும் மழை காரணமாக வரணிப் பிரதேசத்தில் உள்ள வயல்களில் நெற்கதிர்கள் பெரும் சேதத்துக்குள்ளாகின.

அறுவடை நடைபெறும் சமயம் பார்த்து மழை பெய்யத் தொடங்கியுள்ளமை விவசாயிகள் மத்தியில் பெரும் மனக் கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக மாவில் வயல் வெளி, கிழக்கு வெங்கிராயன் வெளி, மாசேரி வயல் வெளி, வண்ணன் வயல் வெளி, சவனாவெளி, கறுக்காய், தம்பான் வயல்வெளி போன்ற பல இடங்களிலும் அறுவடை மும்முரமாக இடம்பெறுகின்றது.

இந்தச் சமயத்தில் பெய்த மழையினால் அறுவடை செய்த கதிர்கள் நிலத்திலும், அறுவடை செய்ய வேண்டிய கதிர்கள் முற்றிய நிலையில் வெள்ளத்தில் வீழ்ந்து உள்ள நிலையிலும் உள்ளன.

குறிப்பாக மாவில் வயல் வெளியில் கதிர்கள் அறுவடை செய்ய முடியாத நிலையில் தொடர்ந்து வெள்ளம் தேங்கியுள்ளது.

காலம் பிந்திய மழை காரணமாக தப்பிப் பிழைத்த நெற்பயிர்களும் தற்சமயம் பெய்த மழையினால் மேலும் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக மேற்குறித்த மாவில் நெல்வயல் பிரதேசத்துக்கும், மாசேரி கரவில் நெல்வயல் பிரதேசத்துக்கும் இடையில் வெள்ளம் பாயும் வாய்க்கால் மதகு கொள்ளளவு சிறியதாக உள்ளதால் வெள்ளம் உரிய முறையில் பாய முடியாத நிலை உள்ளது. (த-122)

## பழம்பெரும் நடிகை பானுமதி காலமானார்



'காதல் ஜோதி' உட்பட, 75 படங்களில், குணசித்திர வேடங்களில் நடித்த, பழம்பெரும் நடிகை எஸ்.பானுமதி, மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 67.

காதல் ஜோதி, தில்லானாமோகனாம்பாள், காதல் மன்னன், வியட்நாம் வீடு உட்பட 75 படங்களில், எஸ்.பானுமதி, குணசித்திர வேடங்களில் நடித்துள்ளார். அவர், தேனாம்பேட்டையில் உள்ள வீட்டில் வசித்து வந்தார். கடந்த சில மாதங்களாக, உடல் நலம் பாதிக்கப்பட்டு, வீட்டிலிருந்த படியே சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார். (வ)

## மஹிந்த வருகையை நிறுத்தாவிடில்

# மத்திய அரசிலிருந்து தி.மு.க. விலகத் தயாரா?

## வைகோ கேள்வி



சென்னை, பெப்.6

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகையைத் தடுக்க முடியாவிட்டால் மத்திய அரசிலிருந்து விலகத் தயாரா என்று தி.மு.கவிடம் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசுதான் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கிறது.

எனவே ஏனைய கட்சிகளைப் போல ராஜபக்ஷ வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தி.மு.கவும் அறிக்கை வெளியிடுவதை ஏற்க முடியாது. மத்திய அரசை வற்புறுத்தி ராஜபக்ஷ வருகையைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையெனில் மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டும். அதற்கு அந்தக் கட்சி தயாரா? அப்படி வெளியேறினால் தி.மு.கவை விமர்சிப்பதை நிறுத்திக் கொள்கிறேன்-என்றார். (வ)

# ஈழத்தமிழர் விவகாரம் குர்ஷித் கவனத்துக்கு

## கருணாநிதிக்கு சோனியா பதில்

சென்னை, பெப்.6

ஈழத் தமிழர்களின் பிரச் சினை குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் கவனத்துக்குக் கொண்டு சென் றுள்ளதாக தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி பதிலளித்துள்ளார்.

**இலங்கையில் உள்ள தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி ஆகியோருக்கு அண்மையில் கருணாநிதி கடிதம் அனுப்பியிருந்தார்.**

இலங்கையில் உள்ள தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி ஆகி யோருக்கு அண்மையில் கருணாநிதி கடிதம் அனுப்பியிருந்தார்.

அதில் இலங்கையில் தமிழர் பண்பாட்டுச் சின்னங்களும், கோயில்களும் அழிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். 90 இக்கும் மேற்பட்ட தமிழ் கிராமங்களின் பெயர்கள் சிங்களத்தில் மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். பெயர் மாற்றம் செய்யப்பட்ட கிராமங்களின் தகவல்களை இணைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த கருணாநிதி, மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதற்கு கடிதம் மூலம் பதில் அளித்த சோனியா காந்தி, கருணாநிதியின் கடிதம் தமக்குக் கிடைத்த தாகவும் அந்த விவகாரம் குறித்து வெளியுறவுத் துறை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

# மஹிந்த வருகையையொட்டி திருப்பதியில் பலத்த பாதுகாப்பு



**போராட்டத்தில் ஈடுப டுபவர்களை தமிழக எல்லையிலேயே தடுத்து நிறுத்த ஆந்திரப் பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.**

திருப்பதி, பெப்.6

திருப்பதிக்குச் செல்லவுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. திருப்பதிக்கு மஹிந்த செல்லவுள்ளதால் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம டைந்துள்ளன. மூன்றாவது முறையாக நாளை மறுதினம் 8 ஆம் திகதி மஹிந்த திருப்பதி செல்லவுள்ளார்.

இந்தநிலையில் எதிர்ப்பைக் காட்டப் போவதாக தமிழ் அமைப்புகள் எச்சரித்துள்ளதால் பலத்த பாதுகாப்புக்கு ஆந்திர அரசும், மத்திய அரசும் ஏற்பாடு செய்துள்ளன.

கொழும்பிலிருந்து தனி விமானம் மூலம் ராஜபக்ஷ பீகார் செல்கிறார். பின்னர் புத்தகாயா செல்லும் அவர் அங்கு வழிபாடு மேற்கொள்ளவுள்ளார். பின்னர் அதே விமானத்தில் ஏறி ரேணிகுண்டா செல்லவுள்ளார். அங்கிருந்து காரில் திருமலைக்குப் புறப்படுகிறார்.

திருப்பதிக்குச் சென்று தரிசனம் செய்து விட்டு இலங்கை திரும்புகிறார். ராஜபக்ஷ இந்தியாவுக்கு மீண்டும் மீண்டும் வருவதற்கு தமிழ் அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. பல்வேறு போராட்டங்களையும் அறிவித்துள்ளன.

இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் ஏற்கனவே திருப்பதிக்குச் சென்றுள்ளனர். திருமலையில் உள்ள திருப்பதி தேவஸ்தான அதிகாரி ஸ்ரீனிவாசராவ், பொலிஸ் அதிகாரி சுப்புராம ரெட்டி ஆகியோருடன் இலங்கை பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனை நடத்தினார். ரேணி குண்டா விமான நிலையம் தொடக்கம் திருப்பதி கோயில் வரை பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களை தமிழக எல்லையிலேயே தடுத்து நிறுத்த ஆந்திரப் பொலிஸார் முடிவு செய்துள்ளனர். இதற்காக வேலூர், திருவள்ளூர் மாவட்ட எல்லைகளில் தமிழகப் பொலிஸார் குவிக்கப்படுகின்றனர். அதேபோல் திருப்பதி கோயிலிலும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதால் கோயிலிலும் பதற்றமான சூழலே காணப்படுவதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

## தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் மருத்துவமனையில்



தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் சிறுநீரகக் கோளாறு காரணமாக ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு சேர்க்கப்பட்டார்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தகவல் அறிந்த தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி, மருத்துவமனைக்கு சென்று அன்பழகனின் உடல் நிலை குறித்து குடும்பத்தினரிடம் கேட்டறிந்தார். (வ)

## காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு

# அரசிதழில் வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவு

**மத்திய அரசின் அரசிதழில் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட வேண்டும் என்றும் தமிழ் நாடு மனு தாக்கல் செய்தது.**

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் இந்திய அரசு தனது அரசிதழில் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை வழங்கும்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காவிரி கடைமடைப் பகுதியில் தண்ணீர் இல்லாமல் கருகும் நெற்பயிர்களைக் காப்பாற்ற கர்நாடகத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும். மத்திய அரசின் அரசிதழில் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட வேண்டும் என்றும் தமிழ் நாடு மனு தாக்கல் செய்தது.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு கடந்த 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியானாலும் இதுவரை அதை அரசிதழில் வெளியிடாமல் இருந்த மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் தனது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

அதேபோல் நீதிமன்ற உத்தரவை மீறும் வகையில் தமிழகத்துக்கு காவிரியிலிருந்து தண்ணீரைத் திறந்து விடாத கர்நாடக அரசும் கண்டனத்துக்கு உள்ளானது.

காவிரி கடைமடைப் பகுதியில் கருகும் பயிர்களைக் காப்பாற்றும் நோக்கில், தமிழ்நாடு உடனடியாக 2 டி.எம்.சி. தண்ணீரை மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிட வேண்டும். அதற்கு ஈடான தண்ணீர் அளவை கர்நாடகம் தமிழகத்துக்கு வழங்க வேண்டும் எனவும் நீதிபதிகளை லோதா மற்றும் சலமேஸ்வர் ஆகியோர் உத்தரவிட்டனர்.

# கும்பமேளாவில் கலந்துகொள்ள நித்தியானந்தாவுக்கு எதிர்ப்பு



உத்தரப்பிரதேசம் அலகாபாத் நகரில் நடைபெறும் கும்பமேளா நிகழ்வில் நித்தியானந்தா கலந்து கொள்வதற்கு அங்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நித்தியானந்தாவின் பக்தர்கள் அங்கு முகாமிட்டு தினமும் பூசை செய்து வருகின்றனர். 10திணங்கள் நடைபெறவுள்ள இந்த பஜனை நிகழ்வில் நித்தியானந்தாவும் முகாமிட்டு தினமும் பஜனை செய்யவுள்ளார். இதற்கு அங்கு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து உத்தரப் பிரதேச மாநில அரசு, ஆட்சியாளர், உள்ளிட்டோருக்கு உத்தரப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மனு அனுப்பியுள்ளனர்.

அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

நித்தியானந்தாவை கும்பமேளாவில் பங்கேற்க அனுமதித்தால், ஆன்மிக நிகழ்ச்சிகளுக்கு பிரச்சினை ஏற்படலாம். விவாதத்துக்கு உள்ளானவர்களை, கும்பமேளாவில் கலந்து கொள்ள அனுமதிக்கக் கூடாது.

நித்தியானந்தாவை, அரசு தரப்பில் தடுக்கா விட்டால் கும்பமேளா ஏற்பாட்டாளர்கள் குழுவே நடவடிக்கை எடுக்கும். நித்தியானந்தா கும்பமேளாவில் கலந்து கொள்ள தடைவிதிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். (வ)

# மஹிந்தவின் வருகையை எதிர்த்து தி.மு.க. கறுப்பு உடை ஆர்ப்பாட்டம்

## 'டெசோ' கூட்டத்தில் தீர்மானம்



இந்தியாவுக்கு வருகை தரும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்பு உடை அணிந்து சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று 'டெசோ' அமைப்பு தீர்மானம் நிறைவேறியுள்ளது.

டெசோவின் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் தமிழக மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் தாக்குவதைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் எதிர் வரும் 18 ஆம் திகதியும் நாகப்பட்டினத்தில் எதிர் வரும் 19 ஆம் திகதியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் ஈழத் தமிழரிடத்தில் பொது வாக் கெடுப்பு மேற்கொள்வது தொடர்பான தீர்மானத்தை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும். இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவைக் கண்டித்து சென்னையில் கறுப்பு உடையுடன் போராட்டம் நடத்தப்படும்; டில்லியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக கருத்தரங்கம் நடத்தப்படும்; ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வ)

# 'ஜெ' யின் சொத்துக் குவிப்பு வழக்கு பெப்ரவரி 18 இற்கு ஒத்திவைப்பு



பெங்களூர், பெப்.6

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அரச சட்டத்தரணியாக புதிதாகப் பொறுப்பேற்ற பவானி சிங் அரசின் உத்தரவை காட்டி வாதம் செய்தார்.

ஆவணங்களை படித்துப் பார்க்க 2 மாதம் கால அவகாசம்தேவை என்றும் அவர் கூறினார். இதனையடுத்து 15 நாள் மட்டும் கால அவகாசம் கொடுத்து விசாரணையை நீதிபதி ஒத்தி வைத்தார்.

1991ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை முதல்வராக இருந்த போது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து குவித்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்கின் விசாரணை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. அந்த வழக்கில் ஜெயலலிதா மட்டுமின்றி அவரது தோழி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ)

### ஒசாமா சுட்டுக் கொல்லப்பட்ட அபோதாபாத்தில் 500 ஏக்கரில் பூங்கா

இஸ்லாமாபாத், பெப்.6
அல்குவைதா முன்னாள் தலைவர் ஒசாமா பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்ட அபோதாபாத்தில் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஒசாமா தங்கியிருந்த வீடு தற்போது இடிக்கப்பட்டு விட்டது. அதனுடன் தொடர்பு படுத்தி இந்தப் பூங்காவை நோக்கக் கூடாது என்று பாகிஸ்தானின் கைபர் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

முதலில் 50 ஏக்கரில் உருவாக்கப்படும் இந்தப் பொழுதுபோக்குப் பூங்கா பின்னர் படிப்படியாக 500 ஏக்கருக்கு விரிவுபடுத்தப் படும் என்று கூறப்படுகிறது.


5 ஆண்டுகளில் அதன் கட்டுமானப் பணிகள் முடியும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்துக்கு பாகிஸ்தான் அரசு தரப்பில் 3 கோடி அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ற)

## அபுதாபியில் விபத்து: ஆசியர்கள் 22 பேர் சாவு

துபாய், பெப்.6
அபுதாபியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் ஆசியாவைச் சேர்ந்த 22 பேர் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்துள்ளனர்.


அபுதாபியில் உள்ள அல்-அய்ன் நகரில் துப்புரவு செய்யும் நிறுவனத்திலிருந்து 46 ஊழியர்கள் பணியிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அப்போது, எதிரே வந்த கனரக வாகனம், வேகக் கட்டுப்பாட்டை இழந்து பஸ் மீது மோதியது. அதில் பஸ்ஸில் பயணித்த 22 பேர் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்தனர்.

கனரக வாகனத்தில் ஏற்றி வரப்பட்ட மணலில் புதைந்தே பலர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. (ற)




கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க மற்றும் தென்கொரிய கடற்படையினர் கூட்டுக் கடல் ஒத்திகையை நடத்தியிருந்தனர். அந்த கூட்டு கடற்போர் ஒத்திகையின்போது அமெரிக்க அணு நீர்மூழ்கிக் கப்பலும் பயன்படுத்தப்பட்டது.

## ஆப்கன்-பாகிஸ்தான் இடையே சமரச முயற்சிகளில் பிரிட்டன்



லண்டன், பெப்.6
பிரிட்டன் வந்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சாதாரி மற்றும் ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் ஆகியோருடன் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் பேச்சுக்களை நடத்தினார்.

ஆப்கன்-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அமைதியை ஏற்படுத்துவது, ஆப்கனில் இருந்து அடுத்த வருடம் நேட்டோ படைகள் விலகிய பின்னர் அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் என்பன பற்றியே விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தலிபான்களுடன் நேரடியாகப் பேச்சுக்களை மேற்கொள்ள ஆப்கன் அரசு விரும்புவதாகவும், அது நடப்பதற்கு பாகிஸ்தான் உதவும் என்று நம்புவதாகவும் ஆப்கன் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஜாவேத் தெரிவித்துள்ளார்.


தற்போது நிலவும் ஜனநாயக ஆட்சி முறை பாதிக்கப்படாது, அரசியல் சாசனத்தின் கீழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற பட்சத்தில் தலிபான்களுக்கு ஆப்கனில் அரசியல் பங்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பங்களாதேஷில் தீ விபத்து; 500 பேர் வீடின்றித் தவிப்பு

டாக்கா, பெப்.6
பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் ஷன்டிடவுன் பகுதியில் நேற்றுமுன்தினம் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. தீயில் சிக்கி ஏராளமான வீடுகள் எரிந்து நாசமாகின. ஏறத்தாழ 500 பேர் வீடுகள் இன்றித் தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகர்கானில் ஏற்பட்ட தீ ஷன்டிடவுன் முழுக்கப் பரவத் தொடங்கியது. சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புப் படையினரால் உடனடியாகத் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சுமார் ஒன்றரை மணிநேரப் போராட்டத்தின் பின்னரே தீ ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தது. எனினும் ஏராளமான வீடுகள் தீயில் முற்றாக அழிந்துள்ளன.

தீ பரவத் தொடங்கியதை அடுத்து மக்கள் வீடுகளை விட்டுத் தப்பியோடி னர். அதனால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.



எவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என்பது குறித்து தெரியவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர். விபத்துக் குறித்து உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற)

## பின்லேடன் வேட்டையில் துன்புறுத்தல் உத்திகள்

### ஒப்புக்கொண்டார் பனேட்டா

வோஷிங்டன், பெப்.6
அல்குவைதா இயக்கத்தின் முன்னாள் தலைவர் ஒசாமா பின்லேடன் மீதான தாக்குதல் நடவடிக்கையின் போது, 'துன்புறுத்தல்' உத்திகளைப் பயன்படுத்தியதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனேட்டா தெரிவித்துள்ளார்.



பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து விலக உள்ள பனேட்டா, தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றின்போதே இதனைத் தெரிவித்தார்.

செவ்வியின்போது, ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள 'ஜீரோ டார்க் தர்ட்டி' என்ற திரைப் படத்துக்குள், அல் குவைதா இயக்கத்தின் முன்னாள் தலைவர் பின்லேடன் பதுங்கி இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்வதற்காக சிலரை துன்புறுத்துவது போன்ற காட்சிகள் இடம் பெற்றிருப்பது உண்மையில் நடந்த வையா? என்று கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பனேட்டா, ஆமாம். பின்லேடன் பற்றிய சில உண்மைகளை பயங்கரவாதிகளிடமிருந்து பெறுவதற்காக, துன்புறுத்தும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியது உண்மைதான். ஆனால், பாகிஸ்தானின் அபோதாபாத் பங்களாவில் பின் லேடன் தங்கியிருந்ததைக் கண்டுபிடிக்க இத்தகைய தொழில்நுட்பங்கள் முக்கிய பங்கு வகித்ததாக திரைப் படத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளமை தவறு-என்று தெரிவித்தார். (ற)

## பிரிட்டிஷ் மன்னனின் எலும்புச் சுவடுகளே கார் தரிப்பிடத்தின் கீழ்



லண்டன், பெப்.6
பிரிட்டனில் உள்ள லெய்செஸ்டெர் நகரத்தில் கார் தரிப்பிடம் ஒன்றின் கீழ் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புச் சுவடுகள் 15 ஆம் நூற்றாண்டில் பிரிட்டனை ஆட்சி செய்த மன்னனான ரிச்சர்ட் 3 என்பவருக்குச் உரியவை என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த எலும்புச் சுவடுகள் குறித்து லெய்செஸ்டெர் பல்கலைக்கழகம் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. ஆய்வு முடிவுகள் குறித்து பல்கலைக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில்-

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புச் சுவடுகளுடன் ரிச்சர்ட் 3 மன்னனின் தாய் வழி வந்த சந்ததிகளின் டி.என்ஏ மாதிரி ஒத்துப் போகின்றது. அதை வைத்து எலும்புச் சுவடுகள் ரிச்சர்ட் 3 மன்னனுடையதே என்பதை உறுதிப்படுத்த முடியும். இவர் 1485 ஆம் ஆண்டு பிரிட்டன், பொஸ்வோர்த் போரின்போது உயிரிழந்திருக்கலாம். எலும்புச் சுவட்டின் மண்டைபோட்டில் காணப்படும் துளையைக் கொண்டு அதனை அனுமானிக்க முடிகிறது- என்றுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பின் விளைவாக வரலாற்றை மாற்றி எழுத வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ரிச்சர்ட் 3 மன்னர் பற்றிய விவரங்களை புகழ்மிக்க கவிஞரான சேக்ஷ்பியர் தனது படைப்புக்களில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## எகிப்துக்கு போர் விமானம் வழங்கியது அமெரிக்கா

கெய்ரோ, பெப்.6
எகிப்து இராணுவத்துக்கு 4 போர் விமானங்களை அமெரிக்கா வழங்கியது.

கெய்ரோவில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது உத்தியோகபூர்வமாக அவை எகிப்து இராணுவத்திடம் கையளிக்கப்பட்டன. 224 எப்-16 எஸ் எனும் நவீன போர் விமானங்களே வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தம் முன்னர் ஏற்படுத்தப்பட்டிருந்தது என்றும் இவற்றைப் போன்று இன்னும் 16 விமானங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் அமெரிக்கா வழங்க வேண்டி உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)


## கியூபா மக்கள் புரட்சியாளர்கள் பெருமிதம் கொள்ளும் காஸ்ரோ

ஹவானா, பெப்.6
கியூபா மக்கள் புரட்சியாளர்கள்- இவ்வாறு பெருமிதம் கொண்டார் கியூபாவின் முன்னாள் ஜனாதிபதியும், புரட்சியாளருமான பிடல் காஸ்ரோ.

86 வயதை எட்டியிருக்கும் பிடல் காஸ்ரோ நீண்ட காலத்தின் பின்னர் பொது இடத்தில் மக்களைச் சந்தித்தார். உடல்நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வரும் காஸ்ரோ, நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக எல்வெதாதோ பகுதிக்கு வந்திருந்தார்.

வாக்களித்த பின்னர் ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவித்த காஸ்ரோ-

கியூபா மக்கள் உண்மையிலேயே புரட்சிகரமானவர்கள். கடந்த 50 ஆண்டு



கால வரலாறே அதை நிரூபிக்கிறது. பொருளாதார, நிதி சார்ந்த பல்வேறு தடைகளை கியூபா மீது அமெரிக்கா விதித்தது. ஆனால், அந்தத் தடைகள் மூலம் கியூபாவை தோற்கடிக்க முடியவில்லை.

லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் கரீபிய கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. வெனிசுவேலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் உள்ளிட்டோரின் முயற்சி காரணமாக இந்தக் கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.- என்றார். (ற)

## நிதிப் பற்றாக்குறைக்கு வரி அதிகரிப்பே தீர்வாகும்

### – பராக் ஒபாமா

நியூயோர்க், பெப்.6
அமெரிக்காவின் வரவு - செலவுத் திட்டப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யக் கூடுதல் வரி அறவிடப் படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வரி அதிகரிப்பது அவசியம். எனினும் உடனடியாக வரிகள் உயர்த்தப்படும் என்று கருதமுடியாது. ஆனால் பாதிப்பு ஏற்படாத வகையில் படிப்படியாக வரிகள் உயர்த்தப்படும் என்பது மட்டும் நிச்சயம்- என்று தெரிவித்தார். (ற)

### ஈரான் ஜனாதிபதி, சபாநாயகரிடையே முறுகல்

சியோல், பெப்.6

ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஈரான் ஜனாதிபதி அகமதின் நிஜாத்துக்கும், அந்நாட்டு சபாநாயகர் அலி லரிஜானிக்கும் இடையே முறுகல்நிலை தோன்றியுள்ளது.

அரச சட்டத்தரணி ஒருவருக்கு பதவி வழங்கியமை தொடர்பில் சபாநாயகரின் குடும்பத்தினருக்குத் தொடர்பு உண்டு என்று ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள லரிஜானி சரியான விளக்கமின்மையே இதற்குக் காரணம் என்று தெரிவித்தார். கடந்த நாடாளுமன்ற அமர்வில் அவர்கள் இருவருக்கும் இடையிலான தர்க்கம் பெரும் வாக்குவதமாக வெடித்தது.(ற)

# அணு குண்டு சோதனை தவிர்க்கப்பட முடியாதது

## வடகொரிய ஜனாதிபதி திட்டவட்டம்

பியோங்யாங், பெப்.6

தமது நாட்டின் அணு பரிசோதனை தவிர்க்க முடியாத ஒன்று என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியா இராணுவ தளபதிகளுடனான சந்திப்பின்போதே வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்று சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.



வடகொரியாவின் அணுப் பரிசோதனை தளத்தில் தீவிர செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை செய்மதி நிழற்படங்கள் மூலம் தெரியவந்திருந்தது.

தமது மூன்றாவது அணு பரிசோதனைக்கான தயார் படுத்தல்களை வடகொரியா பூர்த்தி செய்துள்ளதாகத் தெரியவருகிறது. விரைவில் வடகொரியாவின் வடகிழக்கு பிராந்தியத்தில் நிலத்திற்கு கீழ் அணு சோதனை மேற்கொள்ளப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிம் ஜோங் தலைமையில் வட கொரிய மத்திய இராணுவ ஆணைக் குழுவின் சந்திப்பு இடம் பெற்றுள்ளமையை அந்த நாட்டு அரச தொலைக் காட்சி உறுதிப்படுத்தியுள்ளது. (ற)



ஏமனில் தீவிரவாதிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. பல்வேறு இடங்களில் தீவிரவாதிகளின் முகாம்களை ஏமன் இராணுவத்தினர் தாக்கியழித்து வருகின்றனர். தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக ஏமனின் வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்.

# பலஸ்தீன ஆதரவாளர்களை கைது செய்தது இஸ்ரேல்

## அவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடக்கம்

ஜெருசலேம், பெப்.6

பலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த 25 பேரை இஸ்ரேல் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் பலஸ்தீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று கூறப்படுகிறது. அதையடுத்து பலஸ்தீனம் - இஸ்ரேல் முறுகல் நிலை மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இஸ்ரேல் அரச படைக்கும், ஹமாஸ் இயக்கத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதல்கள் நிறுத்தப்பட்டபோதும் இரு தரப்புக்கும் இடையே முறுகல் நிலை தொடர்ந்தவண்ணம் உள்ளது.

தற்போது ஹமாஸ் இயக்கத் தலைவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் இஸ்ரேல் இறங்கியுள்ளது. இருதரப்புகளுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தாமல் தடுக்கும் ஒரு வழிமுறையே இந்த கைது நடவடிக்கை என்று விளக்கமளிக்கிறது இஸ்ரேல்.

கைது செய்யப்பட்டவர்களில் 22 பேர் ஹமாஸ் இயக்க மூத்த தலைவர்களாவர். 3 பேர் பலஸ்தீன நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் என்று கூறப்படுகிறது. முன்னர் தீவிரவாதிகளுக்கு உதவினார்கள் என்ற பெயரில் இதுவரை ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த 12 நாடாளுமன்ற உறுப்பினர்களை இஸ்ரேல் இராணுவம் கைது செய்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# விண்வெளி செல்வதற்கு காத்திருக்கிறேன்

## ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத்

தெஹ்ரான், பெப்.6

ஈரானில் இருந்து விண்வெளிக்கு அனுப்பப்படும் விண்கலத்தில் முதல் ஆளாக செல்ல மிகவும் ஆவலாகக் காத்திருக்கின்றேன்.- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாகக் கூறும் உலக நாடுகள், அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும் இரண்டு வாரங்களுக்கு முன் தமது சொந்தத் தயாரிப்பான விண்கலம் மூலம் குரங்கை விண்வெளிக்கு அனுப்பி, பாதுகாப்பாகத் தரையிறக்கியது ஈரான். அத்துடன் தமது முதலாவது விண்வெளித் திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது என்றும் அறிவித்தது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத்:-

ஈரானின் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளின் உழைப்பினால் விண்வெளித் திட்டத்தில் வெற்றி கண்டு வருகிறோம். விண்வெளிக்கு குரங்கு அனுப்பப்பட்டதை மேற்கத்திய நாடுகள் நம்ப மறுக்கின்றன. ஈரான் விண்கலம் மூலம் விண்வெளிக்கு மனிதர்கள் அனுப்பப்பட்டால் முதல் ஆளாக நான் செல்லத் தயாராக இருக்கிறேன்- என்று தெரிவித்தார்.

இதேவேளை, ஈரானின் விண்வெளித் திட்டம் குறித்து கவலை தெரிவித்து வரும் பல்வேறு சர்வதேச நாடுகள், ஈரானின் விண்வெளித்திட்டம் கவலைக்குரியது. விண்வெளித் திட்டம் என்ற போர்வையில் ஈரான், ஏவுகணை தயாரிக்கலாம் -



என்று சந்தேகம் தெரிவிக்கின்றன.

(ற)


4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

அம்பலவாணர் பரமநாதன்

(பொறியியல் உதவியாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.)



பிறந்தது 03.03.1958

இறந்தது 20.02.2009

திதி:அபரபக்க ஏகாதசி

அன்பான அப்பா!
நாலு ஆண்டுகளின் முன் எம்மைவிட்டுப் போனீர்கள்!
ஏகாதசியில் ஏகன் திருப்பாதம் கண்டீர்கள்.
வாழும் வரை வாழ்ந்தீர்கள்
எங்களையும் வளமுடன் வாழ வழி செய்தீர்கள்.
எம்மோடு வாழ்ந்து எம் வீட்டுத் தெய்வமாகி
இன்றும் எம்மோடு உள்ளீர்கள்.
உங்கள் நினைவுகள் எங்களுடன்.......
உங்கள் ஆசைகளை நிறைவேற்றுவோம்.

35/2, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

அன்புடன்
பிள்ளைகள்.

(29167K5.6.7)



சிறு குற்றங்கள் புரிந்து சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 1218 சிறைக்கைதிகள் இலங்கையின் 65ஆவது சுதந்திரதினத்தையொட்டி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். அவர்களில் 21 பெண் கைதிகளும் உள்ளடங்குகின்றனர்.

எல்லை நிர்ணயம் குறித்து

# மக்கள் கருத்தறியும் கால எல்லை நீடிப்பு

கொழும்பு,பெப்.6

புதிய உள்ளூராட்சி சபைகள் சட்டத்துக்கு அமைய பிரதேச எல்லை நிர்ணயம் தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறியும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணயம் குறித்து மக்கள் கருத்தறியும் திட்டம் கடந்த 31 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

எனினும் அதன் கால எல்லை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய புதிய எல்லை நிர்ணயம் தொடர்பில் தனி நபர்கள், குழுக்கள், அமைப்புக்கள் தங்கள் யோசனைகளை முன்வைக்க முடியும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

**புதிய எல்லை நிர்ணயம் தொடர்பில் தனி நபர்கள், குழுக்கள், அமைப்புக்கள் தங்கள் யோசனைகளை முன்வைக்க முடியும்**

அந்த யோசனைகளை எழுத்து மூலமோ அல்லது வாய்மூலமோ தேசிய எல்லை நிர்ணய சபையிடம் முன்வைக்குமாறு அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (ச)

# நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பம்

## கூட்டுறவு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,பெப்.6

இந்த ஆண்டு பெரும் போகத்துக்கான நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கூட்டுறவு மற்றும் உள் நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்கான நிர்ணய விலை அதிகரிக்கப்பட்டது.

அந்த விலைக்கு அமையவே இந்த முறை நெல் கொள்வனவு செய்யப்படுகிறது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, 28 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் நாட்டரிசி 32 ரூபா வரையிலும், 30 ரூபாவாக இருந்த சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 35 ரூபா வரையிலும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு கூறியுள்ளது. (ச)

# ஐ.நா.சபையில் 9 நாடுகளே இலங்கைக்கு ஆதரவு

## சர்வதேச நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்கிறார் வசந்த பண்டார



கொழும்பு,பெப்.6

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் சபை மாநாட்டின்போது, இலங்கைக்கு ஆதரவாக 9 நாடுகள் மட்டுமே வாக்களிக்கும். அதனால் சர்வதேச நெருக்கடிகளை இலங்கை சந்திக்க நேரிடும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலர் வசந்த பண்டார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தினால் அரசு பிளவுபடும்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளது. அதனை இந்தியாவும் ஆதரிக்கவுள்ளது.

அவ்வாறானதோர் நிலையில் இலங்கைக்கு ஆத ரவாக சீனா, ரஷ்யா உட்பட 9 நாடுகளே வாக்களிக்கும்.

பெரும்பாலான உறுப்பு நாடுகள் அமெரிக்காவுக்கு ஆதரவாகவும், இலங்கைக்கு எதிராகவுமே வாக்களிக்கும்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கியமை ஜனநாயக விரோதச் செயல் என்ற வாதத்தை அமெரிக்கா முன்வைக்கும்.

இவ்வாறான சூழ்நிலையில் தற்போதுள்ள 13 ஆவது திருத்தத்தை அரசு முழுமையாக நிறைவேற்றுமானால் அரசுக்குள் பிளவு ஏற்படும். எவ்வாறெனினும் 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்படும்-என்றார். (ச)

# அகதிப் படகுகளைக் கடலில் வைத்தே ஆஸ்திரேலியா திருப்பி அனுப்புவது சர்வதேச சட்டத்தை மீறும் செயல்

## ஐ.நா. சபை குற்றச்சாட்டு

ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் அகதிகள் படகை அகதிக் கோரிக்கைக்கான முதல் சோதனையையும் நடத்தாமல் தடுப்பதற்காக இலங்கையுடன் ஆஸ்தி ரேலியா செய்து கொண்டுள்ள உடன்படிக்கை சர்வதேச சட்டங்களை மீறும் செயலாகும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது.

அகதிக் கோரிக்கையுடன் வரும் நபர்களை கடலில் வைத்து எவ்வித காரணங்களையும் கருத்தில் கொள்ளாமல், திருப்பி அனுப்புவது, சர்வதேச சட்டங்களை ஆஸ்திரேலியா மீறுவதாகவே அமையும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

புதிய அகதி சட்டத்தின் படி, ஆஸ்திரேலியா தமது கடற்பரப்புக்கு வரும் எந்த ஒரு படகையும் அகதிக் கோரிக்கைக்கான முதல் பரீட்சிப்பு இன்றி திருப்பி அனுப்ப முடியாது என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அகதிகள் என்ற அடிப்படையில் ஆஸ்திரேலிய கடற்பரப்புக்குள் வரும் படகுகளை சர்வதேச கடற்பரப்பில் தடுத்து நிறுத்தப்படும் என்று அந்த நாட்டின் நிழல் குடிவரவு பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்திருக்கிறார்.

அகதிகளின் படகுகள் சர்வதேச கடற்பரப்பில் வைத்து தடுத்து நிறுத்தப்படுவது சர்வதேச சட்டங்களை ஆஸ்திரேலியா மீறுவதாக அமையாது என்று அவர் கூறினார்.

அகதிகள் சாசனம், மேலதிக எல்லைகள் அதிகாரத்தை கொண்டிருக்கவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.(ச)

# ஆப்கனுக்கு இலங்கைப் படைகளை அனுப்புவதற்கு ஜனாதிபதி மறுப்பு

## அமெரிக்காவின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,பெப்.6

இலங்கைப் படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைக்குமாறு அமெரிக்கா விடுத்துள்ள கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துவிட்டார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் படையினரை ஆப்கானிஸ்தானில் கடமையாற்றி வரும் அமெரிக்கப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத் திருந்தது. எனினும், இந்தக் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் போர் அமெரிக்காவின் போராகும். அந்தப் போரில் இலங்கைப் படையினரை ஈடுபடுத்த முடியாது என்று அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். நாடுகளின் உள் விவகாரப் பிரச்சினைகளில் நாம் ஒருபோதும் தலையீடு செய்யப் போவதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

2012 ஆம் ஆண்டில் 50 நாடுகளைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து 2 ஆயிரம் படையினர் ஆப்கானிஸ்தானில் கடமையில் இருப்பதாக சர்வதேச பாதுகாப்பு மற்றும் உதவிப்படை அறிவித்திருந்தது. ஆப்கானிஸ்தானில் இருக்கின்ற படையில் 68ஆயிரம் பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்று பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

# எழுநூறுக்கும் அதிகமான பாதுகாப்பற்ற ரயில் கடவைகள்

கொழும்பு,பெப்.ப6

நாட்டில் எழுநூறுக்கும் அதிகமான பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுகின்றன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவற்றில் அதிகளவில் விபத்துக்கள் இடம்பெறும் 45 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவுள்ளன என்று ரயில்வே இணைப் பதிகாரி பி.ஏ.டீ.ஆரியரத்ன தெரிவித்தார்.

அண்மையில் பலபிட்டிய பகுதியில் ரயில் கடவைக்கான பாதுகாப்பு வேலியை அமைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஜி.சீ.ஈ விசேட பரீட்சைக்கு 1800 மாணவர் தோற்றுவர்

## பரீட்சைகள் திணைக்களம் தகவல்

கொழும்பு,பெப்.6

மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கென நடத்தப்படவுள்ள விசேட ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சைக்கு 1800 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்டிருந்த காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை இடர் காரணமாக ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு பல மாணவர்கள் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டது.

அந்த மாணவர்களுக்கு எதிர்வரும் 9ஆம்,10ஆம்,11ஆம் திகதிகளில் விசேட பரீட்சையை நடத்த பரீட்சைகள் திணைக்களம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

அதற்கமைய கடந்த டிசம்பர் மாதம் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போன 1800 மாணவர்கள்இந்த விசேட பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

மாத்தறை, குருநாகல், பொலநறுவை, மொனராகலை, மட்டக்களப்பு மாவட்டம், சிலாபம் ஆகிய இடங்களில் விசேட பரீட்சைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மாணவர்களுக்கான பரீட்சை அட்டைகள் நேற்றுமுன்தினம் முதல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(ச)

# கடைக்குள் புகுந்தது 'அம்புலன்ஸ்'

கொழும்பு,பெப்.6

அவசர பிரிவில் அனுமதிக்க வேண்டிய நோயாளியை ஏற்றிக்கொண்டு சென்ற அம்புலன்ஸ் கடைக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கந்தானை வைத்தியசாலையிலிருந்து பேராதனை வைத்தியசாலைக்கு நோயாளி ஒருவரை ஏற்றிக் கொண்டு பயணித்த அம்புலன்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கட்டுகஸ்தோட்ட, மாத்தளை வீதியில் இடம்பெற்றுள்ளது.

அம்புலன்ஸில் சென்ற நோயாளிக்கும் அவருக்கு உதவிக்கு சென்றவருக்கும் எவ்விதமாக பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

அம்புலன்ஸ் வாகனத்தின் சாரதி மற்றும் அவரது உதவியாளர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அம்புலன்ஸில் பயணித்த நால்வரையும் பிரதேசவாசிகள் வேறு வாகனத்தின் மூலமாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி சிந்துஜா ஜெலீபன் அவர்களின் தாயார்
**திருமதி நேசராசா நேசமலர்**
அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவிப்பதுடன். ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம், யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (சி/6231)(5.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10.11.1940

மறைவு 07.01.2013

**அமரர் இளையதம்பி நல்லைநாதன்**

கடந்த 07.01.2013 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இளையதம்பி நல்லைநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் திங்கட்கிழமை (04.02.2013) கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியம் இன்று (06.02.2013) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

பள்ளம் சீமா, ஏழாலை மேற்கு,
ஏழாலை. (29163)(6.7.11)

குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

இரகுநாதன் உதயகரன் என்பவருடைய NIC, License, A TM Cards ஆகிய ஆவணங்கள் உள்ளடங்கிய பேஸ் (02.02.2013)அன்று பருத்தித்துறை பிரதான வீதியில் தவறிவிட்டன.இதனைக் கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 2627 600 (27734)(45.6.7)

## பஸ் விற்பனைக்கு

முல்லை-கிளிநொச்சி வழி அனுமதியுடன் அசோக் லேடன் பஸ் விற்பனைக்குண்டு.

(29053)(5.6.7) தொடர்பு:077 624 7657

## TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/=,பைனியர் அம்பிளிபயர், Box வகைகள்,DVD என்பன

தொடர்பு:0770440570 (அப்பளம்)
சோனி ரேட் சென்ரர் (கொமசல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம். (28388)(2.6.7)

## மணமகள் தேவை

68 இல் பிறந்த 8இல் செவ்வாய் 15½ பாவம் ஜேர்மனியில் பிரஜா உரிமை பெற்று வந்துள்ளார். படித்த மணமகள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.: 077 607 0862
(29254)(5.6.7)

## ஜனா கொம்பியூட்டேர்ஸ்

''கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு''
கொம்பியூட்டர் - 10,000/= தொடக்கம்
C.R.T. மொனிற்றர் - 1500/=, L.C.D மொனிற்றர் - 4000/=
T.V. - 6000/= மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கணினி திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777508908.
௮ தயாநகர், கிளிநொச்சி. (26317) (6.7.2))

## வாகனம் விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள
8 சிறிxxxx walkswagon கார்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 768 3030
(சாவகச்சேரி)
(18034)(5.6.7)

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

உதிரிப்பாகத் திருத்தம் மீள்சுழற்சி

சகல விதமான மோட்டார் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக்கொடுக்கப்படும்.
இல. 06, கஸ்தூரியார் லேன், [illegible], கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல.30/27, [illegible], நல்லூர்.
Tel: 021 222 8680, 0775925088, 0750407430 (சி/6217)(2.6)

## கடை வாடகைக்கு

A9 வீதியில் புத்த கோயிலுக்கு முன்பாக, கரடிப் போக்கு சந்தியில் அமைந்துள்ள 12 அடி அகலமும் 40 அடி நீளமும் கொண்ட ஒரு மாடி கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு.

A9 வீதி,
கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.

தொடர்பு: 0774793280 (26332)(6.7.11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா **கோவிந்தபிள்ளை**



தோற்றம் 09.12.1938


மறைவு 19.01.2012

குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நட்டாங்கண்டல், மல்லாவி (18033)(6.7.11) குடும்பத்தினர்.

## நீங்காத நினைவலைகள்

31 ஆம் நாள் நினைவஞ்சலி | 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் **வல்லிபுரம் பேரம்பலம்**
(இளைப்பாறிய புகையிரத சாரதி)

திருமதி **பேரம்பலம் விசாலாட்சி**

21.11.1928 மலர்வு 21.02.1939
07.01.2013 உதிர்வு 23.01.2009

உலகிற்கு எமைத்தந்து உத்தமராய் வளர்த்தெடுத்து
ஊரார் போற்றிய வாழ்வளித்த எங்கள் அன்புத் தெய்வங்களே.....

நீங்கள் கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்....
விழிகளிலே விட்டு சென்ற நினைவுதன் துளிகளெல்லாம்
நித்தம் எங்கள் விழிதனை நனைத்துச் செல்கிறதே....

ஆண்டுகள் கடந்திட்டாலும்
ஆறாது எங்கள் துயர்
ஆசீர்வதிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு
தொடர்கின்றோம் எம் வாழ்வுதனில் – என்றும்

நெஞ்சமெல்லாம் நீவிருப்பீர்
நிறைவோடு (மீ) உமை நிறுத்தி
இறை (வன்)யோடு கலந்திட்டாலும்
இந் நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை எல்லோரும் பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை (சி/6232)(45.6.7)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# IMMEDIATE VACANCY

Ten (10) months contract - Starting date immediately - **Women are strongly encouraged to apply.**

| | |
|---|---|
| Position | **: Field Officer** |
| Project | **: Cash Transfer and Home Gardening** |
| Area of Operation | **: Mullaitivu District** |
| Supervisor | **: Project Coordinator** |

SAH is implementing humanitarian and early recovery projects in the North of Sri Lanka under its humanitarian aid project.

**1. Purpose:**

This position will directly implement and monitor implementation in the field and report deviations directly to the Project Coordinator. Field Officer will work directly with project beneficiaries to achieve project outputs that include: improve food security through home gardening, and improving household livelihoods through distribution of household cash grants or cash for work activities. The field officers will monitor the delivery of inputs and ensure that timely relevant training sessions and follow up are provided in consultation with Training Coordinator. The Field Officers will coordinate with respective government line ministries in specific project locations and local CBO groups to ensure maximum utilization of project resources.

**2. Responsibilities:**

a. Oversee the execution of field project implementation plans.
b. Monitor and prepare progress reports on project activities.
c. Compile all project data and information for analysis.
d. Organize and provide training to partners and beneficiaries.

**6. Competencies & Skills:**

- Academic Requirements : **Degree** in Agriculture / **Diploma** in Agriculture
- Experience : **Two** years with degree **or Four** years with Diploma
- Required Basic Competencies

Technical Basic Competencies - Mandatory

1. Motor Bike Riding
2. Skills on using Microsoft Office packages
3. Logistic Management Skills
4. Documentation Skills
5. Participatory Analytical techniques
6. Community Development skills
7. Training & Facilitation
8. Organizing Skills
9. Social Mobilization Skills
10. Report writing

Please send your application **before 11th February 2013** to the below address or send via E-mail to recruitment@sah.lk Fax to 011-5557120 and only short listed candidates will be informed. **Swiss Labour Assistance SAH** Human Resources Department 27, 2/4, Alfred Place, Colombo 3.

The details job description is available at http://www.hpsl.lk/Catalogues.aspx?catID=16.

(29172)(5.6.7)



மழைக்கு மத்தியிலும் இலங்கையின் 65 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் ஏறாவூர் பிரதேச செயலர் எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

# இன முரண்பாடுகளைத் தடுக்க வேலைத் திட்டங்கள் அவசியம்

## அல் ஹிறா பௌண்டேஷன் அமைப்பின் தலைவர் சொல்கிறார்

மட்டக்களப்பு,பெப்.6

இன முரண்பாடுகளைத் தடுக்க வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதன் ஒரு கட்டமாகவே அனைத்து மத தலைவர்களையும் ஒன்றிணைத்து இலங்கையின் 65ஆவது தேசிய சுதந்திர தினத்தை ஒலுவில் பிரதேசத்தில் கொண்டாடியுள்ளோம்.

இவ்வாறு அல் ஹிறா பௌண்டேஷன் அமைப்பின் தலைவர் ஏ.எல்.அலாவுத்தீன் தெரிவித்தார்.

ஒலுவில் அல் ஹம்றா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை பல்லின இனங்களையும் மதங்களையும் கொண்ட நாடாகும். எனினும் எல்லா மதங்களிலும் பாவங்களாகக் கருதுகின்ற குற்றச்செயல்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இன, மத முரண்பாடுகள் நாட்டின் பல முனைகளிலும் கூர்மையடைந்து வருவதற்கான சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இத்தகைய நிலையைப் போக்குவதற்கு அன்பைப் பரிமாறுகின்ற நிகழ்வுகள், பரஸ்பர புரிந்துணர்வை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுக்க வேண்டும்.

எனவே இன முரண்பாடுகளைத் தூண்டக் கூடிய செயற்பாடுகளை இனங்கண்டு அவற்றைத் தடுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.-என்றார்.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலர் வி.ஜெயரூபன், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹாஜா முஹைதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# புத்தர் சிலையுடன் மூவர் மாட்டினர்

இரத்தினபுரி,பெப்.6

பெறுமதி வாய்ந்த புராதன புத்தர் சிலையுடன் குருவிட்ட, புஸ்ஸெல்ல விகாரைக்கு அருகில் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருவிட்ட பொலிஸாரால் அவர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புஸ்ஸெல்ல விகாரைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை இரவு நேரக் கடமையில் இருந்த நடமாடும் பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

அதன்போது வாகனத்தில் இருந்து 10 அடி உயரமான தங்க நிற புத்தர் சிலை கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த புத்தர் சிலை நேற்று முன்தினம் இரவு கொடக்கவெல, வெல்கெனியாய



சுமணாராம விகாரையில் திருடப்பட்ட சிலை என்று கண்டறியப்பட்டது.

சந்தேகநபர்கள் தெஹிவளை, சியம்பலாண்டுவ, கொட்டதெனிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென கொடக்கவெல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

# பல்கலைக் கட்டடங்களை திறந்து வைத்தார் மஹிந்த



அம்பாறை,பெப்.6

கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞானபீடத்தின் விலங்கியல்துறை கட்டடத் தொகுதியையும், நல்லையா மண்டபத்தையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

விசேட ஹெலிகொப்டரில் கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் வந்திறங்கிய ஜனாதிபதியை, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் உட்பட பலர் வரவேற்றனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட மாணவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடியதுடன், விலங்கியல் ஆய்வு கூடத்தையும் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான எஸ்.பி.திஸாநாயக்க, றவூப் ஹக்கீம், பசீர் சேகுதாவூத், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், பிரதி அமைச்சர்களான எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# ஒலுவில் பல்கலைக்கழக வளாகத்தில் இன்று எட்டாவது பட்டமளிப்பு விழா

அம்பாறை,பெப்.6

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 8ஆவது பட்டமளிப்பு விழா இன்று புதன்கிழமை ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது என்று பதிவாளர் எச்.அப்துல் சத்தார் தெரிவித்தார்.

இன்றையதினம் உள்வாரியாகப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த 416 பேரும், வெளிவாரியாகப் பயின்ற 17 பேரும் பட்டம் பெறவுள்ளனர்.

இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் காலை அமர்வில் உள்வாரி பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்த பட்டதாரிகளும், மாலை அமர்வில் வெளிவாரி பட்டப் படிப்பைப் பூர்த்திசெய்த பட்டதாரிகளும் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

காலை அமர்வுக்கு உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பிரதம விருந்தினராகவும், மாலை அமர்வுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியருமான காமினி சமரநாயக்க பிரதம விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

உள்வாரியாக பிரயோக விஞ்ஞான பீடத்தில் 43 பேரும், கலை, கலாசார பீடத்தில் 179 பேரும், இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழி பீடத்தில் 88 பேரும், வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் 106 பேருமாக மொத்தம் 416 பேரும், வெளிவாரியாக கலைமாணி 103 பேரும், வியாபார நிர்வாக மாணி 64 பேரும், வணிக மாணி 3 பேருமாக மொத்தம் 170 பேர் பட்டம் பெறவுள்ளனர்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் 7 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா முதல் தடவையாக ஒலுவில் வளாகத்தில் கடந்த ஆண்டு மே மாதம் 19ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

# இளைஞனின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,பெப்.6

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி காட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

களுவன்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த செல்வராஜா ஜனுராஜ் (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# திருகோணமலை மாவட்டத்தில் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு

திருகோணமலை,ஜன.0

திருகோணமலை சந்தைகளில் கடந்த சில வாரங்களாக காய்கறிகளின் தட்டுப்பாடு அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் தம்புள்ள மரக்கறி நேற்றும் கிராமப்புற விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளும் சந்தைக்கு வருவது குறைவடைந்து காணப்படுகிறது.

அதனால் கடந்த போகத்தில் உற்பத்தி செய்ய வேண்டிய அனைத்து காய்கறிச் செய்கையும் அழிவடைந்துள்ளதால் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கத்தரிக்காய் 1 கிலோ ரூபா 200, தக்காளி 1 கிலோ ரூபா 150, பச்சை மிளகாய் 1 கிலோ ரூபா 300 என விற்பனை செய்யப்படுகிறது. (ச-40)

# டெங்கு காய்ச்சலால் சிறுவன் உயிரிழப்பு

அம்பாறை,பெப்.6

கல்முனைப் பகுதியில் டெங்கு காய்ச்சலினால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரின் 6 வயதான மகனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பு லேடி ரிச்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் என்று கல்முனை சுகாதார வைத்தியப் பிரிவினர் தெரிவித்தனர். (ச)

# மரண தண்டனையை நிறைவேற்றுங்கள்!

## போகம்பரையில் கைதிகள் மூவர் ஆர்ப்பாட்டம்

கண்டி,பெப்.6

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளில் மூவர் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டி, போகம்பரை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மரண தண்டனை கைதிகள் மூவரே இவ்வாறு சிறைச்சாலையின் கூரையின் மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் தற்போது மரண தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உறவினர், நண்பர்கள் விடயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும்.

**இடபம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

**மிதுனம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**கடகம்:** மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். பிராத்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பொருள்கள் விற்பனையாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும்.

**நாளை**

தை -25 வியாழக்கிழமை 07.02.2013
திதி: துவாதசி மு.இ. 07.19 வரை
நட்சத்திரம்: மூலம் கா. 09.56 வரை
சுபநேரம்: 08.05- 09.35 வரை
ராகுகாலம்: 02.05- 03.35 வரை

**துலாம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**தனுசு:** வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். திடீர் பயணங்கள், அலைச்சலால் திணறுவீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**மகரம்:** சகோதர வகையில் நன்மை கிடைக்கும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மீனம்:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 5 | | | 4 | 2 | 6 | |
| 2 | | | | 1 | | 7 | | 4 |
| | | 9 | | | | | | |
| | | | 1 | 5 | 8 | | 2 | |
| | | 7 | | 6 | | 5 | | |
| | 8 | | 7 | 2 | 3 | | | |
| | | | | | | 9 | | |
| 6 | | 2 | | 9 | | | | 5 |
| | 9 | 3 | 2 | | | 8 | 7 | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 9 | 1 | 8 | 5 | 4 | 2 | 3 |
| 3 | 4 | 5 | 9 | 7 | 2 | 6 | 8 | 1 |
| 1 | 8 | 2 | 6 | 3 | 4 | 5 | 9 | 7 |
| 7 | 6 | 3 | 8 | 2 | 9 | 1 | 5 | 4 |
| 9 | 5 | 4 | 3 | 1 | 7 | 8 | 6 | 2 |
| 8 | 2 | 1 | 5 | 4 | 6 | 7 | 3 | 9 |
| 5 | 3 | 8 | 7 | 9 | 1 | 2 | 4 | 6 |
| 4 | 1 | 6 | 2 | 5 | 3 | 9 | 7 | 8 |
| 2 | 9 | 7 | 4 | 6 | 8 | 3 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.






பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்னிசை நிகழ்வு

வடமராட்சி,பெப்.6

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

நுண்கலைமாணி க.சசிக்குமார் பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசையை நிகழ்த்துவார். (3)

# உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.6

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**கணிதப் பிரிவு (ஆங்கிலமொழி மூலம்)**

பு.நிலக்ஸ்சி- 2ஏ,சி,

**கணிதப் பிரிவு (தமிழ் மொழி மூலம்)**

ஆ.ஜெறோமி-2ஏ,சி அ.சரண்யா- 2பி,சி, அ.சாரங்கா- 2பி,சி, த.சுவர்ணா -பி,2சி, யோ.தீபிகா- பி,சி, எஸ்

**உயிரியல் பிரிவு (ஆங்கில மொழி மூலம்)**

த.பிரியந்தி-3ஏ,அ.மேனகா - ஏ,2பி, கே.கேம சாலினி- ஏ,2பி, சி.கவினா- 2பி,சி, கார்த்திகா யினி-3சி, ச.சாருஷா-3சி

**உயிரியல் பிரிவு- (தமிழ் மொழி மூலம்)**

ப.சர்மிளா-2ஏ,பி, நி.சோபினா-2ஏ,சி, க.லக்சனா- ஏ,2பி, த.மைதிலி-3பி, ச.சோபிகா- பி,2சி, பா.சண்முகப்பிரியா-பி,2சி, ப.மைதிலி -3சி, செ.சருஜா -3சி, வி.ஞான கீதா-3சி

**வர்த்தகப் பிரிவு**

ந.மதுரா-3ஏ, க.தர்ஷிகா-3ஏ, எட்மன்- அனிதா மரியா-3ஏ, ச.கவிதா-2ஏ,பி, வா.சாரங்கா-2ஏ,பி, லூ.தர்சிகா-ஏ,2பி, எம்.மேரிஸ்ரெற்றிக்கா-ஏ,2பி, ந.தனுஷியா-ஏ,2பி, சூ.சிவதனுஷா-ஏ,பி,சி

**கலைப் பிரிவு**

க.மாதுமை- 2ஏ,சி, ஜெ.தனலட்சுமி- ஏ,2பி, செ.அனோஜா-ஏ,பி,சி, இ.ஹம்சவதனி- ஏ,பி,சி, த.வைதேகி-ஏ,பி,சி, ஜோ.மாதவி-ஏ,2சி, இ.சோபிகா-ஏ,2சி, நா.வினிதா-ஏ,2சி, த.பிரதீபா- 2பி,சி, ப.பிரவீணா-2பி,சி, பா. கஸ்தூரி-2பி, எஸ், ந.தர்சிகா-2பி,எஸ்

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

பா. கபிலன்-3ஏ, க.கிருஷானந்த்- 3ஏ, க.செந்தாளன்- 3ஏ, பு.தாஸ்மதன்- 3ஏ, ப.பானுகோபன்- 3ஏ, ச.நிஷாந்தன்- 3ஏ, ஞா.துஷாந்தன்-2ஏ,பி, சி.சரத்பவன்-3ஏ, சி.கமலக்கண்ணன்-2ஏ,பி, த.கஜன்-ஏ,2பி, கு.சுதர்சன்-2ஏ,பி, க.பிரசாந்-ஏ,2பி

**உயிரியல் பிரிவு**

சி.இளங்கீரன்-3ஏ, பா.துவாரகன்-2ஏ,பி, சி.செந்தூரன்-2ஏ,பி

**வர்த்தகப் பிரிவு**

ச.பரதன்-3ஏ, ம.கோணேஸ் வரன்-3ஏ, நா.தினேஷ்- 2ஏ,பி, இ.அன்பரசன்-2ஏ,சி, கு.ராஜ்குமார் -ஏ,2பி, மு.சேந்தன்-2ஏ,சி

**கலைப் பிரிவு**

பா.சூரியா-ஏ,பி,சி, சி.நந்த குமார்-ஏ,பி,சி

## நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி பாடசாலைக்கு குத்துவிளக்கு அன்பளிப்பு

வடமராட்சி,பெப்.6

நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயத்துக்கு பெரிய குத்துவிளக்கு ஒன்றை நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திஸ்ஸ கங்காரு தனது சொந்தச் செலவில் இலவசமாக வழங்கியுள்ளார்.

வித்தியாலயத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் மங்கல விளக்கு ஏற்றுவதற்கு இந்தக் குத்துவிளக்கு பயன்படுத்தப்பட்டு வரு கின்றது. (3-8)

## கடுக்காய் வைரவர் கோயிலுக்கு புதிய களஞ்சிய அறை

வடமராட்சி,பெப்.6

புலோலி தெற்கு சிங்கை நகர் கடுக்காய் வைரவர் கோயிலுக்கு புதிதாக களஞ்சிய அறை, மற்றும் கருமபீடம் கொண்ட கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

கோயிலுக்கு களஞ்சிய அறை ஒன்று இல்லாத குறையைப் போக்க பரிபாலனசபை மேற்கொண்ட முயற்சியினால் இதற்கான கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (3-8)

## கும்பாபிஷேகம்

கொக்குவில் கிழக்கு, கருவப்புலம் வீதி, புற்றடி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.05 மணி முதல் நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் பால்காப்பு, எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறும். (3)

# மெய்வன்மைப் போட்டிகள்

காரைநகர், பெப்.3

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அதிபர் எஸ்.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொன்.சிவானந்தராசா கலந்துகொள்ளவுள்ளார். (3-250)

★ ★ ★

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதா னத்தில் அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரசேகரமும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எ.சண்முககுலகுமாரும், கௌரவ விருந்தினராக கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எஸ்.செல்வநேசனும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (3-86)

★ ★ ★

கோப்பாய் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் அதிபர் க.வீரசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் கலந்துகொள்வார்.சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசுப்பிரமணியம், பாடசாலை பழைய மாணவர்களான எஸ்.விஜயரூபன், ஆ.ஜெயபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (3)

★ ★ ★

## பிற்போடப்பட்டுள்ளன

இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சீரற்றகால நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3-253)



## அரசாங்க பெறுகை அறிவித்தல்

### சமூக சேவைகள் திணைக்களம்- வட மாகாணம்
### ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்ளல்-2013/2014

2013/2014 ஆம் ஆண்டுக்கு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 01.04.2013 தொடக்கம் 31.03.2014 வரையான காலப்பகுதிக்கு சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்கான பெறுகை கோரப்படுகின்றது. விருப்பமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகை பத்திரத்திற்கும் ரூபா500 வீதம் பணம் செலுத்தி 19.02.2013 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி வரை எமது திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி பெறுகை பத்திரங்கள் யாவும் 20.02.2013 ஆம்திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு பிற்பகல் 2.45 மணிக்கு திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்களையும், மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் எமது திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் தொழில் திணைக்களத்தின் நியமங்களுக்கு உட்படாத பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**ந.இன்பராஜ்,**
**பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்,**
**வடமாகாணம்.**

(C/6238)(6.7.11)

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கிவரும்
**சஜிமோட்டஸ் (ஜோன்டியர்)**
நிறுவனத்திற்கு பெண் பணியாளர்களுக்கான பணிநிலை வெற்றிடம் காணப்படுகின்றது.

**தகைமைகள் :**
- ★ A/L சித்தி
- ★ கணினி அறிவு
- ★ கணக்கியல் அறிவு

தகைமையுடையவர்களுக்கு **08-02-2013 அன்று** நேர்முகத்தேர்வு நடைபெறும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும் தொடர்புகளுக்கு.

**JOHN DEERE SAJE MOTOR'S**
**NO -121, KANDY ROAD,**
**KILINOCHCHI.**
**T.P - 0214925623.**

(A/6237)(2.6.7)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கந்தையா**
**கணபதிப்பிள்ளை**

தோற்றம்
10.05.1924

மறைவு
03.02.2008



ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே
உம் நினைவுகளுடன்.

67/8, சீனிவாசகம் வீதி,கொட்டடி. **குடும்பத்தினர்.**

(29995)(6.7.4)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
**ஐயம்பிள்ளை சிவமூர்த்தி**

திதி: அபரபக்க ஏகாதசி

அன்னை மடியில்
01 . 01 . 1953



ஆண்டவன் அடியில்
07 . 01 . 2013

கதிரவன் எம்முன் நீ எழுந்திடுவாய்...
உன் மௌனமொழி கொண்டு இறையதை தொழுதிடுவாய்
இரக்கமே உன் மனம்கொண்டு ஜீவராசிகளையும் காத்திடுவாய்
உன் நித்திய சுகத்தை அனுபவித்திட இறையருள் கிடைக்கும்.

கடந்த (07.01.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது சகோதரனின் அந்தியேட்டிக் கிரியை (04.02.2013) அன்று கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று (06.02.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வதுடன் அவரின் இறுதிக்கிரியைகளின் போது கலந்துகொண்டோருக்கும் எமக்கு ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
(29234)(45.6.7)
**குடும்பத்தினர்.**

## Singapore இல் வேலை வாய்ப்புடன் கூடிய Hotel Management பயிற்சி

**Spot Admission**

ஒரே வேலை நாளில் Offer Letter தரப்படும்,
28 நாள்களில் Student Pass Visa கிடைக்கும்.

**Certificate Levelக்கு - ஒரு வருட வீசா.**
**Diploma Levelக்கு - 1 1/4 வருட வீசா.**
**HND Levalக்கு - 2 வருட வீசா.**

HND Level முடித்தவர்களுக்கு Skill Pass உடன் நிரந்தர வேலை வாய்ப்பு செய்யும் வசதி.
Skill Pass கிடைத்த பின்பு PR கிடைக்கும் வாய்ப்பு.

**BRISTOL BUSINESS SCHOOL**

5001 Beach Road
#04-03 Golden Mile Complex
Singapore 199588

**Regional Manager**
No :01, 2nd Lane,
Power House Road,
Jaffna.
T.P - 0212219787

தொடர்புகளுக்கு :- 0777751382 / 0773448706 / 0772521070

(C/5629)(2.6)

## கொம்ப்யூட்டர் பயிற்சிகளுக்கு

**60% Discount**
சிறப்பு கட்டணச்சலுகை
10-02-2013 வரை மட்டுமே.

TALLY ADCHNADJP Duration : 3-4 Months

Tally Power of Simplicity — **Financial Accounting Programme**

Adv.Diploma in Hardware & Networking — **100% Practical Training**

Java — **Advanced Diploma in Java Programming**

**CSC-ASIAN COMPUTERS**

| | |
|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | 021-222 5677 |
| 230,கட்டுக்கானி வீதி, சாவகச்சேரி | 021-2270267 |
| கொடிகாமம் வீதி, நெல்லியடி, | 021-2262399 |
| A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி | 021-2283925 |

## 94ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா - 2013

**14.04.2013 விஜய புதுவருடப் பிறப்பு தினத்தன்று நடைபெறும் விழாவையொட்டி பல்வேறுபட்ட முன்னோடி கலைப்போட்டிகளும், பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகளும் நடைபெறவுள்ளன.**

கலைப்போட்டிகளின் சிறப்புப் போட்டியாக சிறந்த பாடகர் (Super Singer) தெரிவு. உங்கள் பாடும் திறனை வெளி உலகிற்குக் காட்டுவதற்காகவும், பாடகர் களம் அமைப்பதற்காகவும் வடமாகாணரீதியில் நடத்தப்படும் மாபெரும் பாட்டுப்போட்டி

**சிறந்த பாடகர் ( Super Singer )**

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள **"ஸ்ரைல் பார்க்"** ஆடையகத்தில் அல்லது அரியாலை புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள **"சுவான்ஸ்"** இல் பெற்றுக்கொள்ள முடியும்.

01.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொண்ட இடத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும்.

போட்டி நடைபெறும் இடம்: **அரியாலை சனசமூக நிலையம்**

**போட்டி விதிமுறைகள்:**

1. போட்டியாளர் தான் விரும்பும் எந்தவொரு தமிழ் சினிமாப் பாடலையும் பாடலாம்.
2. பாடவிரும்பும் பாடலின் "கரோல் கீ" ஐ இறுவட்டில்' பதிவு செய்துகொண்டு வந்து அந்தப் பின்னணி இசைக்கு ஏற்ப பாடுதல் வேண்டும்.

முன்னோடி விளையாட்டுப்போட்டிகளில் வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டம் (மென்பந்து, 6 பேர், 5 ஓவர்கள்), கரப்பந்தாட்டம் (Set – up), வலைப்பந்து (பெண்கள்) ஆகிய போட்டிகளும், உள்ளூர் ரீதியிலான கிளித்தட்டு, கபடி, கெந்தி அடித்தல், போர்த்தேங்காய் அடித்தல், கிடுகுபின்னுதல் போன்ற பல பாரம்பரிய விளையாட்டுக்களும், அழைக்கப்பட்ட கழகங்களுக் கிடையிலான உதைபந்தாட்டப்போட்டியும் நடத்தப்படவுள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை 15.02.2013 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

(29174)(2.6.7)

**மேலதிக தகவல்களுக்கு: 0776544595**
**94ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா நிர்வாகம்.**

## மரண அறிவித்தல்

### கனகசபை சபாரட்ணம்



மேற்கு கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சபாரட்ணம் 27.01.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை(இலக்கணகனர்)-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி செல்லையா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கந்தசாமி (மஸ்கெலியா), சரஸ்வதி (மன்னார்), காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சோமசுந்தரம், பொன்னுத்துரை,இராசரத்தினம், அருளம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,ஜெனீஸ்வரி(மணி), கமலா தேவி(கமலி-ஓய்வுபெற்ற ஆசிரியை, சென்.பெனடிக் கல்லூரி, கொழும்பு), ஞானசௌந்தரி (கிளி-கனடா), சுலோஜன ா(சுசீலா), நகுலேஸ்வரி(ரஞ்சினி-கனடா), புவனேஸ்வரி(சாந்தி-ஜேர்மனி),சிவனேஸ்வரி (சிவா-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம், சின்னத்தம்பி(ஓய்வுபெற்ற ஆசிரியர்-சென்.பெனடிக் கல்லூரி கொழும்பு), குலசிங்கம் (கனடா), ரவீந்திரகுமரன்,தனபாலன்(கனடா), ரவீந்திரன் (ஜேர்மனி),ரகுபதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயகௌரி, சிவறஞ்சன், ஜெயசுதா,சிவகரன்,ஜெயறஜீவி,பாலகுமார், வர்சினி, ஹரிகரன், சுஜீத்தா, திவானி,சுஜித்,அஸ்வினி, நிஷாந்தன், சகிலா, ஐங்கரன்,சங்கரன், றோசான், சஞ்சீவ், தனுஷன், சாலினி, குமரன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு பேரனும், தயானி, யதுஸ்,ஸஜிலன், அக்ஷயன்,அஜய்,அக்சனா, ஜோகித், யதுஷா,யனோஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவிலும் இத்துயர நிகழ்வு அளவெட்டியில் உள்ள கணபதிப்பிள்ளை சிவஞானம் என்பவரின் இல்லத்தில் நாளை(07.02.2013) வியாழக்கிழமை அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட்,
அளவெட்டி.
தொ.பே.: 021 373 7099

(சி/6234)(5-6-7)

தகவல்:
**சிவஞானம்** (மருமகன்)

## பணியாளர் தேவை

பருத்தித்துறை பியூட்டி மேக்கப் சென்ரருக்கு LOREAL & BERL கிறீம் வகைகளை விற்பனை செய்வதற்கு ஆங்கிலம் அல்லது சிங்களம் தெரிந்த பெண்பிள்ளை தேவை.

சம்பளம் 20,000க்கு மேல்

தொடர்புகளுக்கு

0777074703

உதயன் விளம்பரத் தொடர்புக்கு advt@uthayan.com 0215671111


# கிழக்கில் மீண்டும் கொட்டுகிறது மழை

## நெற்பயிர்கள் நாசம்; தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில்

கடந்த இரண்டு தடவை கள் பெய்த மழை வெள்ள இடர் பாதிப்பிலிருந்து சற்று மீட்சி அடைந்துவரும் நிலையில், மீண்டும் அடை மழை பெய்வது மக்கள் மத்தியில் கவலையை ஏற் படுத்தியுள்ளது.

**அம்பாறை**

அம்பாறை மாவட்டத் தின் நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டா ளைச்சேனை, குடுவில், இறக்காமம் போன்ற பிர தேசங்களில் ஆரம்பிக்கப் பட்ட பெரும்போக நெல் அறுவடை மீண்டும் மழை பெய்வதால் பாதிக்கப்பட் டுள்ளது.

இந்த முறை விவசாயி கள் எதிர்பார்த்த விளைச்சல் அம்பாறையில் கிடைக்க வில்லை.

அத்தோடு நெற்கதிர்கள் மழை வெள்ளத்தில் அமிழ்ந்து மேலும் பாதிப்பையும் உற் பத்தி வீழ்ச்சியையும் ஏற்ப டுத்தும் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாவட் டத்தில் தொடர்ந்து கொட் டும் மழையால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தாழ்நிலப்பகுதிகளில் மீண்டும் நீர் தேங்க ஆரம் பித்துள்ளதுடன், நெற்செய்கை பண்ணப்பட்ட செங்கலடி பதுளை வீதி, வாகரை, உன் னிச்சை போன்ற வயல் பிர தேசங்கள் கடும் பாதிப் புக்கு உள்ளாகியுள்ளன.

செங்கலடி - பதுளை வீதி பகுதியிலும், வாகரை பிரதேச செயலர் பிரிவிலும் அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. அறு வடை செய்ய முடியாத நிலை யில் விவசாயிகள் அவற் றைக் கைவிட்டுள்ளனர்.

**திருகோணமலை**

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழையால் கந்தளாய் நீர்த்தேக்க வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப் பிலி தெரிவித்தார்.

அதனால் கந்தளாய் நீர்த் தேக்கத்தை அண்டியுள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

(ச-30-40-31)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் தவமணி



அல்வாய் வடக்கு, பாணம் பற்றையைப் பிறப்பிடமாகவும் கொத்தலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தவமணி நேற்று (05.02.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் இரத்தினத்தின் அன்பு மனைவியும் இரத்தினம் இராசமணி, காலஞ்சென்ற தங்கராசா சிவமணி, முத்துச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவயோகம் (லண்டன்), இந்திராணி, முருகேசு (வயறிங் களுவா, யாழ்ப்பாணம்), யோகராணி, கணேசலிங்கம் (மாம்பழம்), கல்யாணி (கனடா), குணசேகரம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் இரத்தினகுமாரி, வேல்மணி, உதயமலர், சந்திரராசா (சந்திரன்), கலா, ஜெயபாலன், ராதிகா ஆகியோரின் அன்பு மாமியும் டாக்டர் குமரன், தனேஸ்குமார் (லண்டன்), தர்சன், தனுசன், சுயித்தா, சுயின்தா, புகழரசி, சோபிகா, கென்சிகா, நிதுர்சன், நிதுர்ஷா, சோபனா, ஜேசன், ஜெனுலியா, ஆஸ்னா, ஆஸ்ரன், நிஷான், திருமதி டாக்டர். குமரன் பிரியதர்சினி (கொழும்பு), திருமதி தனேஸ்குமார் பபிதா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.02.2013) புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக அல்வாய் பங்கு வேம்படி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


அல்வாய்
0777716456,
0774424394

தகவல்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

நாமகள் ஒழுங்கையைப் வசிப்பிடமாகவும்,
தற்போது கனடாவில் வசித்தவருமான

### நடராசா அருணாசலம்



எமது கழக ஆர்வலர்களான **அருணகுமார்** (அருணா - UK), **நந்தகுமார்**(UK), **ராஜ்குமார்** (ராஜ்- கனடா) அவர்களின் அன்புத் தந்தை நடராசா அருணாசலம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்,
வளர்மதி நிறைவாழ்வகமும்.

# விநாயகர் வித்தியாலயத்தை முன்மாதிரிப் பாடசாலையாக மாற்ற நடவடிக்கை

எருவில்,பெப்.6

பட்டிருப்பு கண்ணகி புரம் விநாயகர் வித்தியால யத்தை வலயத்தின் முன் மாதிரி ஆரம்பப் பாடசாலை யாக மாற்றுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும் என்று அதிபர் க.பிரபா கரன் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது:-

அரசின் விசேட திட்டத் தின்கீழ் பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலைகள், மாதிரி ஆரம்ப பாடசாலைகளாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளன.

அத் தோடு அதற்கான வசதி களும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. இது வரவேற் கத்தக்க திட்டமாகும்.

இந்தத் திட்டத்தில் ஒரேநேரத்தில் வலயத்தி லுள்ள எல்லாப் பாடசாலை களையும் இணைத் துக்கொள்வதென்பது முடியாத காரியம். முன்மாதிரியான ஆரம்ப பாடசாலையாக விரைவில் மாற்றுவதற்கான சகல நட வடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின் றோம். பாடவிதானத்துக்கப்பால் சமூகத்துக்கும், மாணவர் களுக்கும் பயன்தரக்கூடிய பல்வேறு நிகழ்ச்சித்திட் டங்களை நாங்கள் செய்து வருகின்றோம்.

எமது செயற்பாடுகள் வலயக் கல்விப் பணிப்பா ளர், பிரதிக் கல்விப் பணிப் பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரால் பாராட்டப் பட்டே வருகின் றன.

அவர்கள் எமக்கு சகல நடவடிக்கை களுக்கும் பக்க பல மாக இருந்து வழி நடத்துகின்றார்கள். எனவே எமது இந்த முயற்சிக்கு அவர்களின் ஒத்துழைப்பும் வழி காட்டலும் இருக்கும் - என் றார். (ச-31)


## காணி விற்பனைக்கு

184/1 ஆடியபாதம் வீதி
திருநெல்வேலியில் உள்ள
3பரப்பு 4குழி காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
T.P.-0776567564

(29250)(14.16.12)


## பங்களாதேஷ் பிரஜைகள் கொழும்பு தடுப்பு முகாமுக்கு

அம்பாறை,பெப்.6

அம்பாறை, ஒலுவில் துறைமுக கடற்படை வளா கத்தில் தடுத்து வைக்கப் பட் டுள்ள பங்களாதேஷ் மற்றும் மியன்மார் பிரஜைகளை கொழும்பு மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்புமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடுக்கடலில் தத்தளித் துக் கொண்டிருந்த அவர்கள் இலங்கை கடற்படையி னரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை காப் பாற்றப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச் சாலை அலு வலர்களினூ டாக கொழும்பு மிரிஹான தடுப்பு முகாமுக்கு அவர் களை 8 நாள் களுக்குள் அனுப் பிவைக்குமாறு அக் கரைப்பற்று நீதி வான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதனையடுத்து, அவர் களை அழைத் துச் செல்வதற் காக ஒலுவில் துறைமுக கடற்படை வளாகத் துக்கு மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகா ரிகள் வாகனங்களுடன் சென் றுள் ள மை குறிப்பிடத் தக்கது.

(ச)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வேலாயுதம்

### (கந்தப்பு சாஸ்திரியார்)



உண்டுவத்தை, அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதம் நேற்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அன்னம்பிள்ளை தம்பதியரின் மகனும், தங்கம்மாவின் அன்புக்கணவரும், உதயராணி, ஜெயராணி (உதவி அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசமூர்த்தி, பரமோதயன் (கச்சேரி, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோசா, பிருதிவிராஜ், ஜெயரோஜா, பிரதீபராஜ், சாருஜா, பிரனஜா, துஷாரத் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(06.02.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உண்டுவத்தை,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(c/6251)(8.16.14)

தகவல்:
ப.ஜெயராணி(மகள்)
T.P: 0777730280

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 ★ 04 ★ 1940



சிவன் அடியில் 25 ★ 01 ★ 2006

### அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்

[கோட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும் , ஸ்தாபகர் சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்]

**திதி: அபரபக்க ஏகாதசி 06.02.2013**

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும், பண்பும் புகட்டி, வளமுடன்
வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களை காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
நிமலன் திருவடியில் நீங்கள்
சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்..

D 1/1, சென்றல் றோட், கொழும்பு-12,
119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(29166)(10.6.7)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பல்பொருள் வாணிபத்திற்கு சிட்டை எழுதுனர், கணக்காளர் (ஆண்கள் மட்டும்) ஆகிய வேலைக்கு ஆள்கள் தேவை

**தொடர்பு:**
0212222742, 0776280685


# கனேடிய பிரதி உயர்ஸ்தானிகர் ஊடக இல்லத்துக்கு வருகை

திருகோணமலை,பெப்.6

கனேடிய பிரதி உயர்ஸ்தானிகர் ரொபாசுட் மக்டூகல் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு திருகோணமலை ஊடக இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் 65 ஆவது சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொள்வதற்காக அவர் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண் டார்.

அதன்போதே திருகோணமலை ஊடக இல்லத்தில் மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களை சந்தித்தார்.

கனேடிய தூதரகத்தின் நிதியுதவியுடன் ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்படும் பயிற்சிகளையும், அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளையும் அவர் கேட்ட றிந்து கொண்டார். நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கு ஊடகவியலாளர்கள் உறுதுணையாக நிற்க வேண்டும் என்று அவர் கூறினார். (ச-40)


advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்கள்

### விஜயரத்தினம் மஞ்சுளா



கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், பெரியவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் மஞ்சுளா நேற்றுமுன் தினம் (04.02.2013) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு-அமுது தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து-பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் செல்வரத்தினம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுதாகரன், மற்றும் கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், மஞ்சுவின் மாமியும், துபாறகனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.02.2013) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பெரியவிளான்,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### தம்பு திலகராசா

தோற்றம் 23.03.1950
மறைவு 07.01.2013

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (06.02.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேரதீவு வீதி, கைதடி
நாவற்குழி, கைதடி.

குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### விளையாட்டு விஞ்ஞான அலகு உடற்கல்வி டிப்ளோமா மீள்பரீட்சை

உடற்கல்வி டிப்ளோமா மீள்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் விளையாட்டு விஞ்ஞான அலகில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொண்டு 15.02.2013 இற்கு முன்னர், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை விளையாட்டு விஞ்ஞான அலகில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/6240)(2-6)

### வல்லிபுரம் நித்தியசிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் 105, பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நித்தியசிங்கம் நேற்றுமுன்தினம் (04.02.2013) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம் மற்றும் ஜெயக்குமார் (வவா-ஜேர்மனி), ஜெயந்திரன் (சுவிஸ்), கிருபாகரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயதேவி (ஜேர்மனி), தனுசா (சுவிஸ்), சங்கீதா (ஹொலண்ட்) ஆகியோரின் மாமனும், எசேனி (ஜேர்மனி), அட்ஷயன், மாதங்கி (சுவிஸ்), ஆதித்தியா, ஆரூயன், அனுமிதா (கொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

105, பிறவுண் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (சி/6247)(2-6)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### பூபாலபிள்ளை முத்துலிங்கம்

(முன்னாள் இ.போ.ச. சாரதி, மட்டக்களப்பு)



வண்ணார்பண்ணை, நீராவியடி யைப் பிறப்பிடமாகவும், விநாயகர் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட பூபாலபிள்ளை முத்துலிங்கம் நேற்றுமுன்தினம் (04.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலபிள்ளை - நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கமலரின் அன்புக் கணவரும் கனகநாயகத்தின் அன்புச் சகோதரனும் கனகரத்தினம் (கனடா), அன்னலிங்கம் (கனடா), துரைராஜா (கனடா), நவமணிதேவி (இந்தியா), காலஞ்சென்ற லூசியா லில்லி ஆகியோரின் மைத்துனரும் சுந்தரலிங்கம் (கனடா), சிவமலர், யுனேந்திரன், காலஞ்சென்ற கேதீஸ்வரன் (ஈசன்) மற்றும் தவசீலன் (MBSL இன்சூரன்ஸ்), சுபாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வினித்தா (கனடா), சசிகலா, கஜேந்திரன், அநுஜா (மக்கள் வங்கி - பிரதான வீதிக் கிளை) ஆகியோரின் அன்பு மாமனும் அருள்நிலா (கனடா), யதுசன், உஷாந், பிரியங்கா, டிலக்ஷிகா, பபிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2013) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.


பஜாஜ்

# இன்று - நாளை - என்றுமே

வசதியாக, இலாபமாக எவ்விதத்திலும் முன்னிலையில் இருக்கும்

## பஜாஜ் முச்சக்கர வண்டி

இக்காலத்தின் குடும்ப வாகனமாக உள்ள பஜாஜ் முச்சக்கர வண்டி இன்றும், நாளையும் உங்களுக்கு இலாபத்தை மற்றும் வசதியை பெற்றுத்தருவதோடு, வாகனங்களுக்குள் முன்னிலையில் திகழ்வதற்கான பல அம்சங்களையும் கொண்டுள்ளது.

## இன்று போல் நாளையும்....

- குறைந்த பணத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய புதிய வாகனம்
- குறைந்த செலவில் பராமரிக்க கூடிய வாகனம்
- டயர், உதிரிப்பாகங்கள், காப்புறுதி, வருடாந்த அனுமதிப்பத்திர பணம் போன்றவற்றுக்கான செலவை மிக குறைவாக கொண்டுள்ள வாகனம்
- லீசிங் முறையில் வாங்கும் போது குறைந்த தவணைக் கட்டணத்தை செலுத்தக் கூடிய வாகனம்
- மேடு, சமாந்திர மற்றும் குறுகிய பாதைகளிலும் இலகுவாக ஓட்டிச்செல்லக் கூடிய வாகனம்
- தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு மேலும் வசதியை பெற்றுத்தரும் வாகனம்
- கூடிய பெறுமதிக்கு மீள் விற்பனை செய்யக் கூடிய வாகனம்



ரூ.460,880/-

இக்காலத்தின் குடும்ப வாகனம் - பஜாஜ்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

## கட்டடம் வாடகைக்குண்டு

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள 3200 சதுர அடி கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு விடப்படும். அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. வாகனத் தரிப்பிடமும் உள்ளது.

**தொடர்புகளுக்கு:**
**0777280362**

(29182)(2.6)


# 62.3 மி.மீ மழை வீழ்ச்சி குடாநாட்டில்

யாழ்ப்பாணம்,பெப்.06

**யாழ்.குடாநாட்டில்** பரவலாக நேற்று முன்தினம் இரவு முழுவதும் கன மழை பெய்துள்ளது.

**நேற்று முன்தினம்** பிற்பகல் 5.30 மணியிலிருந்து நேற்றுக்காலை 8.30 மணிவரை யாழ்.குடாநாட்டில் 62.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. என்று யாழ்.திருநெல்வேலியில் உள்ள வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

(த-4)


## PERSONAL /GROUP CLASSES HOME VISIT

Accounting - A/L - English/ Tamil Medium
Enslish - Gr 6 to A/L
Foreign Experienced Teacher.
T.P.: 0773316402

(29179)(2.6.7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

க.பொ.த. உயர்தரம் கலைப்பிரிவில் (2012) சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தந்து பெருமை சேர்த்த யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மாணவிகளான




செல்வி அனுஜா அன்ரனி
பெறுபேறு: 3A
மாவட்ட நிலை: 28

செல்வி ஆன்சோனியா ராஜ்குமார்
2A, C
177

ஆகிய இருவரும் பல கலைகளும் கற்று உயர்ந்திட வாழ்த்துவதோடு,
கலைப்பிரிவில் 100% சித்தியினைப் பெற்றுத் தந்த ஏனைய அனைத்து மாணவிகளையும்,
உயர்விற்கு வழிவகுத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்

**குருநகரைச் சேர்ந்த லண்டன், பிரான்ஸ்சில் வசிக்கும் வெல்லம் குடும்பத்தினர் - (ராசகுமார்)**

(29196(6.7.45)



## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆரம்ப பாடசாலைக்குரிய காணியை பல சிரமங்களுக்கு மத்தியில் படையினரிடமிருந்து விடுவித்து எம்மிடம் கையளித்த

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி முயற்சிகள் அமைச்சர்
**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான
**கௌரவ முருகேசு சந்திரகுமார்**

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழுத்தலைவருமான
**கௌரவ சில்வேஸ்திரி அலென்ரின்**

**ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்**

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,
மீசாலை.

பாடசாலைச் சமூகம்
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

(c/2896) (10-6-16)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புக்கள் அலகு
# Extra - Mural Studies unit University of Jaffna.

## பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களைத் தகுதியானவர் களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. விரிவுரைகள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறும் 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இப்பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவுக் கட்டணம் ரூபா 500.00

பயில விரும்புபவர்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தங்களின் சுயவிவரக்கோவையினை இணைத்து இணைப்பாளர், புறநிலைப் படிப்புக்கள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி பதிவினை மேற் கொள்ளலாம்.

பாடநெறிகளைப் பயில விரும்புபவர்கள் எத்தனை பாடநெறிகளுக் கும் விண்ணப்பிக்க முடியும் ஆயினும் ஒரே நேரத்தில் ஒரு பாடத்துக்கே அனுமதிக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் திகதி: 28.02.2013

01. அனர்த்த முகாமைத்துவத்துக்கான அடிப்படைகள் (Fundamentals of Disaster Management )
02. தொழிலியலுமைக்கான மென்திறன் விருத்தி (Soft Skills for Employability)
03. விசேட தேவைமாணவர்களுக்கான கல்வி (Special needs Education)
04. முன்பள்ளிக் கல்வி (Pre - School Education)
05. ஆரம்பக் கல்வி (Primary Education)
06. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English For Communication)
07. அலுவலர்களுக்கான ஆங்கிலம் (English For Office Staff )
08. அலுவலக முகாமைத்துவம் (Office Management)
09. மனித உரிமைகள் (Human Rights)
10. மனிதவள முகாமைத்துவம் (Human Resources Management)
11. சிறுதொழில் முகாமைத்துவம் (Small Business Management)
12. தாதிப்பராமரிப்பும் முதலுதவியும் (Nursing and First aid)
13. சோதிடக் கலை (Astrology)

மேற்படி பாடநெறிகளில் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் வள வாளர்களாகப் பணியாற்ற விரும்பின் தங்களுடைய துறைசார் திறமை களை உறுதிப்படுத்தக்கூடியவாறு தங்களைப் பற்றிய சுயவிவரக் கோவையினை இணைப்பாளர், புறநிலைப் படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இணைப்பாளர்,
புறநிலைப் படிப்புக்கள் அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/6239) (45.6.7)



கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி,
பழைய காளிகோயில் என விளங்கும்
திருவருள்மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்

## மகோற்சவ விஞ்ஞாபனம் - 2013

நிகழும் நந்தன வருடம் தைமாதம் 29ஆம் நாள் 11.02.2013 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி மாசி மகத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

*11.02.2013 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம்*
*24.02.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்*
*25.02.2013 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தம்*
*1.03.2013 வெள்ளிக்கிழமை பகல் காத்தவராயர் மடை*

குறிப்பு:
10.03.2013 ஞாயிற்றுக்கிழமை சிவராத்திரி அடியார்கள் நான்கு சாமமும் காசி ஈஸ்வரர்லிங்கத்துக்கு அபிஷேகம் செய்யலாம்.
பங்குனிமாதம் நான்கு திங்கட்கிழமையும் திருக்குளிர்த்தி நடைபெறும்.

(29171) (10.6.7)

**அம்பாள் தொண்டில் அறங்காவலர்.**


## மூலிகை மருத்துவத்தில் சாதனை



**தெய்வீக மூலிகை மருந்துகளால் ஆண்மைக்குறைவு, குழந்தையின்மை, மூலம், சொரியாசிஸ், சிறுநீரகப்பிரச்சனை, கேன்சர், மஞ்சள்காமாலை(B), பால்வினை நோய், எடைகூட /குறைய முழுமையாக குணமாகும் அதிசயம்**

இந்தியாவிலேயே No.01 வைத்தியசாலையாகச் செயல்ப்படும் எங்களது வைத்தியசாலையில் அரசு பதிவுபெற்ற 17 சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் பணிபுரிந்து எளிதில் குணப்படுத்த முடியாது என்று கூறப்படுகின்ற நோய்களையெல்லாம் முழுமையாக குணமடையச்செய்து சாதனை புரிந்து வருகின்றார்கள். நீங்களும் பயன்பெற உடனே தொடர்பு கொள்ளவும். வைத்தியர்களை நேரில் தொடர்பு கொள்ளமுடியாதவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்ற பின் மருந்துகளை தபாலில் பெற்றுக்கொள்ளலாம். எங்களது மருந்துக்கள் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பித்தரப்படுகின்றன. எங்களது ஆயுர்வேத மருந்துகள் அனைத்தும் பக்கவிளைவுகள் அற்றது.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர் ர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

**செல்: 0091 9842457673**
**இலங்கைச் செல்: 0754154364**

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com

# யாழ்.லீக் அபாரம்

# கிளிநொச்சி லீக் பரிதாபம்

## கிளி வீரருக்கு சிவப்பு அட்டை

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ் உதைபந்தாட்ட லீக் அணிவீரர்களின் அதிரடி ஆட்டத்தில் பணிந்தது கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் லீக் அணிகளுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கடந்த சனிக்கிழமை உரும் பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

இரு அணிகளும் பலம் பொருந்திய அணியாக இருந்தமையால் ஆட்டம் ஆரம்பத்திலிருந்தே சூடு பிடிக்கத் தொடங்கியது.

இரு அணியினரும் தமது அணிக்காக கோல் பெறுவதற்கு கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இதன் போது யாழ். உதைபந்தாட்ட லீக் அணி வீரர் சயந்தன் 8 ஆவது நிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார்.

**யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணியும், யாழ்.மாவட்ட பாடசாலைகள் கூடைப் பந்தாட்ட அணியும் மோதிக்கொள்ளும் கண்காட்சிப் போட்டியொன்றும் நடைபெறவுள்ளது.**

பதிலுக்கு தமது அணிக்கான கோலினை பெறுவதற்கு கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி வீரர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் போதுகிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி வீரர் ஒருவர் போட்டி விதிகளை மீறியதால் அவர் சிவப்பு அட்டை காட்டப்பட்டு களத்தைவிட்டு வெளியேற்றப் பட்டார். அவர்தவிர விதி முறைக்கு முரணாக விளையாடிய இன்னும் இரண்டு கிளிநொச்சி வீரர்களுக்கு மஞ்சள் அட்டைகள் மத்தியஸ்தரால் காட்டப்பட்டன. இதனால் கிளிநொச்சி அணி தொடர்ந்து 10 வீரர்களுடனேயே விளையாடவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் பட்டது. இதனை நன்கு பயன்படுத்திக் கொண்ட யாழ்.அணி வெற்றிநோக்கி நகர்ந்தது.

யாழ். உதை பந்தாட்ட லீக் அணியினர் தமது ஆட்டத்தினை வேகப்படுத்தினர். 18 ஆவது நிமிடத் தில் யாழ். அணிக்கு இரண்டாவது கோலினை அந்த அணியின் வீரர் கரன் பெற்றுக் கொடுத்தார்.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது யாழ்.உதை பந்தாட்ட லீக் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதிஆட்டம் ஆரம்பமான போது எப்படியாவது தமது அணிக்கான கோலினை பெற்றிட வேண்டும் என்று கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணியினர் எதிர் அணியினரின் கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆயினும் அந்த முயற்சிகள் யாவும் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியின் பின்கள வீரர்களினால் தடுத்தாடப்பட்டது. ஆட்டத்தின் 75ஆவது நிமிடத்தில் யாழ். உதைபந் தாட்ட லீக் அணி வீரர் சயந்தன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி இன்னொரு கோலை அடித்தார். அந்தக் கோலோடு யாழ்.அணியின் கோல்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்து அந்த அணியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது.

ஆட்டநேர முடிவில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி 3:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(ஙு-23)

## இன்றைய ஆட்டங்கள்

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று புதன்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**பிற்பகல் 3மணி**

ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணி
எதிர்
நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம்

★ ★ ★

ஆர்.இராசேஸ்வரன், மகிதரனின் ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான பொங்கல் விழா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை யாழ்.துரையப்பாவிளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

**பி.ப 3.45மணி**

யாழ்.ஐக்கியம் விளையாட்டுக் கழகம்
எதிர்
நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் சிவப்பு

**பி.ப 4.45மணி**

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி
எதிர்
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்

(ஙு-23-228)

## றேஞ்சர்ஸ் சம்பியன்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் ஊர்காவற்றுறை பொதுவிளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இதில் ஏழுவைதீவு பாத்திமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

இதில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகஅணி 10:2என்ற புள்ளிஅடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

(ஙு-23)

# சென்றலைட்ஸ் விஸ்வரூப வெற்றி

வலி.வடக்கு பெப்.6

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 30 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுப்படுத்திய கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டமொன்றில் யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 8 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் சனிக்கிழமை இடம் பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ விளையாட்டுக் கழக அணி 12.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கு களையும் இழந்து 51 ஒட்டங் களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இதில் தீசன், சுபாஸ் ஆகியோர் தலா10ஒட்டங்களைதமது அணிசார்பாகப் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சாள்ஸ் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்குகளையும், சௌமிதரன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 4 ஒட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், விஜயசாகர் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஒட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கோகுலன், மயூரதன்ஆகியோர் முறையே 3 ,8 ஒட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 5.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 52 ஒட்டங்களைப் பெற்று, 8 இலக்குகளினால் இலகுவாக வெற்றி பெற்றது.

இதில் வினோத்குமார் 27 ஒட்டங்களையும், வதுசன் 14ஒட்டங்களையும்பெற்றனர்.

திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ.விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சபேசன் 1 பந்துப்பரிமாற்றம் பந்துவீசி 2 ஒட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், சுவேந்திரன் 2.1 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஒட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

(ஙு-86)

# கூடைப்பந்துத்திடல் இன்று திறப்பு



தென்மராட்சி,பெப்.6

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் விளையாட்டுத்துறை அமைச்சினால் 15 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத்திடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வைபவ ரீதியாக திறந்துவைக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாபொறியியல் நிறுவன உதவிப் பொதுமுகாமையாளர் டி.எம்.ஸ்ரீவர்த்தனவும், சிறப்பு விருந்தினராக முன்னாள் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரையும், மாகா பொறியில் நிறுவன நிர்மாணப்பிரிவு முகாமையாளரும் கலந்துகொள்வர்.

**யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணியும், யாழ்.மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட அணியும் மோதிக் கொள்ளும் கண்காட்சிப் போட்டியொன்றும் நடைபெறவுள்ளது.**

நிகழ்வில் யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணியும், யாழ்.மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட அணியும் மோதிக்கொள்ளும் கண்காட்சிப் போட்டியொன்றும் நடைபெறவுள்ளது.

(ஙு-9)

# அரியாலை ஐக்கியம் கரப்பந்தில் வென்றது

யாழ்ப்பாணம்,பெப். 6

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

விலகல் முறையில் நடைபெற்று குறித்த சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த மாத இறுதியில் கொண்டலடிராஜ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் மணியன் தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கு எதிராக விளையாடிய அரியாலை ஐக்கிய ஐக்கிய விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைக்காது ஆடிய போதிலும் முதல் இரு செற்களிலும் 25 : 22, 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் மணியன் தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை அரியாலை ஐக்கியம் அணி வீழ்த்தி சம்பியனானது.

நீண்ட காலத்தின் பின் சொந்த இடத்தில் மீளக் குடியமர்ந்த செயற்பட ஆரம்பித்துள்ள மணியந் தோட்டம் ஐக்கிய விளை யாட்டுக் கழகம் குறித்த சுற்றுப் போட்டியில் இரண் டாவது இடத்தைப் பெற்று பலரது கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பி டத்தக்கது. (ஙு- 7)

# ராஜஸ்தான் அணிக்கு அபராதம்

அந்நிய செலாவணி மோசடி வழக்கில் சிக்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு 100 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கும் அணிகள் அந்திய செலாவணி மோசடி மற்றும் நிதி முறைகேடுகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டு வந்தது. 2000 கோடி ரூபா வரை நடந்த இந்த மோசடி குறித்து, அமுலாக்கப் பிரிவு ஆணைக்குழு கடந்த இரண்டு ஆண்டுகளாக விசாரணை நடத்தி வந்தது. இது தொடர்பாக 24 முறை விளக்கம் கேட்டு நோட்டீஸும் அனுப்பப்பட்டது.



இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் மற்றும்ஐ.பி.எல். அணி உரிமையாளர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதில் ராஜஸ்தான் அணி முறைகேடாக வெளிநாடுகளில் முதலீடு செய்தது தெரியவந்தது. இதனால், இந்த அணிக்கு அந்திய செலாவணி மேலாண்மை சட்டத்தின் கீழ், முதன் முறையாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ராஜஸ்தான் அணியின் உரிமையாளர்களான பாலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டி, அவரது கணவர் ராஜ் குந்த்ரா மற்றும் இயக்குநர்களுக்கு 50 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ராஜஸ்தான் அணியுடன் சேர்ந்து வரி ஏய்ப்பில் ஈடுபட்ட மொரீசியஸ் நிறுவனத்தின் இயக்குநர்களுக்கு 34 கோடி ரூபாவும், இங்கிலாந்தில் உள்ள நிறுவனத்தின் இயக்குநர்களுக்கு 14.5 கோடி ரூபாவும் என, சுமார் 100 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தத் தொகையை ராஜஸ்தான் அணி நிர்வாகம் 45 நாள்களில் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# அலன் போர்டர் விருது



ஆஸ்திரேலியக் கிரிக்கெட்டின் அதியுயர் விருதான அலன் போர்டர் பதக்கத்தை ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக வென்றுள்ளார். நேற்று இடம்பெற்ற விருது வழங்கல் விழாவிலேயே அவர் இந்தப் பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன்னர் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் ரிக்கி பொன்டிங்கும், 2010, 2011 ஆம் ஆண்டுகளில் ஷேன் வொட்சனும் இந்த விருதினைத் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் வென்றிருந்தனர். இந்த நிலையிலேயே மைக்கல் கிளார்க் கடந்த வருடமும், இந்த வருடமும் அலன் போர்டர் விருதை வெற்றிகொண்டுள்ளார்.

கிளார்க் இதுவரை நான்கு தடவைகள் அலன் போர்டர் விருதை வென்றுள்ளார். இதன் மூலம் அதிக தடவைகள் அலன் போர்டர் விருதை வென்றவர் என்ற சாதனையை அவர் ரிக்கி பொன்டிங்குடன் இணைந்து பகிர்ந்துள்ளார். மைக்கல் கிளார்க் 2005 ஆம், 2009 ஆம் ஆண்டுகளிலும் அலன் போர்டர் விருதை வென்றிருந்தார்.

அலன் போர்டர் விருது தவிர, குறித்த விருது வழங்கல் விழாவில் ஆஸ்திரேலியாவின் சிறந்த டெஸ்ட் வீரர் விருதும் மைக்கல் கிளார்க்குக்கு வழங்கப்பட்டது. இது அவரது மூன்றாவது டெஸ்ட் வீரர் விருது என்பதோடு, 2 ஆவது தொடர்ச்சியான விருதுமாகும்.

ஆஸ்திரேலியாவின் சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர் விருதை கிளின்ட் மக்காயும், சிறந்த'20/20' போட்டிக்கான சர்வதேச வீரர் விருதை ஷேன் வொற்சனும், சிறந்த இளம் வீரர் விருதை ஜோ பேர்ண்ஸூம், சிறந்த உள்ளூர் வீரர் விருதை பிலிப் ஹியூஸூம், சிறந்த பெண் வீராங்கனை விருதை ஜெஸ் கமரனும் பெற்றுக் கொண்டனர்.

(ந)

# அடுத்த பயிற்சியாளர் அசாருதீன்?

இந்திய கிரிக்கெட் அணியில் வெற்றிகரமான அணித் தலைவராக விளங்கியவர் அசாருதீன்.

இவரது தலைமையில் இந்திய அணி பல வெற்றிகளைப் பெற்றிருந்தது. எனினும் கிரிக்கெட் சூதாட்டக் குற்றச்சாட்டில் அசாருதீன் சிக்கினார். இதனால் அவருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது. எனினும் அதனை எதிர்த்து அசாருதீன் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த நவம்பரில் வெளியாகியது. ''அசாருதீன் குற்றமற்றவர். அவர் மீது வேண்டும் என்றே பழி சுமத்தப்பட்டுள்ளது'' என்று நீதிமன்று தெரிவித்தது.



''அசாருதீன் குற்றமற்றவர். அவர் மீது வேண்டும் என்றே பழி சுமத்தப் பட்டுள்ளது'' என்று நீதிமன்று தெரிவித்தது. அரசியல்வாதியாக உள்ள அசாருதீன், தற்போது இந்திய அணிக்குப் பயிற்சியாளராக வருவதற்கு தனது விருப்பத்தைத் தெரிவித்துள் ளார்.

அரசியல்வாதியாக உள்ள அசாருதீன், தற்போது இந்திய அணிக்குப் பயிற்சியாளராக வருவதற்கு தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அசாருதீன் தெரிவித்ததாவது,

''எனது சேவையைச் சிறந்து முறையில் இந்திய அணி பயன்படுத்திக்கொள்ளலாம். அணியின் பயிற்சியாளராக என்னை நியமிக்க இந்திய கிரிக்கெட் சபைக்கு அதிகாரம் உண்டு.

ஐ.பி.எல். தொடர் சிறப்பான ஒன்றுதான் என்றபோதும், இதில் திறமையான வீரர்கள் சிலரை புறக்கணிக்கின்றனர். எல்லாவிதமான போட்டிகளிலும் விளையாட நல்ல திறன் படைத்த வீரர்கள் தேவைப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களை அணியில் சேர்க்க வேண்டும்.

தடையை நீக்கி நல்ல தீர்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு கிரிக்கெட் வீரர், அரசியல்வாதி என்ற முறையில் பலருக்கு உதவ விரும்புகிறேன்'' என்றார். (ந)

# தரப்படுத்தலில் அம்லா முதலிடம்

சர்வதேசக் கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டுள்ள துடுப் பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலிலும் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலிலும் தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லா முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். இதுவரை முதலிடத்தில் காணப்பட்ட மைக்கல் கிளார்க்கைப் பின்தள்ளியே அவர் முதலிடத் தைப் பெற்றுள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது போட்டியின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள இந்தத் தரப்படுத்தலில் ஹசிம் அம்லா முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதையடுத்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் துடுப்பாட்டத் தரப் படுத்தலிலும், டெஸ்ற் துடுப்பாட்டத் தரப்படுத்தலிலும் முதலிடத்தை வகிக்கிறார்.



2007 ஆம் ஆண்டு அப்போதைய ஆஸ்ரேலியத் தலைவரான ரிக்கி பொண்டிங் இவ்வாறு இரண்டு வகை யான போட்டிகளின் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், முதன் முறையாக வீரரொருவர் இவ்வாறு ஒருநாள், டெஸ்ட் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் முதலிடத்தை வகிக் கிறார். டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் டேல் ஸ்ரெய்ன் தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுவதோடு, வேர்ணன் பிலாந்தர் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அத்தோடு சகல துறை வீரர்களுக் கான தரப்படுத்தலில் ஜக்ஸ் கலிஸ் மீண் டும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள் ளார்.


## வெளிவந்துவிட்டது!

2012இல் வெளிவந்து அதிகப்படியான மாணவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய முற்றிலும் எதிர்பார்க்கை அம்சங்களைக் கொண்ட
தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
**வெற்றித்தேர்வு வினாவிடைத் தொகுப்பு**
**புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்**
(இரண்டாம் பதிப்பு)
வெளிவந்துவிட்டது.
பாடசாலைகள் விசேட விலைக் கழிவுடன் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
எமது வழமையான வெற்றித்தேர்வு முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
தவறாமல் வாங்கிப் பயனடையுங்கள்.
விலை ரூ. 500.00
தொடர்புகளுக்கு:
நாடுமுழுவதும் : 021 222 9016
0775388471, 0773126807

## PHYSICS Day Classes

100% pass
ஆரம்பம் 07-02-2013 4.00 PM
முத்தட்டுமடலேன், கோண்டாவில் மேற்கு.
(0213734114)
Kajan

## தவறிவிட்டது

No.10, நடுத்தரை லேன் அரியாலையை முகவரியாக கொண்ட ப.வினோதன் ஆகிய எனது NIC, லைசன்ஸ் மற்றும் மோட்டார் வாகன ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். (29249)(8.16)
T.P:0770869851

## திருமணச் சேவை

www.ebybazaar24.com, www.ebb24.com
உங்கள் துணையை எங்கள் இணையத்தில் தேடுங்கள்!
இலவச பதிவு!, வீதவைகளுக்கு இலவச சேவை!
அறிமுகச்சலுகை! 1வருட சேவைக்கட்டணம் ரூ.3990
(இச்சலுகை 28.02.2013 வரை மட்டுமே)
எமது இணையத்தில் பதிவு செய்யுங்கள், அல்லது இலவச விண்ணப்பப்படிவத்திற்கு அழையுங்கள்.
EBB PROPOSAL Tel.: 021 791 74 70

## A/L DAY CLASS

கலை, வர்த்தகம்
ஆரம்பம்:07.02.2013(வியாழக்கிழமை) 6.30 a.m
எமது தனித்துவமான ஆசிரியர் சேவை
யூனிவேர்சல்-கந்தர்மடம்

## LONDON METROPOLITAN COLLEGE

புதிய பிரிவுகள் ஆரம்பம்

100% SUCCESS!
UK VISA பெறுவதற்கான பாடநெறி
A/C Classes
Full Time & Part Time

IELTS — ACADEMIC & GENERAL — Duration: 48 hrs — Course Fee : 14,500/-

SPOKEN ENGLISH WITH GRAMMAR — Duration: 20 hrs — Course Fee : 7,500/-
- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
- இரண்டே மாதங்களில் ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்
- பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

City & Guilds A1, A2, B1, B2 — City & Guilds International English for Speakers of Other Languages (ESOL) Diploma — Duration: 48 hrs — Course Fee: 14,500/-

197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691 (20772)(15-14)

## LONDON METROPOLITAN COLLEGE
Computer Courses

| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing cs6 | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230 , 0217538395

## ANANDA HOMES AND CONSTRUCTIONS சாவகச்சேரி

உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத் தர
1. சாதாரண வீடு-18 லட்சத்திலிருந்து (3 அறை, கோல், குசினி உட்பட)
2. மாடி வீடு-35 லட்சத்திலிருந்து (4 அறை, கோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை-2 லட்சத்திலிருந்து
4. பழைய வீடு புனரமைப்பு செய்தல்

குறிப்பு: 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
2. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
அழையுங்கள்: ஆனந்தன்
T.P:0774163146, 0786155929 (29252)(6.10)

## பொலித்தீன் பிறிண்டிங்

சகலவிதமான பொலித்தீன் சம்பந்தப்பட்ட வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
0770203009
(29253) (10.6.7)

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர் மத்தியில் மாட்டீன் லேனில் அரச தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக அல்லது வசிப்பிடமாக உபயோகிக்கக் கூடிய $1\frac{3}{4}$ பரப்புக் காணியில் 1 வரவேற்பறை, 3 அறைகள் (1 அறை A/C), 2 குளியலறை, சமையலறை, 10 வாகனங்கள் தரிப்பிட வசதி, நீர்தாங்கி மற்றும் ஜெனரேட்டர் வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு இருக்கிறது.
(தரகர்கள் தேவை. தக்க சன்மானம் தரப்படும்)
தொடர்புகளுக்கு
0779168945, 021 2228195 (29164)(6.10)

## HND in Pharmacy

**Be a Pharmacist in 2 Years**
* Work in Government/Private Sector
* Run your own Pharmacy
**Lectures by MBBS Doctors !**
Entry Req: 3 Passes in A/L -Bio/Maths
Admissions are open now ! — Pioneers in Medical Studies
[ Small Group Classes/Internship will be arranged ]
K.U Education
**Knowledge Universe**
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
Tel :0777302882 Web :www.kugroup.info

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S றோட், இணுவில்.
யாழ். மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தி.......
A/L DAYCLASS
வாரத்தில் 6 நாள்கள்
இரு இடத்திலும் நடைபெறும்
தமிழ்
N.சத்தியவேந்தன்
B.A.(HONS) Tam.SPL M.PHIL Jaffna,
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(C/6242)(6.16.12)

## A/L பரீட்சை முடிவுகளின் பின்னர்......

சித்தியடைந்தவர்களோ, சித்தியடையாதவர்களோ வெளிநாட்டில் கல்வியைத் தொடர விரும்பினால்....
விசா பெறத்தேவையான ஆங்கிலக்கற்கை நெறி
**IELTS புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**சனி 09.02.2013 பி.ப. 2 மணி**
நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, சைப்பிரஸ், மலேசியா, பலிறிஸ், லிதுவேனியா நாடுகளுக்கான விசா ஆலோசனைகள்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016
எல்லா நாள்களும் காலை 8.30 - இரவு 6.30 வரை திறந்திருக்கும் (29170)(10.6.7)

## A/L பரீட்சை முடிவுகளின் பின்...
## வழி தேடும் மாணவர்களிற்குரிய திசை காட்டியின் வெளிநாட்டுக் கல்வி தொடர்பான இலவச வழி காட்டும், விழிப்புணர்வுக் கருத்தரங்கு

விடயதானங்கள்:-
* A/L, சித்தியடைந்தவர்கள்/ சித்தியடையாதவர்களிற்குரிய ஆலோசனை
* வெளிநாட்டுக் கல்வி தொடர்பாக எம்மவர்கள் ஏமாற்றப்படும் வழிகள் - ஏமாற்றத்தை தடுப்பதற்கான வழிமுறைகள்
* படித்துக் கொண்டே உழைக்கலாமா?
* பிற நாட்டில் கல்வி பயில அவசியமானவை எவை?
* அவசியமான வினாக்களுக்கு - உரிய பதில்கள்

இடம்:- திசைகாட்டி குழு தலைமைக்காரியாலய கேட்போர் கூடம். 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
காலம்:- 10.02.2013 ஞாயிறு மு.ப 10 மணி
வளவாளர்:- வடமராட்சி மைந்தன் திரு.J.ரெட் B.SC (Hons) University of West of England.
முற்பதிவு முக்கியம்:- 0212219016 என்ற தொலைபேசி மூலம் முற்பதிவு செய்யவும்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(29169)(6.7.11)

## ஏராளமான வேலை வாய்ப்புக்கள்

எழுது வினைஞர்
கணக்காளர்
களஞ்சியப்பொறுப்பாளர்
வெளிக்கள உத்தியோகத்தர்
கனரக/வாகன ஓட்டுநர்
விற்பனைப் பிரதிநிதி
ரொபி,கச்சான் அல்வா,எள்ளுருண்டை போன்ற இனிப்புவகை செய்வதில் அனுபவமுள்ளோர் மற்றும் பயிலுநர்/
பொதியிடுவோர் மிக்சர் செய்வதில் முன் அனுபவமுள்ளோர்
ஸ்கிரீன் பிறிண்டிங் வேலையில் அனுபவமுள்ளோர்
வெல்டிங் மற்றும் மரத்தளபாடம் செய்வோருக்கான வேலை வாய்ப்புக்கள் நிறைய உண்டு.
தகுதிக்கேற்ற அதிகபட்ச சம்பளம் பெறலாம்.
விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.
காலை 9.00 மணிக்கு முன் அல்லது மாலை 4.30 மணிக்குப்பின்.
(29180)(8.6.16)
முகவரி:முகாமையாளர்
பாரதி இண்டஸ்ற்றீஸ்
இல.19 சம்பியன்லேன்,
கொக்குவில்
0774014328

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதிக்கு இரவுபகல்(இராப்பகல்) பணியாற்றக் கூடிய பணியாளர்கள் தேவைப் படுகிறார்கள். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம்.
தொடர்பு
இல.12, சிவகுருநாதர் ஒழுங்கை கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்
0710456456, 0718695695
(C/6245)(14.16.12)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.